தென்மொழி

எத்துணை நாள் போராட்டம்?

மூத்தமிழை மீட்பதுவோ பகைவர்முன்
வீழ்வதுவோ முடிவு செய்வீர்!
கத்துவதால் குரல்வற்றி உயிர்வற்றிக்
களைத்ததல்லால் பயனென் கண்டீர்?
செத்தழிவோம் என்றெண்ணி அஞ்சினிரோ?
தமிழ்மறவீர் ஏற்றம் எங்கே?
எத்துணைநாள் போராட்டம் நடப்பதிங்கே?
உயிர்குடிக்க எழுக நாடே!

MAY 1965

டை (வைகாசி)
பி. 1996.

ரூ 0
50 காசு

தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

தென்மொழி

தனித் தமிழ்
இலக்கியத் திங்களிதழ்

கெஞ்சுவதில்லை பிறர்பால் அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே

சுவடி 3 | வைகாசி தி. பி. 1996 (1965 மே) | ஓலை 4

தனித்தமிழ் நாடு!

"தனித்தமிழ் நாட்டு விடுதலைப் போராட்டத்தை நான் இன்னும் கைவிட்டு விடவில்லை. தென்னிந்தியர் மேல் வடநாட்டினர் இந்திமொழியை வலுக்கட்டாயமாகத் திணிப்பதானால், நாட்டு விடுதலைப் போராட்டத்தை மீண்டும் நான் தொடங்குவேன்" என்று அண்மையில் திராவிடர் கழகத்தலைவர் ஈ.வே. இரா. வேலூரில் பேசியுள்ளதாகச் செய்தித் தாட்களில் செய்தி வந்துள்ளது. செய்தி உண்மையோ பொய்யோ என்று தெளிவாகக் கூறமுடியாமற் போனாலும், பெரியார் உள்ளத்தில் இருப்பதாகக் கூறப்பெறும் விடுதலை உணர்ச்சி பெரும்பாலான தமிழர்களின் உள்ளத்தில் பெரிய புயல் வடிவாகக் காழ்த்துக் கொண்டிருப்பது உண்மையே! முதலமைச்சர் திரு. பக்தவத்சலத்தின் வல்லாண்மைத்தனத்தால் தமிழ்மொழிக் காப்புணர்வும் தமிழ் நாட்டு விடுதலை ஆர்வமும் கொழுந்து விட்டு எரியத் தொடங்கியுள்ளன. நூற்றுக்கணக்கான தமிழர்களைச் சுட்டுப் பொசுக்கிய அரசினரின் அடக்கு முறை வலுக்க வலுக்க, தமிழர்களும் தங்கள் கைகளை முறுக்கேற்றிக்கொண்டும், தங்கள் நெஞ்சங்களில் கனப்பேற்றிக் கொண்டும் வருகின்றனர் என்பதை வடவர் மறந்துவிடக் கூடாது.

சிறப்பாசிரியர்: புலவ, பண்டித ஞா. தேவநேயப் பாவாணர்.
பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.
உறுப்பாசிரியர்: தங்கப்பா, மு. சாத்தையா, செம்பியன்.
உரிமை, வெளியீடு: தாமரை, உலகமுதல்வி.

இந்திய நாட்டின் எல்லைச் சண்டைகளைச் சாக்காக வைத்துக் கொண்டு, இந்திய அரசினர் நாட்டு ஒற்றுமையை மிகவும் வலுப் படுத்துகின்றனர். மன ஒருமைப் பாட்டாலன்றிச் சட்டத்தாலும், கடுமையான அடக்குமுறைகளாலும் நாட்டில் ஒற்றுமையை உண்டாக்கிவிடலாம் என்று கருதுவதுதான் நமக்கு வியப்பாக விருக்கின்றது. பாதுகாப்புச் சட்டம் என்ற ஒரு சட்டம் இவ்வொற்றுமையை வலுப்படுத்தும் எல்லா அடக்கு முறை நடவடிக்கைகளுக்கும் துணையாக நிற்கும் ஒரு சட்டம். வெளி நாட்டுத் தொடர்பில் நாட்டின் பொதுக்கருத்துக்கு மாறாக எவரேனும் நாட்டை எதிரி நாட்டுக்குக் காட்டிக் கொடுக்க முற்படின், அவர்தம்மை நாட்டின் உட்பகையாகக் கருதுவது இயற்கையே. அப்படி உட்பகையாகக் கருதப்பெறுவார் மேல் தண்டம், சிறை முதலிய கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதும் இயற்கையே! ஆனால் அத்தகையதொரு சட்டத்தை வைத்துக் கொண்டு இந்திய நாட்டை வேட்டெஃகத்தால் ஒற்றுமைப் படுத்த நினைப்பதும், அவ்வாறு ஒற்றுமைப் படுத்தும் முயற்சியில் தலையாயதாக இந்திமொழியை நாடு முழுவதும் ஆட்சிமொழியாகச்செய்ய முற்படுவதும், அதன்பொருட்டுப் பிற மொழிகளின் இயற்கை உரிமையைப் பறிப்பதும், பிறமொழிகள் பேசும் மக்களின் தன்னுரிமையான எண்ணங்கட்கு மாறாக நடப்பதும், மீறினால் அடக்க நினைப்பதும், அதையும் மீறுவ ராயின் சிறைப்படுத்திக் கடுங்காவல் தண்டங்களை வழங்குவதும் மக்களுரிமை அரசாட்சி அமைப்புக்கே மாறான செயல்களாகும். இத்தகைய செயல்களால் அரசினர் எதிர்பார்க்கும் நாட்டு ஒற்றுமைக்கும், பாதுகாப்புக்கும் மாறாக உள்நாட்டுக் குழப்பங் களும், ஒற்றுமைக் குலைவுந்தாம் ஏற்படும் என்பதைத் தொடக்க நிலை அரசியலறிவு வாய்ந்தவன் கூட எளிதில் புரிந்து கொள்ளுவான்.

இந்நிலையில் அரசினர் தாம் கொண்ட விடாப்பிடியான நடவடிக்கைகளை மேலும் மேலும் வலுப்படுத்திக் கொண்டுள் ளனர் என்பதை, ஆங்காங்கே மேற்கொள்ளப்பெறும் கடுமையான அடக்குமுறைகளைக் கொண்டு திட்டவட்டமாக உறுதிப்படுத்தலாம். இந்நடவடிக்கைகளுக்கு முதற்படியாக மக்களின் மொழி உரிமைகளைப் பற்றிப் பேசும் தாளிகைகள் கட்டுப்படுத்தப்பெற்று வருகின்றன. மக்களின் கருத்துகளைத் தெளிவாக உணர்த்தும் செய்தித்தாள்கள் ஒருநாட்டின் அரசியல் அமைப்புகளை விளக்கிக் காட்டும் காலக் கண்ணாடிகள் ஆகும். செய்தித் தாள்கள் அவ்வப்பொழுது அரசினரின் உள்நாட்டு நடவடிக்கைகளைக் கண்டித்துப் பேசுவது, விளையப்போகும் விளைவுகளை ஆட்சிப் பித்தம் தலைக்கேறிய அரசினர்க்கு எதிர் காலத்தை உணர்த்தும் முன்னறிவிப்பாகும். அதற்காக அச் செய்தித் தாட்களின் மேல் அடக்குமுறைகளைப் பாய்ச்சுவது,

உண்மையாக ஏற்பட்டிருக்கும் மக்களின் உள்ளக் கிளர்ச்சிகளைப் புதைத்துவிடுவதாகாது. அடக்கு முறைகளாலும் கடுந் தண்டங்களாலும் உரிமையுணர்வு மேன்மேலும் கிளர்ந்தெழுமே யொழிய என்றும் அடங்கி விடாது. இதனை மக்களின் வரலாறு அறிந்த யாவரும் தெள்ளிதின் உணர்வர். வெளிநாட்டு அரசியல் போக்கிற்காக உள்நாட்டு அரசியல் நடவடிக்கைகளைத் தடுத்துவிட முடியாது. ஊரில் கொள்ளைக்காரர்கள் மிகுந்து விட்டார்கள் என்பதற்காக, வீட்டிற்குள் எவரும் பசி என்று கிளர்ச்சி செய்யாமல் இருத்தல் வேண்டும் என்று கட்டுப்பாடு செய்வது மடமை. பசி முதலிய தேவைகள் இருந்தாலும் அவற்றைப் பொருட்படுத்தக் கூடாது என்று நெறிமுறைகள் கூறுவது அரசியல் அறம் ஆகாது. இன்னும் சொன்னால் வெளி நாட்டு அரசியல் தொடர்பைச் சரிகட்ட உள்நாட்டின் உரிமையுணர்வுகளை விட்டுக்கொடுக்கும் மனப்பாங்குடன் அணுகுவதும், தேவையானால் மக்களின் உள்ளார்ந்த உரிமையெழுச்சிகளை மதித்துப்போற்றி அதற்காவனசெய்வதுமே இந்நெருக்கடியான நேரத்தில் அரசினர் கடைப்பிடிக்க வேண்டிய முறைகளாகும். இதைவிட்டு விட்டு, மக்களின் உரிமை உணர்வுகளையே தவறென்றும், கண்டிக்கத்தக்கனவென்றும் கூறி அடக்கு முறைகளால் அவற்றை ஒடுக்க நினைப்பது, உட்புண்ணை மூடிமறைத்து விட்டு, வெளிப்புண்ணுக்கு மருந்திடும் அறியாமைச் செயலே. காலப்போக்கில் உரிமையுணர்வுகளை மதியாத அரசினரையும் மக்கள் மதியார். அவ்வரசினர்தம் வெளிநாட்டுத் தொடர்பான நடைமுறைகளுக்கும் (அவை சரியாகவே இருப்பினும்) அவர் தம் ஒத்துழைப்பை நல்கார். இனி, ஒத்துழைப்புத் தராமற் போவதுடன். வெளிப்பகையைப் புறக்கணித்து விட்டுத் தம் உரிமைக் கிளர்ச்சிகளையும் வெளிப்படையாகவே நடத்த முற்படுவர். தமக்கு மறுக்கப்படுகின்ற உரிமைகளை வைத்துக் கொண்டிருக்கும் அரசின் உடைமைகள் எதிரிகளால் தாக்குறும் பொழுது அதைப்பற்றித் துளியும் கவலை கொள்ளார். இந்நிலையில் அரசு கடைப்பிடிக்க வேண்டிய-வழங்கவேண்டிய உரிமை முறைகளை கடைப் பிடிக்காமலும் வழங்காமலும் இருப்பதுடன் எதிரியை முறியடிக்க ஒற்றுமையாக இருங்கள் என்று மருட்டிக் கொண்டிருப்பது எவ்வளவு பெரிய மடமை என்பதை அரசினர் காலப் போக்கில்உணரத்தான் போகின்றனர்.

இந்தச் சூழ்நிலையின் முதல் விளைவுதான் நாம் இக்கட்டுரைத் தொடக்கத்தில் பெரியார் ஈ. வே. இரா. பேசியதாகக் கூறிய கூற்று. நாட்டு விடுதலை உணர்வையும், தம் கட்சி நோக்கங்களையும் சிறிதுகாலம் மறந்து விட்டு, ஆளுங் கட்சியான பேராயக் கட்சிக்குத் தம் முழுத்துணையையும் ஆற்றலையும் நல்கிய பெரியார், தம் மறந்து போன எண்ணங்களை மீண்டும் நினைவுக்குக் கொண்டு வருவதும், அதன் வழியே தாம் இனி

நடக்க வேண்டும் என்று கருதுவதும் அரசினர்க்கு ஏற்பட்ட இரட்டை இழப்பே! ஒன்று பெரியாரின் பெருந்துணையைப் பேராயக் கட்சி இழப்பது. இரண்டு, அவரின் வலிந்த அரசியல் எதிர்ப்பைத் தாம் ஏற்படுத்திக் கொள்வது. இந்த இருவகையான இழப்பும் அரசினரின் ஆட்சிக் கப்பலில் விழுந்த இரண்டு ஓட்டைகளாகும். அரசினர் இவை போன்ற ஓட்டைகளுக்கு மதிப்புக் கொடுத்தே ஆகல் வேண்டும். இல்லெனில் அவர்தம் ஆட்சிக் கப்பல் மூழ்கடிக்கப்படும் என்று எச்சரிக்கின்றோம்.

இனி, பெரியார் நடத்தப் போவதாகக் கூறும் தமிழ் நாட்டு விடுதலைக் கிளர்ச்சியை அவர் துணிந்து நடத்துவாரோ இல்லையோ என்ற ஐயப்பாடு முறையே ஆட்சியினர்க்கும் மக்களுக்கும் எழாமல் இல்லை. ஒருவேளை ஆட்சியினர்க்கு அவ் ஐயப்பாடு ஊதியமாகவும் படலாம். ஆனால் மக்களைப் பொறுத்த வரையில், பெரியாரின் புரட்சியுள்ளத்தைப் பார்க்கினும் வலிவான, மேலான ஒரு பெருத்த புரட்சி மனப்பான்மை உருவாகிச் செயல்படப் போவதை எவரும் தடுத்து நிறுத்திவிட முடியாது. உண்மையிலேயே இந்தியைப் பல வகையான எதிர்ப்புகளுக் கிடையிலும் வடநாட்டு அரசினர் வலிந்து புகுத்துவதை மேற்கொள்ளுவார்களானால், அவர்தம் முடிவு இரங்கத்தக்கதாகவும், எதிரிகளால் பழித்துரைக்கப் படுவதாகவும் இருக்கும்என்று கணித்துக் கூறுகின்றோம். இந்தி எதிர்ப்பை முறியடிக்க மக்கள் மேற்கொள்ள விருக்கும் பெரும் புரட்சிக்கு முதல் நடவடிக்கையே அண்மையில் நடந்த மாணவர் புரட்சியாகும். இம் மாணவர் புரட்சியால் அரசினர் மேற்கொள்ள வேண்டிய மாறுதல்கள் விரைந்து மேற்கொள்ளப் பெறுவிடில், மக்கள், குறிப்பாகத் தென்னாட்டு மக்கள் கிளர்ந்தெழப் போவது கல்மேல் எழுத்துப் போன்ற உண்மை! இந்த உண்மை நடந்து தீரவேண்டிய-கட்டாயம் நடக்கப்போகின்ற உண்மை.

தமிழ் நாட்டு அரசியலைப் பொறுத்த மட்டில், வடநாட்டு அரசினரின் கைப்பாவையாக இங்குள்ள முதலமைச்சர் இயங்கிக் கொண்டிருப்பது வெள்ளிடைமலை. மேலும் தமிழக முதலமைச்சர் இருவகையான குற்றங்களைத் தம்மையறியாமல் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றார். அவை, வடநாட்டாரின் நடைமுறை ஆட்சி முறைகள் தமிழ்நாட்டு மக்களுக்குக் கேடு பயப்பன என்று தம்மளவில் அரசினர்க்கு உணர்த்தாமலிருப்பதும், இம்மாநில மக்களிடத்தே வளர்ந்து வரும் மனக்கசப்புகளை ஆளுநரிடம் தக்கமுறையில் எடுத்துக் கூறாமல் மூடிமறைத்துத் தம் பதவிப் பொறுப்பை நீட்டித்துக் கொள்வதுமாகும். தாம்எவ்வாறாகிலும் பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி, மக்களின் உரிமை உணர்வுகளைக் கட்டுப்பாடு செய்து விடலாம் என்று உறுதி பூண்டிருப்பதும் அவரின் அறியாமையே! இவ்வகையில் ஆங்காங்குள்ள தமிழ்ச்செய்தித்

16ஆம் பக்கம் பார்க்க.

பாரதிதாசன் நினைவு மாலை.

நாளையும் நீ வாழ்வாய்!

செந்தமிழ்சேர் நல்லுருவே! முத்தமிழ்வாழ் நெஞ்சே!
செத்திருந்த தமிழினத்தை நல்லுணர்வால் கூட்டி
எந்தமிழால் உயிரூட்டி எழுந்துலவ விட்ட
இணையற்ற பாவரசே! ஏற்றமிகு குன்றே!
தந்தபெரும் பாக்களினால் தமிழினத்தார் கொண்ட
தணிப்பறியா வேட்கையினைத் தணித்துயர்ந்த [வேந்தே!
எந்தநிலை வேற்பதனால் உன்நினைவு சாகும்?
எத்தனைநாட் சென்றிடினும் நினைக்கில்உளம் வேகும்

தமிழ்க்கின்பம் சேர்த்தாயே அதையெண்ணு வோமா?
தமிழ்ப்பகைமுன் ஒருதனியாய் நின்றுமொழிப் [போரைச்
சிமிழ்க்காமல் நடத்தினையே அதைநினைந்தே உள்ளம்
சிலிர்ப்போமா? செழுந்தண்வாய் தமிழ்மணக்கப் [பேசிக்
குமிழ்ச்சிரிப்பால் கவர்ந்தனையே! அதனை நினைப் போமா?
குலைவதிலா வல்லுரத்தோ டுலவியவெம் புலியே!
தமிழ்ப்பொழிலே! உணர்வூற்றே! சொற்சுவையே! பெய்த
தண்டமிழ்த்தேன் பாமழையே! எங்ஙன்மறப் [போமே

பெருந்துன்பம் வாய்த்திடினும் வாய்மையறம் தாழாப்
பீடுறநீ வாழ்ந்தனையே அதனை நினைப் போமா?
விருந்தென்று பெருந்தமிழை நெஞ்சஇலை இட்டு
வேண்டுமட்டும் வழங்கிய நீ, பசிதீரத் தீர
இருந்தின்னும் வழங்காமற் போயினையே அஃதை
எண்ணி எண்ணி உடலுயிரும் ஏங்கிடநிற் போமா?
அருந்துன்பம் தமிழ்மொழிக்கே வாய்த்ததடா இக்கால்!
ஆர்த்தெழுந்த இடிக்குரலோ டணையிடுவார் யாரே?

போற்றுகிலாத் தமிழரிடை தமிழ்போற்றி வாழ்ந்தாய்!
பொய்மாந்தர் கூட்டத்திடை மெய்ப்பணியில்
[ஆழ்ந்தாய்!
ஆற்றுகிலாத் தமிழர்துயர் துடைத்திடத்தொண் டாற்றி,
ஆழ்ந்தகன்ற இருளுளத்தில் தமிழ்விளக்கம் ஏற்றி,
வேற்றினத்தார் தமிழழிக்க, வெகுண்டெழுந்து நின்றாய்!
விறல்பெறவே பகைவர்தமின் உடலுயிரைத்
[தின்றாய்!
நேற்றிருந்தாய்; இன்றிருப்பாய்; நாளையும் நீ வாழ்வாய்!
நெஞ்சிருக்குந் தமிழினத்தின் நினைவினில் நீ
[ஆழ்வாய்!

–துரை-மாணிக்கம்

வினைபுரிதலே கடன்!

எதுகொல் உள்ளும் ஐய,எம் நெஞ்சே!
முடிவில் பணியோ பலவே; தொடுநர்
மயல்தீர் நறுந்தமிழ் உளம்கொள முரன்றே
உயிர் தோய் உணர்வின் பெருந்தேன் இழைத்த
இருந்தமிழ் அரும்பணி இடைகெடப் போயினை!
பொருந்தாப் பொய்ம்மையர் புலவரென் றூர்த்தனர்
இருளகம் புகுந்த தமிழகம் வடவர்
மருளடர் ஆள்கைச் சேற்றுள் ஆழ்ந்தது.
உரம்புணர் குரலால் நீமுறுக் கேற்றிய
நரம்புகள் தளர்ந்த! நண்ணிய தடிமை!
உறங்கியோர் எழுப்பிய நின்கை ஓய்தலின்
கிறங்கப் படுத்தவர் மறுதுயில் புக்கார்!
துறைதொறும் துறைதொறும் புரைமலிந் தன்றே!
ஒருதனி நின்றியாம் உஞற்றுங் கொல்லோ?
வகைவகை அறுத்து மருந்திடுங் கொல்லோ!
குற்றம் கழீஇப் புதுக்குங் கொல்லோ?
முற்றவும் அழித்து, வித்துங் கொல்லோ?
அன்றியும்
மூவா எந்தமிழ் உயிரென உலவுநின்
சாவாப் பெருநிலை உள்ளுங் கொல்லோ?
நிற்புகழ் இயம்பியும், நின்பா வுவந்தும்
சொற்புகழ் அலங்கல் சூட்டவும் பொழுதிலம்;
நனிபெரி தாகுநின் பணியே,
வினைபுரி தகவே எம்முறு கடனே!

– ம. இலெ. தங்கப்பா.

நினைவால் வினை முடிப்போம்!

தமிழ்க்கோர் இடர்புரிவார் தலைக்குப் புரியச்
சிமிழ்க்கா விழிகள் சிவந்திருந்த போர்மறவா!
இந்தியென்றால் 'நாயை'த் துரத்தென் றெழுந்தறைந்த
வெந்திறலால் மாற்றார் வெலவெலக்கும் மாவலியே!
ஏங்கிக் கிடந்த இளைஞர் தமிழ்உலகு
பாங்காகப் பாடப் பயிற்றுவித்த ஆசிரிய!
தூங்கிக் கிடந்த தமிழன் கொடுவாளைத்
தாங்கித் திறம்காட்டச் சன்னக் கருங்குயிலின்
பாட்டில் மறங்குழைத்த பாவேந்தே! செந்தமிழ்த்தாய்
நாட்டு விடுதலைக்கு நன்றே வழிகாட்டி
வாழ்வாங்கு வாழ்ந்த பெரியோய்! தமிழினத்தின்
தாழ்வூன்றிப் போகாது தீர்க்கும் வகையில்
பகுத்தறிவுப் பண்பென்னும் பன்னலத்தைப் பாவால்
வகுத்துத் தரத்தமிழ்க்கு வாய்த்த புரவலனே!
சங்கொலித்தும், ஏற்றம் இறைத்தும், முரசறைந்தும்,
வெங்குருதி யாற்றில் விளையாடி யும்,கதிர்ச்சீர்த்
தென்றல் மலைஆழி, சீர்கான் அழகிலெலாம்
ஒன்றிச் சிரித்தும் உயிரிலக்கி யம்படைத்த
நின்னை நினைந்தெங்கள் நெஞ்சம் கலங்குகிறோம்!
கண்ணீர் உகுப்பதலால் காணும் வகையறியோம்!
உன்றன் நினைவால் உயர்வோம்; வெகுவிரைவில்
வென்றே முடிப்போம் வினை!

– மகிபை-பாவிசைக்கோ.

இப்படி உயர்வே!

என்னைப் பெற்றார்; என்னை வளர்த்தார்;
கண்ணெனக் காத்தார்; கல்வியிற் சேர்த்தார்;
சென்றேன் பலவூர், அறிஞரை அடுத்தேன்;
பொய்ம்மையை அறிந்தேன், புதுவைப்பா வேந்தரின்
பொய்ம்மை இல்லா மெய்ம்மையை உணர்ந்தேன்!
இந்நாள் மட்டும் அதனையே எங்கும்
அசைக்கொணாப் புகழாய் இசைத்தென் நாவால்
அறம்மொழிந் திடவே அனைவரும் உணர்வார்
ஆதலால்,
நாமதை எண்ணி உய்ந்திட வேண்டும்
எப்படியா யினும்நமக் கிப்படி உயர்வே!

– திருக்குறள் பெருமாள்.

நீயெங்கே?...

செந்தமிழே! குயிலே! நின் இசையெங்கே? மன்றில்
செம்மாந்த பீடுநடைச் செலவெங்கே? அஞ்சா
வெந்திறத்த நெஞ்சுடைய உரமெங்கே? உண்மை
விடுதலைக்கு மறம்விளைத்த நீயெங்கே எங்கே?
செந்தமிழே உயிரென்ற உயிர்ப்பெங்கே? மாற்றார்
செருக்கழிக்கும் நெருப்புவிழி நோக்கெங்கே? நேர்ந்த
எந்தமிழர்ப் படைமுகத்த முரசமெங்கே? கூர்த்த
இருங்கொடுவாள் எமக்களித்த நீயெங்கே எங்கே?

நற்றமிழைக் காத்தபெரும் அரணெங்கே? உண்மை
நடுவகன்றார் நடுங்கவைக்கும் குரலெங்கே? வீணே
கற்றவராய்த் தருக்குநரை வீழ்த்தும்நா வெங்கே?
கதிரைப்போல் உணர்வளித்த நீயெங்கே எங்கே?
முற்றியதீஞ் சுவைபோலும் முகிழ்த்ததமிழ்ப் பாட்டு
மூண்டெழுந்த உணர்வுமழை உயிரோட்டம் நெஞ்சிற்
பற்றியனல் வீசுதையா! பதைக்குதையோ உள்ளம்!
பாவேந்தே நினைநினைந்தே அழுங்கிடுமிந் நாடே!

– பாவலர்-எழிலேந்தி.

நன்றினிச் செய்க!

அரிமா விழிநோக் ககல்நெடுந் தோற்றம் அடக்கலருங்
கரிமா நினைவினைக் கூட்டிடும்! நம்மில் கயவரெனும்
நரிமா தமக்கொரு கூற்றென நின்றோன்! நமக்களியான்;
பரிமா எனப்பறந் தேகினன்; ஆண்டும் பறந்ததுவே!

வடக்கனுக் கிந்தி; மறத்தமிழ் மக்கள் வழக்கினுக்கேன்?
இடக்கனுக் கிங்கே இடமிலை! என்றே எழுதிவந்த
தடக்கையன் பாரதி தாசனின் போக்கில் தமிழ்க்குலத்தீர்
நடக்கையைக் காட்டுக; சென்றவன் நாளில்
நவின்றனனே!

மொழியினை வாழ்த்தி வளர்த்தவன்; தில்லி முறையிலரால்
பழியினை ஏற்றவிந் நாட்டினுக் கின்று பதைக்கவரும்
அழிவினை எண்ணிக் கனன்றவன், அன்னான்
வழிதொடர்க!
இழிவினை நீக்க விடுதலை காண்க, எனதுலகே!

என்றினி அன்னான் முழக்கினைக் கேட்பன்? இனித்திடவே
என்றிவன் பாடும் புதியநற் பாடல் எழுந்துலவும்?
மன்றினிக் கூடுக; செந்தமிழ் மக்கள் மலைவகற்றி
நன்றினிச் செய்க மொழியொடு நாடு நலமுறவே!

– இளஞ்சித்திரன்.

புதிர்க் கதிர் — (X-Ray)

பழ. முருகேசன், பி.இ.

எதிர் மின்னணுவியல் துறையிலே பல ஆண்டுகட்குமுன் கண்டுபிடிக்கப்பட்ட பல உண்மைகள், நம் வாழ்விலே மாற்றங்களை ஏற்படுத்தி வாழ்க்கையில் இன்றியமையாதனவாக அமைந்து விட்டன. அப்படிப்பட்ட பல உண்மைகளுள் 'புதிர்க் கதிர்' பற்றி ஈண்டு அறிவோம். இப் புதிர்க் கதிர் பற்றிய உண்மைகளை 1895 - ஆம் ஆண்டு இராண்ட்சன் (*Roentgen*) என்னும் செருமானிய இயற்கை மெய்ந்நூல் பேராசிரியர் தற்செயலாகக் கண்டுபிடித்தார். இவர் ஒருநாள் ஒரு மிசைப்பலகை மீதில் எதிர்மின்னிகள் பற்றிய ஆய்வு ஒன்றை நடத்தினர். ஒரு மீட்டர் நீளமுள்ள கண்ணாடிக் குழாயை எடுத்துக்கொண்டு அதன் இருமுனைகளிலும் அலுமினியத்தினுலான இரு தட்டுகளை வைத்தார். ஒன்று நேர்மின்வாயாகவும் (*Positive*) மற்றென்று எதிர்மின்வாயாகவும் (*Negative*) இருக்குமாறு செய்தார். பின், நேர்மின்வாய்க்கும் எதிர்மின் வாய்க்குமிடையே பெரும் அளவிற்கு மின் அழுத்தத்தை ஏற்படுத்தினர். பிறகு, அக்குழாயினுள் இருந்த காற்றின் அழுத்தத்தைப் படிப்படியாகக் குறைத்து வந்தார். அழுத்தம் 0·01 மில்லி மீட்டர் இதள் (*Mercury*) அளவாக ஆகிய பொழுது, அக் கண்ணாடிக் குழாய்ச் சுவர் முழுவதும் ஒருவகை ஒளி உண்டாவதைக் கண்டார். அழுத்தம் மேலும் குறைக்கப் படுகையில் அவ்வொளி மறைந்து விட்டது. பின்பு அக் கண்ணாடிக் குழாய்க்குச் சில அடி தொலைவில், 'பேரியம் பிளாட்டோ சயனைடு' திரையை வைத்து, கண்ணாடிக் குழாயைக் கருநிறத்தாளால் மூடினர். ஆயினும் அத்திரையில் ஒளி தென்பட்டது. அத் திரை கண்ணுக்குத் தெரியாத குற்றலை ஒளியைக் கண்ணுக்குத் தெரியும் நெட்டலை ஒளியாக மாற்றும் இயல்புடையது. ஆகவே, அக் கண்ணாடிக் குழாயினுள் வெற்றிடத்தை உண்டாக்கி, மிகுந்த மின் அழுத்தத்தை ஏற்படுத்தியதனல், கண்ணுக்குத் தெரியாத ஒளிக்கதிர்கள், அக் குழாயினின்று வெளிவந்தன. ஆய்வு முடிந்தவுடன் எதையோ எடுப்பதற்காகத் தம் மிசைப்பலகையைத் திறந்தார். அதனுள் இருந்த 'ஒளிப்படத் தட்டு' பழுதுபட்டிருக்கக் கண்டார். அதைப் பற்றிய உண்மைகளை மேலும் அறிய முற்பட்டார். மேலே கூறிய கதிர்பற்றிய உண்மை முதலில் ஒன்றும் தெரியாதிருக்கவே, அக் கதிர்க்குப் 'புதிர்க் கதிர்' எனப் பெயரிட்டார்.

புதிர்க் கதிர் தோற்றுவிக்கும் முறை:

விரைந்து வரும் எதிர்மின்னிகளைத் திடீரெனத் தடுத்து நிறுத்தினால், எதிர்மின்னிகள் கொண்டிருக்கும் இயக்க ஆற்றல் மின்காந்தக் கதிர்களாக மாற்றப்படுகிறது. இக்கொள்கையைக் கொண்டுதான், 'புதிர்க்கதிர்' தோற்றுவிக்கப் படுகிறது ஆதலின் அப்புதிர்க்கதிர் தோற்றுவிக்கும் கருவி, கீழ்க்காணுபவைகளைக் கொண்டதாய் இருத்தல் வேண்டும்:-

(அ) நிறைய எதிர்மின்னிகளை வெளிவிடும் எதிர்மின் வாய் ஒன்று இருத்தல் வேண்டும்.

(ஆ) எதிர் மின்னிகள் விரைந்துவரும் பாதையில் அவைகளைத் தடுத்து நிறுத்த, நேர்மின்வாய் ஒன்று இருத்தல் வேண்டும்.

(இ) எதிர் மின்னிகளின் விரைவைக் கூட்டவும், மிகுந்த அளவு எதிர் மின்னிகளை உண்டாக்கவும், நேர்மின்வாய் எதிர் மின் வாய் இவற்றிற்கிடையே மிகுந்த அளவு மின் அழுத்தம் இருத்தல் வேண்டும்.

(ஈ) காற்றின் அழுத்தம் குழாயினுள் குறைவாக இருத்தல் வேண்டும்.

இப்புதிர்க்கதிரை ஆக்கித்தரும் குழாய்கள் இருவகைப் படும்.

(க) வளிக் குழாய் (*Gas Tube*)

(உ) கூலிட்சு குழாய் (*Coolidge Tube*)

க. வளிக்குழாய்:

படத்திற் காட்டிய வளிக்குழாயின் எதிர்மின்வாய் 'இ' உட்புறம் குழிந்ததாயும், நிறைய எதிர்மின்னிகளை மிகுந்த விரைவுடன் வெளியேற்றும் திறமை யுடையதாயும் உள்ளது. அதற்கு நேர் எதிரே, எதிர் மின்னிகளைத் தடுத்து நிறுத்தும் தட்டு 'ஆ' வைக்கப்பட்டுள்ளது. இது 'டங்சுடன்' என்ற மாழையால் (*Metal*) செய்யப்பட்டது. இது நேர்மின்வாய் 'அ' வுடன் வெளிப்புறமாக இணைக்கப் பட்டுள்ளது இம் மாழைத் தட்டு 'ஆ' குழாயின் அச்சிற்கு 45° சாய்வாக உள்ளது. நேர்மின்வாய் தனியாக இருப்பதனால் செயல் திறமை மிகுதியாக இருக்கும் மின்வாய்க்கிடையே மின்னழுத்தம் மிகுந்து (ஏறத்தாழ 30,000



முதல் 1,00,000 ஒல்ட்) இருக்குமாறு செய்ய வேண்டும். குழாயினுள் காற்றின் அழுத்தம் 0.001 மி. மீட்டர் இதள் அளவிற்கு இருத்தல் வேண்டும்.

இயங்கும் முறை:

மின்அழுத்தம் படிப்படியாக உயர்ந்து கொண்டே போகச் செய்தால் குழாயினுள் இருக்கும்வளி, கூட்டணுக்களாக முதலிற் பிரிகிறது. பிறகு, எதிர்மின்வாயினின்று ஏராளமான எதிர் மின்னிகள் மிக விரைவோடு வெளியேற்றப்படுகின்றன. இவை ஒரே நேர்க்கோட்டில் செல்லும் இயல்புடையவை. மிக விரைவுடன் செல்லும் இவ்வெதிர்மின்களை, 'டங்சுடனி' னுலான தட்டு தடுத்து நிறுத்துகிறது. இதனுல் எதிர்மின்னிகளின் இயக்க ஆற்றல் மின்காந்தக் கதிர் வீச்சாக மாற்றப் படுகிறது. இக்கதிரையே 'புதிர்க்கதிர்' என்றழைக்கிறோம். இக்குழாய் நெடு நேரம் வேலை செய்தால், இக்குழாயினுள் இருக்கும் வளி அணுக் கூட்டங்கள் குறைகின்றன. இதனுல் புதிர்க் கதிரும் தன் அளவிற் குறைகிறது. இதைத் தவிர்க்க, உ, ஊ ஆகிய இவ்விரு மின்வாய்களும் அ, ஆ இவையுடன் முறையே இணைக்கப் படுகின்றன. அ, ஆ இவை யிடையே இருக்கும் மிகுந்த மின் அழுத்தத்தினுல் உ, ஊ இவற்றிற்கிடையே ஒரு தீப்பொறி உண்டாகிறது. இதனுல் உ, ஊ ஆகியவை வெப்பமுற்று முன் போலவே மிகுந்த வளிக் கூட்டணுக்களைக் கொடுக்கின்றன. எனவே, இக்குழாய் மீண்டும் வேலை செய்யத் துவங்குகிறது இம் முறையில் உள்ள குறை யாதெனில், புதிர்க் கதிரின் தன்மையையும் அளவையும் குறைக்கவோ கூட்டவோ இயலாமையே ஆகும்.

உ. கூலிட்சு குழாய்:

படத்தில் காட்டியிருக்கும் முறைப்படி, இக் கண்ணுடிக் குழாய் முதன் முதலில் 'கூலிட்சு' என்னும் அறிவியல் வல்லுநரால் கையாளப்பட்டது. 'அ' எனக்காட்டப்பட்டிருப்பது நேர்மின்வாய். இது 'டங்சுட' னினுல் செய்யப்பட்டது. 'ஆ, எனக் குறிப்பிடப்பட்டிருப்பது 'டங்சுட'னினுல் ஆன மாழைச்சுருள். இஃது எதிர்மின் வாயுடன் இணைக்கப்பட்டுளது.



இருமின் வாய்களுக்கு மிடையே மிகுந்த மின்னழுத்தத்தை ஏற்படுத்தியவுடன் (ஏறத்தாழ 50,000 முதல் 2,00,000 ஒல்ட்) 'ஆ' என்னும் மாழைச் சுருளினின்று நொடிக்கு 1,86,000 கல் விரைவோடு

எதிர்மின்னிகள் வெளிவருகின்றன அவைகளை 'அ' தட்டு தடுத்து நிறுத்துகிறது. அதனால் 'புதிர்க்கதிர்' உண்டாகிறது. நேர்மின்வாயை மிகுந்த வெப்பம் தாக்குமாறு செய்தல் கூடாது அதை எப்பொழுதும் குளிரச் செய்து கொண்டே இருக்க வேண்டும். நேர்மின்வாயினுள் குளிர் நீரைச் செலுத்தியும் அதன் வெப்பத்தைத் தணிக்கலாம். அதற்காகவே 'ஈ' அமைக்கப் பட்டுள்ளது. 'ஈ' என்பது வெப்பவெளியேற்றியாகும். முன் கூறிய குழாய் போன்றல்லாமல், இக்குழாயில் புதிர்க்கதிரின் தரத்தையும், அளவையும் கட்டுப்படுத்தலாம். மாழைச் சுருள் 'ஆ'வினுள் செல்லும் மின் ஆற்றலைக் கொண்டும், மின் அழுத் தத்தைக் கொண்டும் இவை கட்டுப்படுத்தப் படுகின்றன. ஆகவே, இக்குழாயே தற்பொழுது மிகவும் பயன்படுத்தப் படுகிறது.

புதிர்க்கதிரின் இயல்புகள்.

அ) கண்ணுக்குத் தெரியாது.

ஆ) ஒரே நேர்க்கோட்டின் வழியாகத்தான் செல்லும்.

இ) மின் காந்தக் கதிரானதால், இது காந்தப் புலத்தி னலோ, மின் மண்டலத்தினலோ தாக்குறுவதில்லை.

ஈ) எதிரொளி, ஒளிமுறிவு ஆகிய விதிகளுக்குப் பணியும்.

உ) இதன் விரைவு நொடிக்கு 1,86,000 கல்.

ஊ) இது மிகக்குறைந்த அலை நீளத்தையும், மிகுந்த அதிர்வெண்ணையும் உடையது.

எ) ஒளிப்படத் தட்டைக் கறுப்பு நிறமாக்கக் கூடியது.

ஏ) உயிருள்ள அணுக்களைச் சிதைக்கும் ஆற்றல் கொண்டது.

ஐ) 'பேரியம் பிளாட்டோ சயனைடு' போன்ற பொருள் களின்மேல் பட்டால், ஒளி கிடைக்கிறது.

ஒ) வெவ்வேறு பொருட்களினல், வெவ்வேறு அளவாக உட்கொள்ளப்படுகிறது.

ஓ) பொருட்களைத் துளைத்துச் செல்லும் திறன் கொண்டது.

ஒளியுடன் இதன் ஒற்றுமை :

பல ஆய்வுகளினல், இக்கதிர் ஒளியுடன் பல இயல்புகளில் ஒத்திருக்கிறது என்று அறிவியல் வல்லுநர் மெய்ப்பித்துக்காட்டி யுள்ளனர்;

அ) இரண்டும் மின்காந்தக் கதிர்களே.

ஆ) இரண்டும் நேர்க்கோட்டின் வழியாகத்தான் செல்லும்

இ) ஒளிப்படத்தைக் கறுப்பு நிறமாக்குகின்றன.

நூல் நிறை. 'கல்லாடன்'

காளிதாசர் இயற்றிய 'மேகசந்தேசம்' விலை. உருபா. 2.50
தமிழாக்கம் :- க. ரா. சமதக்னி.
சாந்தி நிலையம் 9. சேணியம்மன் முதலி தெரு, சென்னை 21.

வடமொழியிற் காளிதாசர் இயற்றிய 'மேகசந்தேசம்' (மாரிவாயில்) சிறந்ததொரு பாவியமாகப் போற்றப் பெறுவது. பிரிவாற்றுமையை மனவியல் வழுவாதபடி, இயற்கை நலம் கனிய கற்பனையும் உருவகமும் பொதுள நுண்ணிய நயம்பல தோன்ற எடுத்தியம்பி மகிழ்வூட்ட வல்லது என்பர். இதனைத் திரு. சமதக்கனி பாடல் வடிவிலேயே தமிழாக்கித் தந்துள்ளார். இவர் அளித்துள்ள விளக்கவுரை, செய்யுள் விளக்கக் குறிப்புகள் வாயிலாக மூலநூலின் மேற்குறித்த சிறப்புகள்

(முன்பக்கத் தொடர்ச்சி)

ஈ) காந்த, மின்மண்டலங்களினல் தாக்குறுவதில்லை.
உ) விரைவு இரண்டிற்கு மொன்றே.
ஊ) எதிரொளி, ஒளிமுறிவு முதலான விதிகளுக்கு இரண்டும் பணிகின்றன.
எ) இவை ஓரிடத்தினின்று வேறிடத்திற்குச் செல்ல இடைப்பொருள் ஏதும் தேவையில்லை.

பயன்கள்:

புதிர்க்கதிர் மருத்துவம், அறிவியல், தொழிலியல் போன்ற அன்றாட வாழ்க்கைத்துறைகளில் பெரிதும் பயன்படுகின்றது. பெரிய அணைகளையும், பாலங்களையும் புதிர்க்கதிர்த்துணைக் கொண்டு ஆய்ந்தறிகின்றனர். விலை உயர்ந்த பொருட்களின் தரத்தைக் காணவும் இதைப் பயன்படுத்துகின்றனர். பொறியியலில் இதன் பணி குறிப்பிடத்தக்கது. வானூர்திச் சுழலிகள், குழாய்கள், மாழைகளிற் காணப்படும் காற்றுக் குமிழிகள் முதலியவற்றை ஆய்ந்தறிய இப்புதிர்க்கதிர் பயன்படுகிறது. எலும்புகளும், தசைகளும் வெவ்வேறு அளவில் இக்கதிரைத் தம்பால் ஈர்த்துக் கொள்வதால் இது மருத்துவத்தில் ஒரு மறுமலர்ச்சியையே உண்டாக்கியுளது எனலாம். மேற்கூறிய உண்மையால் மாந்தனின் உடலில் இப்புதிர்க் கதிரைச் செலுத்தி ஒளிப்படம் எடுத்தால், அம்மாந்தனின் எலும்புகளைமட்டும் அவ்வொளிப் படத்திற் காணலாம். இதனல் எலும்பு முறிவு, உடலினுள் சென்ற (உட்கொள்ளப்பட்ட) நாணயம் இவற்றைக் கண்டுபிடிக்கலாம் மேலும் என்புருக்கி நோய் உடையோரின் நுரையீரலைப் படம் எடுக்கவும், புற்று நோயை ஒழிக்கவும் பெரிதும் பயன்படுகிறது. புதிர்க்கதிர் பற்றிய பல உண்மைகளை இன்னும் அறிவியல் வல்லுநர் கண்டு பிடித்து வருகின்றனர். ஆய்ந்து காணக் காணப் புதிர்களை மிகுத்துக்கொண்டே அறிவியலை முன்னேக்கி அழைத்துச் செல்லும் இப்புடவிப் படைப்பின் பெருவியப்பை என்னென்பது!

பற்றிய செய்தி நமக்குத் தெரிவிக்கப்படுகின்றது. இப் பாவியத்தின் சிறப்பினைப் புலப்படுத்தவந்த பெயர்ப்பாசிரியர், "குறைபாடுடைய மாந்தரின் உள்ள உணர்வுகளே பாவியங்கட்குச் சுவையூட்டும் பொருளாக அமைகின்றன" என்கின்றார். இது பெரும்பாலும் காணப்படும் நிலையே எனினும் குறைபாடுடைய மாந்தரின் விருப்பு வெறுப்புகளால் விளையும் போராட்டத்தைக் காட்டுவதினாலும், முழு நிறை பண்பு வாய்ந்த அல்லது அதனை அடைய முயலும் மாந்தன் ஒருவன் தன் உயர் குறிக்கோள் பயணத்தில் எய்தும் இன்ப துன்பங்களையும், குறைபாடுடைய மாந்தரோடு அவனுக்கேற்படும் மோதல்களையும், அவன் அவற்றை எவ்வாறு வென்று முன்னேக்குகின்றான் என்பதையும் பொருளாகக் கொள்வது பாவியத்துக்குச் சாலச்சிறப்பாகும். அத்தகைய பாவியமும் பாவியங்களுள் உயர்வாகும். "கலைப்படையின் கடன் மகிழ்ச்சி யூட்டுவதே, நன்னெறி புகட்டுகின்றதா என ஆய்தல் கூடாது; பண்பட்ட அறிவாளனுக்கு அஃது உவகை தருமாயின் அது மிகச் சிறந்ததே" என்கிறார் பெயர்ப்பாசிரியர். ஆனல் ஒரு பாவியம் நேரடியாக நன்னெறியைப் புகட்ட வேண்டுவதில்லை எனினும் நன்னெறியிற் கால்கொண்டு உவகை மட்டுமின்றி நல்லுணர்வையும் கற்பார் உள்ளத்தில் எழுப்புதல் வேண்டும். அதனேடமையாமல் உலகுக்கு, உலகின் உய்வுக்கு அஃது ஒரு செய்தியை (*Message*) அளித்துச் செல்வதாகவும் இருத்தல் வேண்டும். அத்தகைய பாவியமே, தலை நிலையினதாகும். அவ்வாறின்றி ஒரு பாவியம் மகிழ்ச்சி யூட்டுவதே கடனாகக் கொண்டு, இவ்வுட்கோள் இல்லாதியலுமாயின் அஃது எத்துணை இன்பம் பயப்பினும், நுண்ணியம் வாய்ந்து உள்ளம் கவர்வதாயினும், இரண்டாம் தரத்தினதே ஆகும். 'மேக சந்தேசம்' இவ்வகையைச் சார்ந்ததே! தமிழில் உள்ள பிற்கால வாயில் (தூது) நூற்களையும், ஆற்றுப்படை நூற்களையும் போன்றதே இந்நூல்!

இனி, மொழியாக்கத்துக்கு வருவோம். அறிவியற் செய்திகளை மொழியாக்கஞ் செய்தல் எளிது. ஏனெனில் அங்குப் பெயர்க்கப்பெறுபவை கருத்துகளே. ஆனல் ஒரு மொழியின் இலக்கியத்தை மற்றொரு மொழியில் ஆக்கித்தருவது மிகக் கடினமான செயல். சிறப்பாகப் பாட்டிலக்கியம், தோன்றிய மொழியோடு பிரிக்கமுடியாதவாறு பின்னிப் பிணைந்திருப்பது. சொற்களும் தொடையும் அதன் தசையும் நார்களுமாக அமையும். அவற்றினின்று அதனைப் பிரிக்கும்பொழுதே பாதி அழகு அழிந்து போகின்றது. ஆயினும், பாவியத்தி னூடே படைப்பாளனின் உள்ளுயிர்ப்பு ஓடிக்கொண்டிருக்கும். அவ்வுள்ளுயிர்ப்பினை உணர்ந்து தம்பால் இழுத்துக்கொண்ட ஒருவரே (அவர் யாப்பிலக்கணப் புலிபாக இருந்தாலும் போதாது, தாமும் ஓர் உண்மைப் படைப்பாளராக இருத்தல் வேண்டும்) மொழியாக்கத்தினையும் உயிர்ப்போடு சிறக்க உலவவிடல் இயலும். அவ்வுள்ளுயிர்ப்பு இல்லை என்றால் எவ்வளவு திறம்படச் செய்யப்பெறினும் மொழியாக்கம் சிறப்பதில்லை.

திரு. சமதக்னியின் பெயர்ப்பு, அறிவியல் பெயர்ப்பினைப்போல் மிகத் திறமையாகச் (*Clever*) செய்யப்பட்டுள்ளது. மூலத்தோடு அடியளவொத்து, மூலத்தின் பொருளும், உட்பொருளும், பிறழாதவாறு (*Faith ful*) அமைந்திருப்பதும் ஆசிரியர் விளக்கத்தால் புலனுகின்றது.

மிகச் செட்டான, விழிப்பான சொற்பெயர்ப்பை நாம் காண்கின்றோம். மூலத்தின் அணி, நுண் நயங்கள் பெயர்ப்பிலும் காட்டப் பெறுகின்றன. இத்தனையும் இருந்தும் பெயர்ப்பில் உயிர்ப்பில்லை. மிகுந்த இரக்க வுணர்வையும், பரிவையும் ஒத்துணர்வையும் எழுப்பவேண்டிய அவ் வியக்கங்களின் கதை நம்பால் எந்த உணர்வையும் எழுப்பவில்லை. அணைந்த விளக்குப்போல் உள்ளது நூல். விளக்குக்குரிய எல்லா உறுப்புகளும் அமைந்துள்ளன; ஆனால் சுடர்தான் இல்லை. மூலத் தோடு பிறழாது ஒத்தியங்கல் வேண்டும் என்ற வேட்கை மிகுதி யாலேயே, சொல்லையும் பொருளையும் மிக விழிப்பாக ஆயும் முயற் சியில் உள்ளுயிர்ப்பை ஆசிரியர் நழுவ விட்டிருத்தல் வேண்டும். தமது பாட்டுணர்வுக்கு இடம் கொடாமல் பெயர்ப்பு ஒன்றையே பெரி தாகக் கருதியதே காரணம் எனலாம். அல்லது இயலாமையாகவும் இருக்கலாம்! விளம்பரத்தின் வாயிலாக ஒரு பொருளின் உருவம், தன்மை, பயன், சிறப்பு அனைத்தையும் தெரிந்துகொள்ளலாம். ஆனால் அதன் பயனை நுகர்ந்தின்புறல் இயலாது. இத்தமிழாக்கம் அவ்விளம் பரம் போன்றதே! மூலநூலைப் பற்றிய அறிமுகத்துக்கும் அதன் சிறப்பான அமைப்பைப் பற்றிய செய்தி அறிவுக்குமே இது பயன்படும். *

மறைந்துவரும் தமிழ்ச் சொற்கள் !

தமிழன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள் !

உயர்தனிச் செம்மொழியான நம் தமிழில் நுண்ணிய பொருள் உணர்த்தும் உலகவழக்குச் சொற்கள் இன்று புதுமை நாகரிகத்தின் பரபரப்பும் ஆழமின்மையும் மிகுதியும் பரவாத நாட்டுப்புற மக்களின் அன்றாட வாழ்க்கையிற் பயிலப் பெறு வனவே யல்லாமல், பிற விடங்களில் மறைந்துவிட்டன என்றே கூறலாம். அச்சொற்களை மக்கள் மறந்து போகாமல் செய்தலும். அவற்றின் நுணுக்கமும் சிறப்புமறிந்து அவற்றை இலக்கிய-நடைமுறை வழக்கில் பயன்படுத்தலும் நம்கடனாகும். எனவே தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் உள்ள மாணவரும், ஆசிரியரும் தமிழன்பரும் தங்கள் தங்கள் வட்டா ரங்களிலும் அண்டை அயற் சிற்றூர்ப்பகுதிகளிலும் வழங்கி வரும் அவ்வரிய, அருகிய சொற்களைத் தொகுத்துத் தென் மொழிக்கு விடுக்க வேண்டுகிறோம். அவை விடுத்தார் பெயருடன் தென்மொழியில் வெளியிடப்பெறும்.

முகவர்கள் கவனத்திற்கு

* ஒவ்வோர் ஆங்கில மாதமும் 5-ஆம் நாளுக்குள் முந்தைய மாதப் பட்டியல் தொகையைக் கட்டாயம் விடுத்துவிடவும்:
* படிகள் சரிபார்த்தே விடுக்கப் பெறுவதால், இடையில் ஏற்படும் குறைபாடுகளுக்கு அலுவலகம் பொறுப்பாகாது.
* தேவையான மிகுதிப் படிகட்கு முற்கூட்டியே எழுதவும்.

-அமைச்சர்.

(4ஆம் பக்கம் தொடர்ச்சி)

தாட்களின் ஆசிரியர்களைச் சிறைப்படுத்தி அவர்மேல் கடுமையான நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டுள்ளார். அண்மையில் ஏற்படவிருந்த தமிழ் உரிமைப் பெருநடைப் பயணத்தை (அவ்வேற்பாடும் சரியான முறையில் அமைக்கப் படாமற் போயினும்) நடத்த முற்பட்ட தமிழ்ப் பேராசிரியர், பர். இலக்குவனரைப் பாதுகாப்புச் சட்டப்படி சிறைப்படுத்தியுள்ளனர். இந்நிலை தமிழ்ப் பேராசிரியர் பிறர்க்கும் நேரவிருக்கும் நிகழ்ச்சிக்கு ஓர் எச்சரிக்கையே! துடிப்பும், பொறுப்பும் வாய்ந்த திரு. இலக்குவனர் போன்ற தமிழ் உரிமைக் காப்பாளர்களைச் சிறைப்படுத்தி விட்டால், தமிழ் மொழி யுணர்வே அற்றுப்போகும் என திரு. பக்தவத்சலம் போட்ட தப்புக்கணக்கின் விளைவு இனிமேல்தான் நடக்கவிருக்கின்றது. மொழியறிவற்ற முதலமைச்சரின் போக்கு நகைப்பை விளைவிக்கின்றது. தமிழ்மொழி விடுதலை உணர்வு தமிழக விடுதலை உணர்வாகக் கிளைக்க நெடுங்காலம் ஆகாது. பேராசிரியர்களால்தான் தமிழ் மொழி யுணர்வு கிளப்பப் பெறுகின்றது என்று கருதுவது அறியாமையாகும். காட்டுமிராண்டிக்கும் மொழியுணர்வு உண்டு. தாய் உள்ளவனுக்கெல்லாம் தாய்மொழிப் பற்றும் அதனைப் பேணி வளர்க்கும் கடப்பாடும் உரிமையுணர்வும் இருப்பது இயற்கை. இந்தி யாட்சியினர் இந்தியைப் பரப்புதற்கும் போலிக் காரணமாக ஒருமைப்பாட்டைக் கூறினாலும், உண்மையாக அதற்கும் அவர்தம் மொழியுணர்வே அடிப்படையான காரணம் ஆகும்.

மக்கள் எல்லார்க்கும் பொதுவான மொழியுணர்வு மொழிப் பேராசிரியர்களுக்கு மட்டுமே இருப்பதாகக் கருதிக்கொண்டு அத்தகையாரை ஒழித்துக்கட்ட முனைந்திருப்பது பேதையுட் பேதையின் செயலாகும். இவ்வாறு செய்வதால் ஒரு மொழி அடக்கப்பட்டு, அதன் உணர்வும் முடக்கப்பட்டு விடுவது உண்மையாயின், ஆங்கிலத்தை இந்நாட்டினின்று அகற்றப் பெரும் பாடுபட்டுக் கொண்டிருக்கும் தன் மானம்(!) வாய்ந்த ஆட்சி வெறியர் சிலர் ஆங்கிலப் பேராசிரியர்களையும் சிறைப் பிடிப்பதுதானே. அவ்வாறு செய்வது ஆங்கிலத்தை அகற்றுவதற்கும், அவ்விடத்தில் இந்தியை வலிந்து திணிப்பதற்கும் ஏற்ற ஓர் அருஞ்செயலாக இருக்குமே! எனவே, எழுந்துவரும் தமிழ் உணர்வை அடக்கித் தமிழ் விடுதலை இயக்கத்தை அழித்துவிட முயல்வது தமிழ் நாட்டு விடுதலை இயக்கத்திற்கு வித்திடுவது போல ஆகும் என்றும், அவ்வாறு தமிழ் நாட்டு விடுதலை இயக்கம் தொடங்கப் பெறுமானால், அதனை அடக்குதல் எதிரிநாடுகளை அடக்குவதினும் அரிதாகும் என்றும் அரசினர் தெளிவாக உணர்ந்து கொள்வாராக!

- பெருஞ்சித்திரன்.

என் தாயே.... என் கண்ணி.

(பழிப்புறு தமிழனை விழிப்புறச் செய்வது)

பாவேந்தர் பாரதிதாசன்.

(அவர் நினைவாக)

— ● —

செந்தமிழா உன்நாட்டின் பேரென்ன செப்பென்றால்
இந்தியா என்றே இளிக்கின்றான் என் தாயே!

பைந்தமிழ் நாட்டினையும் பாரதம் என் றும்சொல்வான்
எந்தவகை இச்சேய் உருப்படுவான் என்தாயே!

தாயைத்தாய் என்றறியான், தாய்நாட்டைத் தீய்க்கின்ற
தீயைத்தாய் என்பான் திருந்தானோ என்தாயே!

தாய்மடியிற் குந்தித் தமிழ்முலைப்பால் உண்ணுகின்ற
சேய்தனக்கும் தாய்பேர் தெரிகிலையோ என்தாயே!

தமிழ்மொழிதான் தாய்மொழி என்னும் தமிழன்
தமிழ்நாடு தான்தனது தாய்நாடென் றெண்ணானோ?

தமிழ்நாடென் தாய்நாடு தாய்மொழிதான் என்றன்
தமிழென் றுணரான் சழக்கனன்றோ என்தாயே.

கலைமுறைகா ணான் நாட்டைக் காட்டிக் கொடுப்பான்
தலைமுறைச்சீர் காணான் தலைவனென்பான் என்தாயே!

தொலையாச் சுரண்டல் தொலையாமல் தொண்டின்
விலைகேட்கும் வீணன் தலைவனோ என்தாயே!

செந்தமிழ் நாட்டின் திருவிளக்கை மாய்க்கின்ற
இந்திவரக் கையொப்பம் இட்டான்ஓர் பேதையன்றோ?

நம்தாய் அடிமை; வடநாட்டான் நம் ஆண்டான்
இந்தநிலை மாற்றா திருந்தென்ன என்தாயே!

——

அறிவு, பகுத்தறிவு, மெய்யறிவு. தொடர் 8.

1. சொல்விளக்கம்.

அறிவு என்னும் சொல் அறிதலாகிய தன்மை என்று பொருள்படும். அறிதலாகிய ஒரு தன்மை நமக்குத் தெரிந்தபின்தான் அறியாததாகிய ஒருதன்மை முன்பு இருந்ததை உணர்கின்றோம். அறிவு இல்லெனின் அறியாமை உணரப்பெறுது. என்னை? விழித்த பின்னன்றோ 'நாம் இது நேரம் வரை தூங்கியிருந்தோம்' என்பதை உணர்கின்றோம். 'அறிதோறு அறியாமை கண்டற்றால்' என்று தமிழ்மறை கூறுவதும் இதனையே அறிவுநிலை எய்தப்பெருதவரை அறியாமை நிலை உணரப் பெருதாகையால். உயிர்கள் யாவற்றிற்கும் அறிவே முந்திய நிலையும், அறியாமையே பிந்திய நிலையுமாகும். இவ்விரு நிலைகளையும் உணர்த்துகின்ற சொற்களுள்ளும் 'அறிவு' என்னும் சொல் பிறந்த பின்றான் 'அறியாமை' என்ற சொல் 'அறி' என்று அடியொட்டிப் பிறந்து, அறிதல் அல்லாத தன்மை என்று பொருளாலும் அடியொட்டி நின்றது. அறிதலாகிய அறிவு நிலை முன்னேக்கி உயர்ந்து போதல் போலவே, அறியாமையாகிய நிலையும் பின்னேக்கித் தாழ்ந்து போகும் தன்மையது. ஒருவன் மேலே போகப் போகவே ஆழத்தின் தன்மையும்உணரமுடியுமன்றோ? எனவே, அறிவின் முதல்நிலை அறியாமையின் இறுதிநிலையாகும். ஒருவன் அறிவை உணர்ந்தபின்றன் அறியாமையை உணரமுடியும்; ஆகையால், அறியாமை, அறிவில்லாத உயிர்களால் உணரப்பெருத தொன்றுயிற்று. பின், அறியாத நிலையிலும் அறிந்தது போல் உரைக்கின்ற நிலை எப்படிப்பட்டது எனின்; அது தூக்கத்தில் ஒருவன் உளறுதல் போலாம் என்க. தூக்கத்தில் உளறும் ஒருவனும் தூங்கப் போகும் முன் அறிந்திருந்தானே எனின். அறிகின்ற நிலை வருமுன் உள்ள அறியாமை நிலையில் ஒருவன் உரைத்தலெல்லாம், அவன் என்றே ஒரு கால் அறிந்தமையாலேயே என்க. என்றே ஒருகால் அறிந்தது என்பது என்னையோ எனின், அறிதல் உயிர்களுக்குத் தொடர்ந்து வரும் நிலையால் உண்டாகிய ஒரு தன்மை என்று உணர்க. இந்த நிலை உயிர்களின் பிறப்புப்பற்றிக் கூறவருமிடத்துத் தெளிவாக உணர்த்தப் பெறும்.

இனி, அறியாமை என்ற நிலை உணர்ந்தபின்றன், அறியாமையுள் அறியாமை உணரப் பெறும். என்னை? கதிரவன் ஒளியினின்று இருளில் மூழ்கும் இவ்வுலகம் முதலில் மயங்கிய மாலைப்பொழுதாகவும் பின் அதனினும் இருண்ட முன்னிராப் பொழுதாகவும், பின் அதனினும் இருண்ட நள்ளிராப் பொழுதாகவும் காண்பது போலவே அறிவு நிலை பெற்று, அதனின்

ஒளிநிலை கண்ட உயிர்களெல்லாம் அதன்பின் அறியாமை இருளை நன்கு அறிதல் இயல்வதாகின்றது. அறியாமை இருளை உணர்ந்த பின் அதனினும் அறியாத மிக்க இருள்வாய்ந்த பகுதிகளையும் உணர்தல் முடிகின்றது. எனவே அறியாமையைக் கண்ட உடனேயே ஒருவன் அறிவு பெற்றவனாகான் என்பதும், அறியாமையினும் அறியாமையைக் கண்டு கண்டு தெளிகின்ற பொழுதே அவன் அந்நிலையினின்று சிறிது சிறிதாக விலகுவான் என்பதும் பெறப்படும். இனி, நள்ளிரவுக்குப்பின் பின்னிரா சிறிதே ஒளிவாய்ந்ததாகவும், அதனினும் வைகறை பின்னும் ஒளிவாய்ந்ததாகவும் அதனினும் காலை மேலும் ஒளிவாய்ந்ததாகவும், அதன்பின் நடுப்பகல் யாவற்றினும் ஒளி வாய்ந்ததாகவும் அமைகின்றமை எவை போலவோ எனின், கூறுதும். அறியாமையை உணர்தலே அறிவின் தொடக்கம் என்று முன்பே உணர்த்தப் பெற்றது. அறியாமையை உணர உணர அறிவு வளரும். எனினும் அவ்வறிவு அறியாமையை உணர்ந்த அறிவாகுமே அன்றி அறிவை அறிந்த அறிவாகாது. இந்நிலை உயிர்களுக்கு வாய்ப்பதையே அறிவறிந்த நிலை என்று மெய்ந்நூற்கள் கூறும். ஆகலின் நள்ளிருட் பகுதியாகிய அறியாமையைக் கண்ட பின்பே ஒளிப்பகுதிகளாகிய பின்னிருளும், வைகறையும், காலையும் முறையே புலப்படுமாம் என்க. எனவே ஒருவன் அறியாமையை உணர்கின்ற அறிவு 'அறியாமையை அறியும் அறிவு' என்றும், அறிவை அறியத் தொடங்கும் நிலை 'அறிவை அறியும் அறிவு' என்றும் உணர்ந்து கொள்க. இனி அறிவின் பல படிநிலைகளைப்போலவே, அறியாமையினும் பல படிநிலைகள் உண்டோ எனின்; ஆம் என்க. அவ்வறியாமையின் படிநிலைகளும், அறிவின் ஒவ்வொரு படிநிலைக்கும் இடைப்பட்டதாகக் கிடக்கின்றன. என்னை? ஓரறிவின் அறிகின்ற நிலைக்கு முன் அவ்வறிவு பற்றிய அறியாமை நிலை படர்ந்து கிடக்கும். அவ்வறியாமை நிலையைக் கடந்து போனாலன்றி அவ்வறிவு வாயாதாம். இனி அறியாமையே முற்றுமொழிந்த நிலை என் நிலையிலும் காணற்கியலாதோ எனின், பொறிகளும், புலன்களும் பொருந்த இவ்வுடம்போடு உயிர்கொண்டியங்கும் உயிர்த்தோற்ற நிலைகளில் அந்நிலை என்றும் வாயாதென்க. இதுபற்றி அவ்வத் தலைப்புகளின் சிறப்புச் செய்திகள் கூறுமிடத்து விரிவாகக் கூறப் பெறும்.

இனி அறியாமை நிலையுள் உயிர்கள்தம் நிலையும் உணராது பிற நிலைகளையும் உணராது இருளுக்குள் இருக்கும் சுடரற்ற

விளக்குக் கூண்டு போல் புலனாவதின்றிக்கிடக்கும். அவ்விளக்குக் கூண்டுள் சுடர் கொளுத்திய பின்பே, அவ்விளக்கு தன்னையும் விளக்கிச் சுற்றுச் சார்ந்த பிற பொருள்களையும் விளக்கும். எனவே அறியாமை நிலையுட் கிடக்கும் உயிர்கள் தம்மையும் விளக்கமாட்டா. பிறரையும் விளக்கமாட்டா. இவ்விரு நிலைகளுள்ளும் முந்துநிலை பிறவற்றின் தன்மை உணர்கின்ற நிலையே. பிந்துநிலை தன் தன்மை உணர்கின்ற நிலையே. என்னை? சுற்றுச் சார்ந்த பிற பொருள்களின் தன்மை பற்றிய அறியாமை விலக விலகவே, தன்னைப் பற்றிய அறியாமை நிலைகள் படிப்படியாக விலகும். இனி அறியாமையின் படிநிலைகள்தாம் யாவையோ எனின் கூறுதும்.

ஒரு பொருளின் இருத்தல் நிலையை உணர்ந்து கொள்ளுதலே அறியாமையின் முதல் விடுபாடு. இரா நிலையாகிய அறியாமை விலகினாலன்றி இருத்தல் நிலையாகிய அறிவு நிலை எய்தப் பெறாது. இனி இதற்கடுத்து அப்பொருளின் தன்மை பற்றிய அறியாமை விலகினாலன்றி அதுபற்றிய அறிவு நிலை எய்தப் பெறாது. அப்பொருளின் தன்மை பலவற்றுள்ளும் ஒவ்வொரு தன்மையும் உணரப் பெறுமுன் அவ்வத் தன்மையின் உண்மைநிலை அறியப் பெறாது. எனவே பொருளறி நிலைக்குப் பொருளறியா நிலை அறியாமை நிலையாகும். பொருளறிந்தபின் தன்மையறி நிலைக்கு முன், தன்மையறியா நிலை அந்நிலைக்கு அறியாமை நிலையாகும் எனவே ஒரு படிநிலையின் அறிவுணர, அப் படிநிலைக்கு முந்தியதாகிய அறியாமை நிலை விலகுதல் வேண்டும் இஃது ஒளிமுன் இருள்போல ஒவ்வொரு படிநிலையிலும் அடியிட்டுக் கிடக்கின்றது. ஆகையால் அறியாமையின் முடிவு இந்நிலையென்றும், அறிவின் முடிவு இந்நிலையென்றும் தெள்ளத் தெளிய உணர்த்த முடியாத அறியாமை நிலையுள் எல்லா உயிர்களும் கட்டுண்டு கிடக்கின்றன. என்னை? குருடன் ஒருவன் உப்புக் குவியலையும், கற்கண்டுக் குவியலையும் ஒருங்கே காணான். இனி, குருட்டு நிலை நீங்கிப் பார்வை பெற்ற ஒருவன், அவையிரண்டையும் காண்பானாயினும் அவற்றைச் சுவைத்தாலன்றி உப்பின் உவர்ப்பையும், கண்டின் இனிப்பையும் உணர்தல் முடியாது. இனி, உப்பின் உவர்ப்புத் தன்மையையும், கண்டின் இனிப்பையும் உணர்ந்தாலும், அச்சுவைகளின் பயனை உணர்ந்தாலன்றி இரண்டின் விளைவையும் அறியான். குவியலைக் காண்பானுக்குக் குவியலைக் காணாதான் அறியாமைப் பட்டவன்; குவியலைச் சுவைத்தானுக்குக் குவியலைக் கண்டவன் அறியாமைப் பட்டவன்; சுவையின் பயன் கண்டானுக்குச், சுவைத்தவன் அறியாமைப் பட்டவன். இனி உப்பும் கண்டும் நீரே என்று அவ்வப் பொருள் நிலைகளின் முந்துநிலை உணர்ந்தானுக்கு, உப்பையும் கண்டையும் திண்மைப் பொருள்களாகக் காண்பான்

அறியாமைப் பட்டவன்; இரண்டும் நீரின் முந்து நிலையாகிய ஆவியே என்று உய்த்துணர்ந்தானுக்கு, இரண்டும் நீரே என்று கூறியவன் அறியாமைப் பட்டவன். இரண்டும் ஆவியன்று ஒளியே என்று உற்றுய்த்துணர்ந்தானுக்கு, ஆவியென்று கூறியவன் அறியாமைப் பட்டவன். இங்ஙன் பொருள் திறம் போலவே, அறியாமைத்திறமும் படிப்படியாக அமைந்து கிடக்கின்றது. அறியாமைத்திறம் போலவே அறிவுத் திறனும் படிப்படியாக அமைந்து கிடக்கின்றது. இனி இரண்டிற்கும் முடிவெது என்று காணும், அல்லது உணரும் அறியாமையின் இறுதிப் புதிரும், அறிவின் இறுதி உணர்வும் நாம் ஈண்டு உணர்ந்த தன்மையின் மேலதாக ஊர்ந்து கிடக்கின்றன. எனவே, அறியாமை உணர்தல்தொறும் அறிவு வெளிப்படுவதும், அறிவு வெளிப்படுந்தொறும் அறியாமை வெளிப்படுவதுமாகிய நிலைகள் மாறி மாறிப் பிணைந்துள்ளன. அறிவின் கொடுமுடியாகிய ஒரு நிலையினுக்குக் கீழும் அறியாமை தன் நிழலை விரித்துள்ளது. அறியாமையே அற்றநிலை ஒன்றிருப்பதாயின் அறிவும் அங்கு அற்றிருத்தல்வேண்டும். இருளற்ற நிலையில் ஒளியும், ஒளியற்ற நிலையில் இருளும், உணரப் பெறுமை போலவே, அறியாமை யற்ற நிலையில் அறிவும், அறிவற்ற நிலையில் அறியாமையும் உணரப் பெறுவதில்லை. இவ்விரு நிலைகளைப் பற்றியும் இன்னும் விரிவாக அவ்வத் தலைப்பின் சிறப்பை விளக்குமிடத்துக் கூறப் பெறும்.

இனி அறிதலாகிய தன்மை என்பது என்ன என்பதைப் பார்ப்போம் அறிவு என்பது அறியாமையின் கீழ் முடிவு நிலை என்பதையும் அறியாமை யென்பதும் அறிவின் கீழ் முடிவு நிலை என்பதையும் உணர்க. என்னை? அறியாமையின் எல்லையில் அறிவும், அறிவின் எல்லையில் அறியாமையும் வைக்கப் பெற்றுள்ளன. எனவே ஓரறியாமையின் முடிவு பிறிதோர் அறிவின் தொடக்கமாகவும், அவ்வறிவின் முடிவு, பிறிதோர் அறியாமையின் தொடக்கமாகவும், அதன் முடிவு வேறோர் அறிவின் தொடக்கமாகவும், அதன் முடிவு வேறோர் அறியாமையின் தொடக்கமாகவும் மாறி மாறி அமைந்திருக்கின்றன. இருளும் ஒளியும் போல அறியாமையும் அறிவும் ஒன்றையொன்று தொடர்ந்திருக்கின்றன. இந்நிலையில் அறியாமையின் தொடக்கம் இதுதான் என்பதும் அறிவின் முடிவு இதுதான் என்பதும் வரையறுத்துக் கூறவியலாத தொன்றும். இனி அறியாமையும் அறிவும் ஒரு நேர் கோட்டிலன்றி பரந்து பட்டுச் செல்வதாகும் தன்மை என்னை? இவ்வுலக உருண்டையின் தொடக்கம் எது? முடிவு எது? உருண்டையின் மேல் விளிம்பு எது? அடிவிளிம்பு எது? எவர் எவர் எங்கெங்கு நின்றுகொண்டுள்ளனரோ அவரவரின் முன்புறம் அவரவர்க்கு மேலும், அவரவரின் பின்புறம் அவரவர்க்குக் கீழும் ஆகுமன்றோ! சுழல் இராட்டினத்தில்

தொட்டிலில் அமர்ந்திருப்பான் கீழோன் ஆவன். இனிக் கீழவன் மேலே போகையில் மேலவன் இவனுக்குக் கீழோனுவான். இந்நிலைபோலவே ஏதாவதொரு நிலையில் கண்விழித்தானுக்கு அவனுக்கு முன்னுள்ள நிலை அறியாமை நிலையாகும். பின் உள்ள நிலை அறிவு நிலையாகும். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்தானுக்குப் பத்தாயிரம் ஆண்டுகட்கு முன் இருந்த நிலை அறியாமை நிலையாகும். பத்தாயிரம் ஆண்டுகட்குப் பின்னிருப்பானுக்கு இன்றிருக்கும் நிலை அறியாமை நிலையாகும். எனவே, அறியாமை நிலையின் தொடக்கம் இதுதானென்றும், அறிவு நிலையின் முடிவு இதுதானென்றும் கூறுதல் ஒல்லாது. இனி, கூறுதல் ஒல்லாது என்று இக்கால் கூறுகின்ற அறியாமை நிலையும் பின்னர் கூறுதல் ஒல்லும் என்று கூறப்பெறும் அறிவு நிலைக்கு மாறலாம். எவ்வகையானும் உண்மை என்பது ஒன்றே!

இனி, அறியாமை நிலை இதுவென்றும், அறிவு நிலை இதுவென்றும் தெளிந்து உணரமுடியாத நிலையில் அறியாமையினின்று விலக்கி அறிவையுணர்த்துவதாகக் கூறப்பெறும் இந்நூலினை எழுதப் புகுந்ததாகக் கூறுவது பொருந்துவதோ எனின். பொருந்துவதே என்க. என்னை? தூக்கம் எவ்வகையில் வந்து பற்றியது? அஃது எவ்வகையில் விட்டு விலகியது? என்பவற்றை உணராமற்போயினும், தூக்கம் என்பதித்தகையது என்றும், விழிப்பு என்பதித்தகையது என்றும் கண்டறிந்து கூறுவது பொருள் தன்மை கூறுவதாகுமே யன்றிப் பொருள் தோற்றம் கூறுவதாகாது. இவ்வுலகத்தின் தோற்றமும் ஒடுக்கமும் காரண கருமமின்றி நிகழ்ந்ததையும் நிகழ்வதையும் முன் கூட்டிக் கூறவியலாது போயினும் இவ்வுலகத்தன்மைகள் இவையாம் என்று விளக்கிக் காட்டுதலும், இந்நிலை போகுநிலை இந்நிலை ஆகுநிலை என்று உணர்த்திக் காட்டுதலும் அதுவழி ஒருவாறு உலகத்தின் தோற்ற ஒடுக்க நிலைகளைக் கூறுதலும் எங்ஙன் சால்வதாகவும், இயல்வதாகவும் உள்ளனவோ, அங்ஙனமே, அறியாமை நிலையும், அறிவு நிலையும் இன்ன காரண, கரும வினைப்பாட்டின் அடிப்படையில் இயங்குகின்றன என்று தெளிந்தவாறு கூறுதற்கு இக்கால் இயலாமற் போயினும், அவ்விரண்டின் தன்மைகளும், அவற்றின் போகுநிலை ஆகுநிலைகளும் இத்தகையன என்று உய்த்துணர்ந்து கூறுதலும் இயல்வதாகவும், பயனுடையதாகவும் இருக்கின்றன.

சுற்றிக் கொண்டிருக்கும் பல் உருளையுள் இரண்டு பற்களுக்கு மிடையில் ஒரு பள்ளம் இருப்பதும், அப்பள்ளமே அப்பற்களின் பயனுக் கடிப்படையாக இருப்பதும் போலவே. இரண்டு அறிவு நிலைகளுக்கும் இடைப்பட்டதாகிய அறியாமை நிலையே அவ்விரண்டு அறிவு நிலைகளின் பயனுக்கடிப்படையாக அமைந்து கிடக்கின்றது. இத்தகைய பிணைப்புண்டுகிடக்கும் அறியாமை, அறிவு நிலைகளுள் நாம் உணரப் பெறுவது

என்னையோ எனின்; அவ்விரு நிலைகளாகிய அறியாமையும் அறிவுமே என்க. என்னை? அறியாமையும் அறிவும் உணர்ந்த வழியன்றோ, இவ்விடைப்பட்ட நிலையில் நாம் எந்த நிலையில் நிற்கின்றோம் என்பதும், நாம் இங்கு நின்ற நிலையில் ஆற்ற வேண்டுவதென்ன என்பதும், அவ்வாற்றவேண்டுவதன் நோக்கம் என்ன என்பதும், அந்நோக்கத்தின் சிறப்பு எது வென்பதும் உணரப்பெறும். என்னை? களைப்புற்ற விடத்து அயர்ந்து உறக்கம் போகிய ஒருவன் விழித்த பின்னன்றோ, அவன் எவ்விடத்து உறங்கினான் என்பதையும், எங்கிருந்து நடந்து வந்தான் என்பதையும், எவ்விடம் நோக்கிச் செலவை மேற்கொண்டான் என்பதையும், என்ன காரணம் பற்றி அங்குச் செல்லல் வேண்டுமென்பதையும், அதற்கு வழிநடைப் பொருள் களாக அவன் பெற்றதையும் பெறவேண்டுவதையும் அறிந்து ஈட்டலும் காத்தலும் செய்யவேண்டுமென்பதையும் அறிந்து கொள்கின்றான். இத்தனையறிவும் அவன் விழிக்காமுன்னம் துயின்றிருந்தபொழுது அவனுக்குப் புலப்பட்டிலவே. எனவே பொதுவாக அறியாமை நிலை உள்ளவரை அறிவுநிலையின் சிறப்பு உணரப்பெறாதாம் என்க! இனி, அறிவின் சிறப்பை உணர்ந்தவனுக்கு அறியாமையின் உறக்கமும் ஒடுக்கமும், அவற்றாலாயதுன்பமும்வாராவோ எனின்; வாரா என்க. என்னை, அறியாது துயிலும்நிலை அறியாத்துயில் நிலைஎன்றும் அறிந்தபின் துயிலும் நிலை அறிதுயில் நிலை என்றும் உணர்க. அறியாத்துயில் நிலையில் மாந்தன் இருளில் துயில்வோனாகவும், அறிதுயில் நிலையில் ஒளியில் விழிப்போனாகவும் உள்ளான் இருளில்துயில் வான் ஒரோவொருகால் விழிப்பினும் அகத்தும் புறத்தும் இருள் மண்டியிருப்பதையே காண்பான்; ஒளியில் விழிப்பான் ஒரோ வொருகால் துயிலினும் அகத்தும் புறத்தும் ஒளி மண்டியிருப் பதையே காண்பான். இனி, அறியாமை நிலை, இருளினும் இருண்டதாகவும், அறிவு நிலை ஒளியினும் ஒளிர்வதாகவும் இருப்பதைக் காண்போம்.

மலேசிய முகவர்

தென்மொழியின் மலேசிய முகவராகப் பொறுப்பேற்றிருப்பவர் திரு. அழ அழகிரிசாமி ஆவார்.

அழ அழகிரிசாமி 82. பெல்பீல்ட் வீதி, ஈப்போ.

என்ற முகவரியிலேயே அன்பர்கள் தொடர்பு கொள்க. இது வரை மலேசிய முகவராக இருந்து தண்டமிழ்ப் பணியாற்றிய திரு. ச சி சுப்பையா அவர்கள் தம் இயலாமை கருதி விலகி நின்று தென்மொழிக்குத் தொடர்ந்து பணியாற்றுவார்.

வேறு சிலர் வணிக நெறிக்குப் புறம்பான திருட்டு வழிகளில் தென்மொழியை விற்று வருவதாய் அறிகின்றோம். அன்னார் இனியும் தொடர்ந்து அங்ஙனம் விற்றுவரின் கடும் நடவடிக்கை எடுக்க நேரிடும் என்று எச்சரிக்கின்றோம். —அமைச்சர்

கடவுளைக் காணுங்கள்.

காராமேடு-வள்ளிமணாளன்.

கோடிப் பணங்கொட்டிக் கோயில்கள் கட்டுகின்ற
வேடிக்கை மாந்தரே வீணனீர் - வாடியராய்
வெய்யில் மழைக்கொதுங்க வீடின்றி வாடுநர்க்குச்
செய்குடிசை சீர்கோயிற் கொப்பு

கண்டுங்கா ணாமலே உண்டியில் காசிட்டுப்
பண்டை 'வினை'தொலைக்கப் பாடுபடும் - மண்டுகளே!
உண்டி உறையுளின்றி வாடும் உழைப்பாளர்க்
கண்டிரங்கிப் போடல் கடன்!

பாலும், பழமும்,தேன் பச்சரிசிச் சோறுமிவை
மேலுக்குக் கல்லின்மேல் போட்டிழக்கும் - மேலுலகீர்!
நாளும் உழைத்தலுத்தும் கால்வயிற்றுக் கஞ்சியிலா
ஆளுக் களித்தல் அருள்.

தெய்வத்தைத் தேடியூர் ஊராய்த் திரிகின்றீர்
மெய்த்தொழில் அற்றீர்! விளைவற்றீர்! - உய்விக்க
நன்றுழைக்கும் பாட்டாளி நாடி நரம்புகளில்
நின்றாடும் தெய்வ நெறி!

கள்ளங் கவடு,பெருங் கொள்ளை கொடியமனம்
எள்ளளவும் குன்றாத பொய்வாழ்வில் - நள்ளிரவில்
குண்டூசி தேடல்போல் ஆண்டவனைத் தேடற்க!
உண்மையன்பே தெய்வ உணர்வு!

ஊர்கெடுத் தேமாற்றி உற்ற பொருள்சேர்த்துப்
பேர்பெருக்க வாழும் பெரியோரே! - பார்க்கொண்ணாத்
தெய்வத்தை ஏமாற்றத் தேரும் திருவிழவும்
செய்வதுவோ தீர்க்கும் வினை?

நீங்கள் சுவைத்தீர்களா ?
துரை-மாணிக்கம் எழுதிய
இனிய, எளிய தமிழ்ப் பாவியம்!
— கொய்யாக்கனி —
(விலை: 2-25.)
தென்மொழி உறுப்பினர்கட்கு மட்டும் விலை 1-50.
அஞ்சல் செலவு தனி.

வேறென்ன சொல்வது?

மாமியார் போல் நச்சரிக்காதீர்!
"எங்களை இந்தி படிக்கச் சொல்ல நீங்கள் யார்?

-வட இந்தியர்கட்குக் காமராசர் அறிவுறுத்தல்.

"நாங்கள் தாம் இந்தி(ய) ஆட்சியாளர்கள்!'

இந்தியே இந்தியாவின் ஆட்சி மொழி; அதை யாரும் மாற்ற முடியாது, - சாத்திரி கருத்து

இந்தியாவின் தலையெழுத்து நம் கையில்தானே என்ற தலைகொழுத்த பேச்சு!

பேராயக் கட்சிச் சட்டமன்ற உறுப்பினர் ஒருவரின் மகன் திறந்த மதுக்கடைத் தொடக்க விழாவிற்கு, அதிகாரிகளும், பேராயக் கட்சித் தலைவர்களும் சென்றுர்கள் _பம்பாய்ச் செய்தி.

'எத்தனை நாளைக்குத்தான் பிற கட்சியினர் வைத்த மதுக்கடைகளில் திருட்டுத்தனமாகக் குடிப்பது? என்று ஏங்கிக் கிடந்தவர்களுக்கு இது மகிழ்ச்சி தரும் செய்திதானே!

'இந்தி'யில் ஆண்டறிக்கை இல்லாததால் 'மத்தியப் பிரதேச' ஆட்சி மன்றத்தில் நடவடிக்கைகள் ஒத்திவைப்பு! - செய்தி

அவர்களுக்கு 'மான உணர்வு' இருக்கின்றது! இங்கிருப்பவர்களுக்குத்தான் அது துளியும் இல்லையே

"நளபாகம்" பற்றி மக்கள் மன்றத்தில் ஆராய்ச்சி! - செய்தி

தம்தம் மனைவியர்களின் நச்சரிப்புகளை இப்பொழுதுதான் கவனிக்கின்றனர் போலும்!

நேதாசி திரும்பி வந்தால், அவரை மாபெரும் இந்திய விடுதலை மறவர்களில் ஒருவராக மதிப்போம் - சாத்திரி

பூ... வெறும் மதிப்புத்தானே...! அவரிடத்தில் தலைமையைக் கொடுத்துவிட மாட்டீர்களே!

நண்பகல் உணவு சாப்பிட்டு 11 பள்ளிக் குழந்தைகள் சாவு...! - செய்தி

"உணவில்லாமல் குழந்தைகள் பல்லாயிரக்கணக்கில் சாவதைவிட இது மேலல்லவா" என்று அமைவு கூறப்படலாம்.

புதுவை அரவிந்தர் பாழி (ஆசிரமம்) தாக்குண்ட நிகழ்ச்சியை ஆராய்வதற்குத் தில்லி அதிகாரிகள் வருகை.! – செய்தி

குடியரசுத் தலைவரே வந்தாலும் வியப்பதற்கில்லை.!

ஊழலை ஒழிப்பதில் அரசினர் மட்டும் நடவடிக்கை எடுத்தால் போதாது. பொதுமக்களும் ஒத்து உழைக்க வேண்டும்! – நந்தா

பொதுமக்கள் ஒத்துழைப்பு இருப்பதால்தானே அதை இன்னும் ஒழிக்க முடியவில்லை.!

வரலாற்றை மாணவர்கள் நன்றுகப் படித்திருப்பார்களானால் அண்மையில் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்திருக்காது!
– பக்தவத்சலம்

அதை நீங்கள் படித்திருந்தாலும் அப்போராட்டம் நடந்திருக்காது.

மருத்துவமனைக்கு வந்த பெண் நோயாளியை ஊர்க்காவலர் ஒருவர் கற்பழித்தார்.! –செய்தி

ஊர்க்காவலர் முந்திக் கொண்டார் போலும் !

ஏவரெச்டு உச்சியை அடைவது எளிது. ஆனால் இக்கால அமைச்சர்களைக் காண்பது அரிதாயிருக்கிறதே –பிகானீர் அரசர் கார்ணிசிங்

அமைச்சர்கள் மட்டும் குப்பை மேடுகளா என்ன.?

இளைஞர் படைப்பயிற்சியில் தமிழ் அல்லது ஆங்கிலத்தில் கற்பிப்பு ஆனால் கட்டளைச்சொல் இந்தியில் தான் இருக்கும்! –பக்தவத்சலம்

கற்பிப்பது நாங்கள்; கட்டளையிடுவது அவர்கள் தாமே.

அருவருப்பான திரைப்படச் சுவரொட்டிகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் சென்னையில் பொதுக்கூட்டம் நடந்தது.
– செய்தி

அந்தக் கூட்டத்தையும் ஓர் அரைகுறை உடையுடுத்த நடிகையின் தலைமையில் நடத்தியிருந்தால் கூட்டம் இன்னும் மிகுதியாக வந்திருக்கும்!

நோபல் பரிசினைப்போல 'நேரு பரிசு' என்று திட்டம் கொண்டு வரப்பட்டு நாட்டு நல்லெண்ணத்துக்காகத் தொண்டு செய்பவர்களுக்கு அளிக்கப்படும் –சாக்ளா

அப்பரிசை முதன்முதலாக முதல் அமைச்சர் பக்தவத்சலத்துக்குக் கொடுக்கும்படி நாங்கள் பரிந்துரைக்கின்றோம்!

கை கூப்புகிறேன்; மண்டியிட்டு வேண்டுகிறேன். காந்தியார் பாதையைப் பின்பற்றுங்கள்! – டெல்லிக்குத் தேபர் வேண்டுகோள்

அதெப்படிமுடியும்? இப்பொழுது 'சாத்திரியாரின்' காலமல்லவா நடக்கின்றது...!

மொழிச் சிக்கலில் நடுத்தர வழியைக் காணவேண்டும். இந்தி பேசுவோர், பேசாதார் இருதரப்பையும் நிறைவு செய்தல் வேண்டும்...!
— சாத்திரி

மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுவதில் படு முயற்சி செய்கின்றார் சாத்திரியார்...!

நகர்ப்புறங்களில் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி நடந்தாலும் சிற்றூர்ப் புறங்களில் அமைதியான நிலை இருந்தது!
— அமைச்சர் மசீது

இப்பொழுதைக்கு நகரத்தில் உள்ளவர்களே பார்த்துக்கொள்வார்கள் என்று கருதியிருக்கலாம்...!

விடுதலைப் போராட்டக்காலத்தில் மக்களிடம் காணப்பட்ட ஒற்றுமையையும் ஒன்று பட்ட உணர்ச்சியையும் தொடர்ந்து பேணிக் காத்தல் வேண்டும் — காமராசர்

தமிழ் மக்கள் கூர்ந்து கவனிக்க!

25 உருபா கையூட்டுவாங்கியதற்காக வழக்கு மன்ற ஊழியர்க்குத் தண்டனை...! - செய்தி

தொகை மிகுந்திருந்தால் தண்டனை குறைந்திருகக்கும்!

இந்தி மொழியைத் தென்னாட்டுப் பகுதிகளில் விரைந்து பரப்புவதற்காக 1964-65 ஆண்டுகளில் நடுவணரசு 1,90,87,954 உருபா தொகை ஒதுக்கியுள்ளது - செய்தி

அத்தொகை எல்லைப்பாதுகாப்புக்காகக் கொடுத்த நன்கொடையில் ஒரு பகுதியாக விருக்கலாம்.

நாட்டில் மக்களிடையே அரசு பற்றி வெறுப்பு நிலவுகிறது. கையூட்டு மிகுந்து வருகிறது. அதனால் நாட்டு ஒற்றுமை குறைந்து வருகிறது. - மொரார்சி

இதனை இப்படிச் சொல்லுங்கள்; மக்களுக்கு அரசு மேல் வெறுப்புண்டாகும்படி நடக்கின்றோம்; கையூட்டுக்கு இடங்கொடுத்து வருகின்றோம்; அதனால் நாட்டு ஒற்றுமையைக் குறைத்து வருகின்றோம்... !

கடவுள் படிமத்திற்குள் மதுப் புட்டிகள்...! — செய்தி

காக்கின்ற தெய்வம்...!

இந்தி நாட்டின் ஆட்சி மொழி; அதை யாரும் மாற்ற முடியாது. நாட்டின் ஒற்றுமையைக் கெடுக்கும் எதையும் செய்யலாகாது...!
— சாத்திரி.

இதைவிட நாட்டின்ஒற்றுமையை யார் கெடுத்து விடப் போகின்றார்கள் . . .!

சென்ற பதினேழு ஆண்டுகளில் உறுதியான கல்விக் கொள்கைகளை அரசினரால் உருவாக்க முடியவில்லை.
-திருவாட்டி. விசயலட்சுமி பண்டிட்

இப்பொழுதுதானே எந்த மொழியில் கற்பிப்பது என்ற சிக்கல் நடந்துகொண்டிருக்கின்றது...!

நடுவண் அரசு அமைச்சர்களுக்குத் கொடுக்கப்பட்ட நாற்காலிகள் மிசைப்பலகைகளின் மதிப்பு உருபா 4,90,742. —செய்தி

'உருபா கிடக்கட்டும்... எத்தனைத் தச்சர்கள் அதைக் கொண்டு பிழைக்கின்றார்கள் என்பதைப் பாருங்கள்' என்று காமராசர் ஏழைகளிடம் அமைதி கூறலாம்.

சிறையில் காவல் வைத்தவர் தற்கொலை! — செய்தி

காவல் அவர் உடம்புக்குத் தானே...! உயிருக்கல்லவே!

இந்தியில் மட்டுமே அச்சடித்த தொடர்வண்டி கட்டணச் சீட்டைக் கண்டு சாத்திரி வருத்தம்; எப்படி நடந்தது எனத் தெரியவில்லை, உசாவுவதாக உறுதிமொழி! — செய்தி

நீரில் மூழ்கி, நனையாமல் இருக்க விரும்புகின்றாரோ?

மொழித் தொடர்பாக ஒன்றும் முடிவு செய்யப்படவில்லை. ஏற்கனவே உள்ள நிலைமை நீடிக்கும்...! — சாத்திரி

ஏற்கனவே இருந்த நிலைமை இங்கும் நீடிக்கலாம்...!

'தியாகிகள்' யார் என்பது பற்றி மக்கள் மன்றத்தில் பக்தவச்சலம் விளக்கம்...! — செய்தி

"என்ன...! என்னை இதற்குள்ளாகவா மறந்து விட்டீர்கள்?"

குடியரசுத் தலைவர் கண் அறுவை மருத்துவத்திற்கென இலண்டன் போய்த் திரும்பினார்! — செய்தி

இங்குள்ள மருத்துவ மனைகளைப் பற்றித்தான் அவருக்கு நன்றாகத் தெரியுமே!

மொழிபற்றிக் கவனிக்க நடுவண் அரசு துணைக்குழு அமைப்பு. உறுப்பினர் எழுவரில் தென்னாட்டு அமைச்சர் எவரும் இல்லை. -செய்தி

ஆடுகளின் நலன்கள் பற்றி ஓநாய்க் கூட்டத்தில் ஆய்வு!

பல்கலைக் கழகப் பாடமொழியாக இந்தி இருக்க வேண்டும். — பீகார் அமைச்சர் சின்கா

ஏனெனில் பல்கலைகளும் அதில் தான் இருக்கின்றன!

கேட்பாரற்றுக் கிடந்த ஏராளமான அரிசி மூட்டைகளைப் பல நாட்களுக்குப்பின் காவலர் கைப்பற்றினர்! செய்தி

இனி அவை உண்பாரற்றுக் கிடக்காவே!

கையூட்டு (லஞ்சம்) ஊழல் இன்னும் ஒழியவில்லையே! — நந்தா வருத்தம்

அதுமட்டுந்தானா ஒழியவில்லை.?

துகள் வளர்க்கும் அறிவியல்

அ. கி. மூர்த்தி, பி. எசி; பி. டி.

கொள்கை: அறிவியல் வரலாற்றில் கொள்கைகளுக்குத் தனி இடம் உண்டு. அறிவியலின் விரைந்த வளர்ச்சிக்கு அவை அடிகோலியுள்ளன. தார்வினது இயற்கைத் தேர்வுக் கொள்கை உயிரியலும்; பிராய்டினது உளப்பகுப்புக் கொள்கை (Theory of psycho-analysis) உளவியலும்; ஐன்சுடினுடைய சார்புக் கொள்கை இயல்பியலும் (Physics) விரைந்து வளர வழிவகை செய்தன. அவ்வகையில், மிக அண்மைக் காலத்தே உருவான துகள் மின்னணுக் கொள்கையும் (Theory of quantum electronics) இயல்பியல் மேலும் விரைந்து வளர வழி செய்துள்ளது. அன்றியும், அஃது அறிவியலின் பல துறைகளிலும் பயன்படுமாறு அமைந்துள்ளது.

வரலாறு: இத்துறை 12 ஆண்டுக்கால வரலாற்றினைக் கொண்டது எனலாம். இஃது 1953ஆம் ஆண்டில் தோன்றியது. இதன் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் அடிகோலியவர்கள் பேசவ், புரோக்கரவ் என்னும் உருசிய இயல்பியலார் (Physicists) இருவரும் சார்லசு டவுனிசு என்னும் அமெரிக்க இயல்பியலாரும் ஆவர். இத்துறையில் இவர்கள் ஆற்றிய அருந் தொண்டிற்காக இவர்களுக்கு 1964ஆம் ஆண்டிற்குரிய நோபல் பரிசு வழங்கப்பட்டது. இத்துறை இயல்பியலின் இன்றியமையாத புதுத்துறை ஆகும். 1954இல் இத்துறை பற்றிய முதல் ஆய்வு செய்யப்பட்டது. இதில் அமோனிய வளியில் நுண் அலைக் குறிபாடுகள் (Microwave signals) செலுத்தப்பட்டபொழுது, அக் குறிபாடுகள் பெருகின. இந்த ஆய்வே துகள் மின்னணுக் கருவி அமைப்புகள் (Quantum electronic devices) தோன்ற வழி செய்தது.

துகள் மின்னணுத் துறை: துகள்கள் என்பவை ஒளியின் தொடர்பில்லாத மிகச் சிறிய பகுதிகள் ஆகும். ஒளி துகள் துகள்களாகச் செல்லும். அவ்வாறு ஒளி துகள் துகள்களாகச் செல்வதைப்பற்றி ஆராய்வதே துகள் மின்னணுவியல் (Quantum electronics) ஆகும். பொதுவாக, இதைத் துகள் மின்னணுத்துறை எனலாம்.

நெறி முறை: துகள் மின்னணுக் கருவி அமைப்புகள் என்பவை துகள் பிறப்பிகளும் (Quantum generators), துகள் பெருக்கிகளும் (Quantum amplifiers) ஆகும். துகள் பிறப்பி

கள் மின்காந்தக் கதிர் வீச்சை உண்டாக்குபவை. துகள் பெருக்கிகளோ மின்காந்தக் கதிர் வீச்சைப் பெருக்குபவை. மேசர் (Maser) இலேசர் (Laser), இரேசர் (Iraser) ஆகியவை இவற்றிற்கு எடுத்துக்காட்டுகள் ஆகும். மின்சாரம், ஒளி, வெப்பம் முதலிய புறத்தூண்டுதல்களால் அணுக்களின் ஆற்றல் நிலையின் அளவை மாற்ற இயலும் என்னும் நெறி முறையில் துகள் மின்னணுக் கருவி அமைப்புகள் இயங்குகின்றன. ஆற்றல் நிலை, அணுக்களுக்குத் தகுந்தவாறு மாறுபடுவது.

இயல்புகள்: துகள் மின்னணுக் கருவி அமைப்புகளின் அரிய இயல்புகள் பின்வருமாறு: இவை ஒளி அல்லது மின் காந்தஅலைகளின் இசைந்த கதிர்வீச்சை (Coherent Radiation) உண்டாக்குபவை. அவ்வாறு உண்டாகும் கதிர் வீச்சை இவை பெருக்கவும் வல்லவை. இவை உண்டாக்கும் கதிர் வீச்சு காழ் மணியையும்(வயிரம்) தொளையிடவல்லது. இவை பிறப்பிக்கும் வெப்பம் முறிப்பாற்றல் மிகுந்த பொருள்களையும் ஆவியாக்க வல்லது. இவை மிக நுண்ணிய உணர்வு உடையவை; மிகத் திருத்தமாகவும், இரைச்சல் இல்லாமலும், நிலையான உயர்ந்த அதிர்வெண்ணிலும் இயங்குபவை. இவை மிக அரிய அமைப் பும், செலவுச் செறிவும், மிகுந்த இடத்தை அடைக்கும் தன்மை யும் கொண்டவை. இவை சொல்லுதற்கரிய நுண்மை வாய்ந் தவை. ஒரு விரற்கடைக் குறுக்களவில் 30 மில்லியன் பங்குள்ள தொளையிலும், இவை உண்டாக்கும் கதிர் வீச்சு செல்லக்கூடி யது. இக் கதிர்வீச்சு ஒளியின் விரைவில் செல்லத்தக்கது. ஒளி யின் விரைவு ஒருநொடிக்கு 1,86,000 கல். இவை பிறப்பிக்கும் கதிர்வீச்சு நீரினுலும் உட்கவரப்படாது.

பயன்கள்: துகள் மின்னணுத் துறை ஆய்வினுல் நம் அன் ருட வாழ்வில் பல பயன்கள் ஏற்படுவதற்குரிய வாய்ப்புகள் உள்ளன. அவை யாவை என்பதை இனிக் காண்போம். செய்தித் தொடர்பு: வானெலித் துறையில் வானெலி அலைகளை உயர்ந்த நுண்ணுற்றல் பெருக்க, துகள் மின்னணுக் கருவி அமைப்புகள் பெரிதும் உதவும். தற்பொழுது வழக்கிலுள்ள பிறப்பிகளும் பெருக்கிகளும் இவ்வாறு செய்ய வல்லவை அல்ல. படிகங்களினுல் இயங்கும் ஒளித்துகள் பிறப்பிகளும் (Optical quantum generators), வளித்துகள் பிறப்பிகளும் (Gas quantum generators), அரைக் கடத்தி துகள் பிறப்பிகளும் (Semi-conductor quantum generators) அண்மைக் காலத்தே உருவானவை. இவை அறிவியலிலும் தொழில் நுணுக்க இயலிலும் பெருத்த மாற்றங்களை உண்டாக்க வல்லவை. பல ஆண்டுகளுக்கு முன் தீர்வுகாண முடியாத சிக்கல்களுக்கு, இவை இப்பொழுது தீர்வுகாணும் திறம் பெற்று விளங்குகின்றன. இராமன் கொள்கைக் கூற்றுகளை இவை சரி

பார்த்துள்ளன. நிலவுலகச் செய்தித் தொடர்பிலும், வான வெளிச் செய்தித் தொடர்பிலும் இவை பெருத்த மாற்றங்களை உண்டாக்கும். அன்றாட வானொலி நிகழ்ச்சிகளை மிகத் திருத்தமாகவும் துல்லியமாகவும் கேட்க இவை உதவும். வான வெளியில் நீண்ட நெடுந் தொலைவுகளிலுள்ள விண்மீன் கூட்டங்களிலிருந்து வரும் மிக நலிந்த குறிபாடுகளையும், இவை பெருக்க வல்லவை. துணைக் காந்தப் பெருக்கிகள் (Paramagnetic amplifiers) இதற்குத் துணை செய்யும். வானவெளிக் கப்பல்களிலிருந்து நிலவுலகிற்குச் செய்திகள் அனுப்பவும்; நிலவுலகிலிருந்து வானவெளிக் கப்பல்களுக்குச் செய்திகள் அனுப்பவும் இவை பயன்படும். வானொலிக் குறிபாடுகளை நுணுகிப் பகுத்தறிய, வானவியல் ஆராய்ச்சியிலும், வானவெளி ஆராய்ச்சியிலும் இவை பயன்படும்.

கடல் வழித் தொடர்பு : இவை உண்டாக்கும் கதிர்வீச்சு வானொலி அலைகளைப் போன்று நீரினால் உட்கவரப்படாது. எனவே, கடல் நீர் வழியாகத் தொலைபேசித் தொடர்பு மிக விரைவாகக் கொள்ளவும் இவை உதவும். ஒரே சமையம் ஒரே கம்பியின் வழியாக ஆயிரக்கணக்கில் செய்திகளை அனுப்பலாம். கடல் தொலைவரி வாயிலாக இப்பொழுது ஒரே தடவையில் நூறு செய்திகளுக்கு மேல் அனுப்பல் இயலாது. நீர் மூழ்கிக் கப்பல்களுக்கும் நீரில் மிதக்கும் கப்பல்களுக்குமிடையே செய்தித் தொடர்பு கொள்ளவும்; கடலின் அடியைத் திருத்தமாக ஆராயவும் இவை உதவும்.

திங்கள்: ஒளி முறையில் திங்களின் இருப்பிடத்தை அறிந்து, அதன் பிதுக்கப் படத்தை (Relief map) 30 செண்டி மீட்டர் அளவுக்குத் திருத்தமாகத் தொகுக்கவும் இவை உதவும்.

தொழில் துறை: காழ்மணி போன்ற முறிப்பாற்றல் மிகுந்த பொருள்களைப் பண்படுத்தவும், திண்மங்களை (Metals) இணைக்கவும் தறிக்கவும், எந்திரப் பகுதிகளை நுட்மாகப் பூட்டவும், ஒளிச் சேர்க்கை முதலிய இயைபு வினைகளை (Chemical Reactions) விரைவுபடுத்தவும் இவை உதவும்.

அணு: பொருள்களின் வெப்ப நிலையை மிக மிகுந்த அளவுக்கு உயர்த்த இவை துணை செய்யும். அணுக் கருக்கள் பிணைவதற்குப் (Nuclear fusion) பல ஆயிரம் பாகைக் கணக்கில் வெப்ப நிலை வேண்டும். அவ்வாறு அவை பிணைவதால் மிகுந்த ஆற்றல் உண்டாகிறது. இதுவே அணு ஆற்றல் எனப்படுவது. அணுக்கருக்களைச் சிதைப்பதாலும் (Nuclear fission) அணுவாற்றல் வெளிப்படும். அணுக்கருக்களைப் பிணைப்பதற்குரிய வெப்ப ஆற்றல் வெப்ப அணுக்கரு ஆராய்ச்சியில்

[Thermo-nuclear research] பெரிதும் பயன்படும். இதற்கு மின்னணுக் கருவி அமைப்புகள் நன்கு உதவும்.

மருத்துவம்: மருத்துவத் துறையிலும் அறுவைத் துறையிலும் இவற்றின் பயன்கள் கருதத் தக்கனவே. முயல்களின் கண்களிலுள்ள கட்டிகளைப்போக்க, இவை பயன்படுத்தப்பட்டுள்ளன. மேசர் என்னும் கருவி அமைப்பினால் ஒரு நொடியின் ஆயிரத்தில் ஒரு பகுதி நேர அளவுக்குள் ஒளிக் கற்றை செலுத்தப்பட்டுக் கட்டி அகற்றப்பட்டது. வேண்டிய பகுதியில் வேண்டியவாறு இக் கற்றையைச் செலுத்த இயலும். உடல் திசுக்களை இணைக்கவும், குருதிக் குழாய்களைத் தீய்க்கவும், வயிற்று அறுவையை மேற்கொள்ளவும் இவற்றைப் பயன்படுத்தலாம் என்பதைத் தகுந்த ஆய்வுகள் மெய்ப்பித்துக் காட்டியுள்ளன. தீய்க்கும் பண்பு இவற்றிற்கு இருப்பதால், புற்று நோயைப் போக்கவும் இவற்றைப் பயன்படுத்த வழியுண்டு.

இறப்பு: 1959-இல் மின்காந்த அலைகளைப் பயன்படுத்திப் பல குரங்குகளைப் அமெரிக்கர் கொன்றனர். அவற்றின் உடல்களை அறுத்துப்பார்த்தபொழுது உள்ளே நோய்க்கூறு எதுவும் தென்படவில்லை. ஆனால், மூளை அணுக்களில் பெருத்த அளவு அதிர்வுகள் ஏற்பட்டிருந்தன. எனவே, இத்தகைய இறப்புக் கதிர்களைக் கொண்டு (Death rays) மாந்தனை வதைக்காமல் வாட்டாமல் கொல்லலாம் என்பது உறுதியாகிவிட்டது. இரண்டாம் உலகப் போருக்கு முற்றுப்புள்ளி வைத்தவை அமெரிக்கா சப்பான் மீதில் வீசிய இரண்டு அணுக்குண்டுகளே. மூன்றாம் உலகப்போர் மூளுமானால், அதை முடிவு செய்வது இந்த இறப்புக் கதிர்களாகவே இருக்கும். இக் கதிர்களைப் பெரிய அளவில் உருவாக்கும் முயற்சியில் அமெரிக்காவும் உருசியாவும் தற்பொழுது மும்முரமாக ஈடுபட்டுள்ளன. இக்கதிர்கள் உயிருள்ள, உயிரற்ற பொருள்கள் யாவற்றையும் அழிக்க வல்லவை.

சிறப்பு: 'வானொலி','இராடார்', 'டிரான்சிஃச்டர்' முதலிய மின்னணுக் கருவி அமைப்புகள் [Electronic devices] மின்னோட்டங்களைப் பெருக்குபவை. ஆனால், துகள் மின்னணுக் கருவி அமைப்புகளோ [Quantum electronic devices] வானொலி அலைகளையே பெருக்கவல்லவை. இவை இயற்கையின் ஒளிவு மறைவுகளை மேலும் நன்கறிய உதவும். இதுவரை மாந்தன் அமைத்துள்ள புனைவுகளுக்கு இவை மணி முடியாக விளங்குகின்றன எனலாம்.

— ● —

முடிவிதற்கில்லை!

தென்கச்சி. கோ சுவாமிநாதன்.

வகுப்பில் நுழைந்தேன் மனம்வரவில்லை!
வாயைத் திறந்தேன் மொழிவரவில்லை!
உகுத்தேன் கண்ணீர் முடிவிதற்கில்லை!
உயர்தமிழ் இன்றி விடிவதற்கில்லை!

இருண்டு கிடக்கும் கரும்பலகையிலே–
'இராசேந் திரனின்' குருதியைக்கண்டேன்!
கருகிக் கிடக்கும் உடல்களைக் கண்டேன்!
காயம் அடைந்தோர் குற்றுயிர்கண்டேன்!

'மோகனைக்' கண்டேன்; 'தண்டபாணி'யுடன்–
முனீரும் 'சாரங்க பாணியும்'கண்டேன்.
ஈகமே நிறைந்த பொன்னுச்சாமியின்–
எழில்மற உடலும் கிடந்ததைப் பார்த்தேன்!

அருகில் இருந்த அவர்களைக் காணேம்.
அன்பே பெருகும் பேச்சுகளில்லை.
சிரித்த முகங்கள் சிரித்திடற்கில்லை!
சென்றஅந் நாட்கள் திரும்புதலில்லை.

தொகுத்தே நினைத்தேன், துணிவெனக்கில்லை.
தொல்லையை நினைத்தால் தணிவெனக்கில்லை.
உகுத்தேன் கண்ணீர் முடிவிதற்கில்லை!
உயர்தமிழ் இன்றி விடிவதற்கில்லை!

*

தென்மொழி, கடலூர்-2.

தனித்தமிழில் வெளி வரும் உயர்ந்த இலக்கிய விதழ்.
ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு.	கொழும்பு.	வெளி நாடு.
தனி இதழ்	50 காசு	60 காசு	75 காசு.
ஆண்டுக் கட்டணம்.	6 உருபா.	7–25 உருபா.	9 உருபா.

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

விளம்பரம்

அட்டை நான்காம் பக்கம்.	(இரு வண்ணம்)	100 உருபா.
,, ,, ,,	(ஒரு வண்ணம்)	75 உருபா.
உள்ளே முழுப் பக்கம்.		50 உருபா.
,, அரைப் பக்கம்.		25 உருபா.

தொடர்ந்த விளம்பரங்கட்கு எழுதுங்கள்.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

தொடர்-10.

தொடரோவியம் போர்மறவனும் காதலும்.

சியார்சு பெர்னுர்டு சா. தமிழில்: வழுதி.

இரெய்னு: (வேண்டுமென்றே வாய்த் துடுக்குடன்)...... ஆமாம். செருசியசுதான் உங்களுக்குச் ''செல்லம்''. எனக்கு மாருக நீங்களே அவரைத் திருமணம் செய்து கொள்ள முடிந் தால் நன்ருயிருக்கும். அவருக்குப் பொருத்தம் நீங்கள்தாம்... அவருக்குச் செல்லங்கொடுத்துக் கெடுத்து,... தாய் ஒருத்தியின் வேலையைத் திறம்படச் செய்ய உங்களால் முடியும்.

காதரின்: (கண்களை அகல விரித்து) அடி; பொல்லாத பெண்ணே!

இரெய்னு: (துடுக்குடன், தனக்குத்தானே பேசிக் கொள் வதுபோல) அவரைக் குத்தும்படி ஏதாவது செய்யவோ சொல்லவோ வேண்டும் என்று எப்பொழுதும் மனம் துடிக்கிறது. அவரின் மேம்போக்கான ஒழுக்கவுணர்வை அதிர்ச்சிக்காளாக்கி அவருடைய பொறியைக் கலக்கி... (தாயை நோக்கி, ஏறுக்கு மாருன போக்கில்) அந்த இனிப்பு நொறுவை மறவனைப்பற்றி அவர் தெரிந்து கொள்வதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. அப்படித் தெரிந்தாலே நல்லது என்றுகூட விருப்பமாயிருக் கிறது. (மீண்டும் திரும்பி வழியிலிருந்து விலகி வீட்டு மூலையை நோக்கி நடக்கின்ருள்.)

காதரின்: உன் அப்பாவுக்கு என்னடியம்மா விடை சொல்வது? சொல்லு!

இரெய்னு: (கழுத்தைமட்டும் சிறிது திருப்பிப் படிக்கட்டின் உச்சியிலிருந்து) அப்பாவை நினைத்தால் இரக்கமாக இருக் கிறது! அவருக்கு என்னதான் தெரியும்! (மூலையைக் கடந்து கண்ணுக்கு மறைந்து விடுகின்ருள்)

காதரின்: (அவள் போவதைப் பார்த்துக் கொண்டிருக் கின்ருர். விரல்கள் அவளைக் கிள்ளிவிடத் துடிக்கின்றன...)... உம்! பெரியவளாகப் போய்விட்டாய்... ஒரு பத்தாண்டு சிறிய வளாக மட்டும் இருந்திருந்தால்... (உலூக்கா கையில் தட்டைத் தூக்கிக்கொண்டு வருகின்ருள்)

உலூக்கா: யாரோ ஒருவர் தேடிவந்திருக்கிருர் அம்மா... செர்பியப் படைத்தலைவர்...

காதரின்: [சினத்துடன்] செர்பியனு...? என்ன துணிச்சல் .. [தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு] ஓ மறந்துவிட்டேனே! இப்பொழுதுதான் ஒப்புரவாகிவிட்டோமே! இனி நாள்தோறும் எவனுவது பாராட்டுத் தெரிவிக்க வந்தாலும் வருவான். சரி... ஏன் ஐயாவிடம் சொல்லாமல் இங்கே வருகிருய்? ஐயா நூல் நிலையத்தில் செருசியசு அவர்களிடம் பேசிக் கொண்டிருக்கிருர்.

உலூக்கா: அவர் உங்களைத்தான் பார்க்க வேண்டும் என்று சொல்கிருர். உங்களை என்ருல், உங்களைத் தெரியுமோ என்னவோ? வீட்டம்மாவைப் பார்க்க வேண்டும் என்ருர். இந்தச் சீட்டை உங்களிடம் கொடுக்கச் சொன்னுர். தன்மார்புப் புறத்திலிருந்து சீட்டினை எடுக்கின்ருள். தட்டில் வைத்து, காதரினிடம் நீட்டுகின்ருள்.

காதரின்: [சீட்டினை எடுத்துப் படிக்கிருர்.] ''படைஞன் பிளண்டுசிலி''? – செருமானியப் பெயராயிருக்கிறதே!

உலூக்கா: சுவிசுப் பெயராயிருக்கும் அம்மா.

காதரின்: [துள்ளிக் குதிக்கின்ருர் அதுகண்டு திகைத்து உலூக்காவும் துள்ளுகின்ருள்]. சுவிசா? ஆள் தோற்றம் எப்படி?

உலூக்கா: [மெலிவான குரலில்] கையில் ஒரு பெரிய பை வைத்திருக்கிருர் அம்மா.

காதரின்: அட கடவுளே! அவன்தான்! குப்பாயத்தைத் திரும்பக் கொண்டு வந்து விட்டான்! அவனை அனுப்பிவிடு...... நாங்கள் வீட்டில் இல்லை என்று சொல்லிவிடு......... அவன் முகவரியைக் கொடுத்து விட்டுப் போகச் சொல். நான் பிறகு மடல் எழுதிக் கொள்கிறேன். நில்லு! அது போதாது கொஞ்சம் பொறு. [என்ன செய்வதென்று சற்று ஆர அமர எண்ணுவதற் காக நாற்காலியில் அமர்கிருர். உலூக்கா காத்து நிற்கின்ருள்]. ஐயாவும் செருசியசும் நூல் நிலையத்தில் வேலையில் மும்முரமாக இருக்கின்றனர். இல்லையா?

உலூக்கா: ஆமாம் அம்மா!

காதரின்: [முடிவான குரலுடன்] அந்த ஆளை உடனே இங்கழைத்துவா. [கண்டிப்பாக] அவரிடம் மிகவும் பணிவாக நடந்துகொள். தெரிகிறதா? காலம் தாழ்த்தாதே. இதோ பார்! [தட்டைப் பிடித்திழுத்து] அதை இங்கேயே வைத்துவிட்டு, நேராக அவரைப்போய் அழைத்துவா.

உலூக்கா: சரி அம்மா. [போகிருள்.]

காதரின்: நில்லு! நில்லு!-(உலூக்கா நிற்கிறாள்) அவரை அதோ அந்த வழியாக அழைத்து வா. (கொட்டடிக் கதவைச் சுட்டுகின்றாள்) அவருடைய பையை இங்கே எடுத்துக்கொண்டு வரும்படி நிகோலாவிடம் சொல்...

உலூக்கா: [வியப்புடன்] பையையா? இங்கேயா?

காதரின்: ஆமாம் .. இங்கேதான் விரைவாக! [கடுமையாக]சடுத்தமாகப் போ [உலூக்கா வீட்டினுள் விரைகின்றாள். காதரின், மேல் போர்வையை எடுத்துப் புதரின் பின்புறம் வீசி எறிகின்றார். தட்டினைக் கையில் எடுத்து அதில் முகத்தைப் பார்த்துக் கொள்கிறார்... தலையில் சுற்றிக் கட்டியிருந்த கைக் குட்டையையும் வீசி எறிகின்றார். குழலைச் சிறிது ஒதுக்கி... ஆடையைச் சிறிது திருத்திச் சரிப்படுத்திக் கொள்கின்றார்.] ஐயோ!... எப்படித்தான்...! எப்படித்தான் ஒருவன் இவ்வளவு முட்டாள்தனமாக நடந்து கொள்கிறானோ! போயும் போயும் இப்பொழுதா வந்து தொலைய வேண்டும்? [உலூக்கா வாசலில் வந்து, பிளண்டுசிலி வருவதை அறிவிக்கின்றாள். படிக்கட்டின் உச்சியில் விலகி நின்று கொண்டு வழிவிடுகின்றாள். மீண்டும் உள்ளே செல்கிறாள். வந்திருப்பவன் முன்பு இரெய்னாவின் அறையில் நுழைந்த மறவன். இப்பொழுது தலைவாரி, உடை திருத்தமாக அணிந்து, தூய்மையாகவும், கலகலப்பாகவும் காட்சியளிக்கின்றான்; எனினும் அதே ஆள்தான்......சிறிதும் மாறவில்லை உலூக்கா உள்ளே சென்றவுடனேயே, காதரின் குபீரென அவன்மேல் பாய்ந்து மிரட்டலும் கெஞ்சலும் கலந்த குரலில், பரபரப்பாக பேசத் தொடங்குகின்றார்] பிளண்டுசிலி, நீ வந்தது மிகவும் மகிழ்ச்சி .. ஆனால் உடனே நீ இங்கிருந்து போய்விடவேண்டும் [அவன் புருவத்தை உயர்த்துகிறான்] என் கணவர், எங்கள் வருங்கால மருமகனோடு இப்பொழுது தான் போரிலிருந்து திரும்பி வந்திருக்கிறார் அவர்களுக்கு ஒன்றுமே தெரியாது. அவர்கட்குத் தெரிந்தால், விளைவு மிகவும் கடுமையாயிருக்கும். நீயோ வெளிநாட்டுக்காரன். எங்கள் தேசியப் பகைமை உணர்வுகளை எல்லாம் எங்களைப் போல உன்னால் உணர்தல் முடியாது. செர்பியர்கள் என்றால் இன்னும் வெறுப்புத்தான் .. இந்த அமைதி உடன்படிக்கையே என் கணவருக்குப் பிடிக்கவில்லை. இரையை இழந்த அரிமாவைப்போலக் குமுறிக் கொண்டிருக்கிறார். நம்முடைய கமுக்கம் அவருக்குத் தெரிந்தால் என்னை மன்னிக்கவே மாட்டார். என் மகள் வாழ்க்கையே போய்விடும் அருள் கூர்ந்து அவர் கண்ணில்படாமல் இங்கிருந்து போய்விடு. அதுதான் உன் பண்புக்கும் பெருமைக்கும் அழகு.

பிளண்டுகிலி: [ஏமாற்றமடைந்து, ஆனால் மனத்தைத் தேற்றிக்கொண்டு] இதோ, உடனே போய்விடுகிறேன்........

அந்தக் குப்பாயத்தைக் கொடுத்துவிட்டு நன்றி தெரிவித்துப் போகலாம் என்றுதான் வந்தேன். போகும் வழியில் அதைப் பையிலிருந்து எடுத்து உங்கள் ஏவலாளிடம் கொடுத்துவிடு கிறேன்; அதற்குமேல் இங்கே நிற்கமாட்டேன். [வீட்டுக்குள் போகத் திரும்புகின்றான்.]

காதரின்: (அவன் கையைப்பற்றி இழுத்து...) அய்யோ. அந்த வழி வேண்டா. [கொட்டடி வழியைக் காட்டி...கெஞ்ச லுடன்]...இதோ பார்...இதுதான் குறுக்கு வழி... மிகவும் நன்றி ...மகிழ்ச்சி...வணக்கம்.

பிளண்டுசிலி: என்னுடைய பை?

காதரின்: இருக்கட்டும் பிறகு அனுப்பி வைக்கிறேன். முகவரி கொடுத்துவிட்டுப் போ.

பிளண்டுசிலி: ஆகட்டும்; இதோ! தருகிறேன். [அட்டை யொன்றை எடுத்து முகவரியை எழுதுகிறான்...... காதரின் பொறுமை யிழந்து துடிக்கின்றார். முகவரியை அவர் கையில் கொடுக்கப்போகும் வேளையில் பெட்காஃப் வெறுந் தலையுடன் குடுகுடுவென்று ஓடிவருகிறார்......, விருந்தினரை வரவேற்கும் பாங்கில்... செருசியசு பின்னால் ஓடி வருகின்றான்.]

பெட்காஃப்: (படிகளை விட்டிறங்கிக் கொண்டே) படைஞர் பிளண்டுசிலி அவர்களே, வருக, வருக!

காதரின்: அட, கடவுளே! (சுவர் அருகிலுள்ள இருக் கையில் சாய்ந்து விடுகிறார்)

பெட்காஃப்: (பிளண்டுசிலியைப் பார்த்த மகிழ்ச்சியில் மனைவியைக் கவனிக்காமல், அவன் கையைப் பற்றிக் குலுக்கு கிறார்) நான் ஆ! நூல் நிலையத்தில் இருந்தேன் (நூல் நிலையம் என்று சொல்லும்பொழுதே பெருமை பொங்கி வழிகின்றது...) அந்த முட்டாள்கள் என்னவென்றால் நான் இங்கே இருப்பதாக நினைத்துக்கொண்டு உன்னை இங்கேஅழைத்து வந்துவிட்டார்கள் போலிருக்கிறது. நீ வருவதை நான் பலகணி வழியாகப் பார்த் தேன்...இவ்வளவு நேரம் உள்ளே வராமற்போகவே வியப்பாக இருந்தது. சாரனூஃப் என்னோடுதான் இருக்கிறான். அவனை நீ நினைவில் வைத்திருப்பாய்... இல்லையா?

செருசியசு: (நகை தோன்ற அவனை வணங்கி, மிகவும் நாகரிக மிடுக்குடன் அவன் கைகளைக் குலுக்கி)...... பகை நண்பரே, வருக வருக.

பெட்காஃப்: நல்லவேளை... இனிமேல் 'பகை' என்பது இல்லை (திடீரென்று கவலையுடன்) நட்புமுறையில்தானே காண வந்திருக்கிறாய்? குதிரைகளைப் பற்றியோ, குற்றவாளிகளைப் பற்றியோ பேசி முடிப்பதற்கில்லையே!

காதரின்: நட்பு முறையில்தான்... நட்பு முறையில்தான். நண்பகல் உணவுக்கிருந்து போகச் சொல்லுகிறேன் நான். அவர்தாம் உடனே போகவேண்டும் என்று துடிக்கிருர்...

செருசியசு: (எள்ளல் கலந்த வலிந்த நகைக்குறிப்புடன்) கூடாது பிளண்டுசிலி, போகக்கூடாது உன் உதவி எங்கட்கு மிகவும் தேவை... மூன்று குதிரைப் படைப் பட்டாளங்களைப் பிலிப்பாப் பொலிசுக்கு அனுப்பவேண்டும்...எப்படி அனுப்புவது என்றுதான் தெரியவில்லை.

பிளண்டுசிலி: (உடனே பேச்சில் கவனம் செலுத்தி... வேலைக் கருத்துடன்) பிலிப்பாப் பொலிசுக்கா? குதிரைத் தீனி கிடைப்பதுதான் தொல்லை... இல்லையா?

பெட்காஃப்: (துடிப்புடன்) ஆமாம்! அதுதான்! அதுதான் (செருசியசை நோக்கி)-பார்த்தாயா? ஆள் உடனே எல்லா வற்றையும் புரிந்து கொள்கிருன்!

பிளண்டுசிலி: அதை எப்படிச் சமாளிப்பது என்பதை நான் சொல்லுகினே்...

செருசியசு: விலை மதிப்பில்லாத ஆள் ஐயா நீ! வா, வா. (பிளண்டுசிலி அருகில் சென்று தோளில் கையிட்டு உள்ளே அழைத்துச் செல்கிருன். பெட்காஃப் பின் தொடர்கிருர். பிளண்டுசிலி படியிற் கால்வைக்கும் பொழுது இரெய்னு எதிர்ப் படுகின்ருள்)

இரெய்னு: ஓ! இனிப்பு நொறுவைப் போர் மறவர்! (பிளண்டுசிலி விறைத்துப்போய் நிற்கிருன். செருசியசு திகைத்துப்போய் இரெய்னுவையும், பின்பு பெட்காஃபையும் பார்க்கிருன். பெட்காஃப் செருசியசையும் மனைவியையும் மாறிமாறிப் பார்க்கிருர்)

காதரின்: (காலத்துக் கேற்றபடி நிலைமையைச் சமாளிக்கும் வகையில்... திறமையோடு) இரெய்னு, விருந்தாளி வந்திருக்கிருர் தெரியவில்லை? இவர்தாம் படைஞர் பிளண்டுசிலி! நமது புதிய செர்பிய நண்பர்களுள் ஒருவர்.

(இரெய்னுவும், பிளண்டுசிலியும் ஒருவர்க்கொருவர் தலை வணங்குகின்றனர்.)

இரெய்னு: நான் ஒரு முட்டாள்! [கீழே இறங்கி வந்து, நிற்பவர்கள் இடையில் பிளண்டுசிலிக்கும், பெட்காஃபுக்கும் நடுவில் நிற்கின்ருள்] இன்று காலையில் நான் இனிப்பு நொறுவைக்குப் பூவேலை செய்து வைத்திருந்தேன். அந்த மூட்டாள்... நிகோலா அதன்மேல் தட்டுகளை வைத்து நசுக்கிவிட்டான். [பிளண்டுசிலியிடம், திறம்பட உரைக்கின்ருள்]-உங்களைத்தான் அப்படிக் கூறிவிட்டேன் என்று நீங்கள் நினைத்துவிடவில்லையே

பிளண்டுசிலி: [நகைத்து] .... நான் அப்படித்தான் நினைத்துவிட்டேன். [கள்ளப் பார்வையோடு]...... நீ விளக்கம் சொன்ன பிறகுதான்... புரிந்தது.

பெட்காஃப்: [ஐயப்பாட்டுடன், இரெய்னாவிடம்] எப்பொழுதிருந்தம்மா நீ சமையல் வேலை கற்றுக் கொள்கிறாய்?

காதரின்: நீங்கள் போருக்குப் போயிருந்தபொழுது; இப்பொழுது கொஞ்ச நாளாய் அதுதான் அவளுக்குப் பொழுது போக்கு.

பெட்காஃப்: [எரிச்சலுடன்]நிகோலா குடிக்கத்தொடங்கி விட்டானா? அவன் மிகவும் ஒழுங்காயிருப்பானே? முதலில், நான் நூல் நிலையத்திலிருக்கிறேன், அது தெரிந்தும்கூட அவன் பிளண்டுசிலியைத் தோட்டத்துக்கு அழைத்து வந்துவிட்டான். பிறகு என்னவென்றால், கீழே இறங்கிப்போய் இரெய்னாவின் இனிப்பு நொறுவையை நசுக்கியிருக்கிறான்.. ... அவனை ...... [நிகோலா படிக்கட்டின் உச்சியில், கையில் பையுடன் தோன்றுகின்றான். கீழே இறங்கி வந்து பையை பிளண்டுசிலியின் முன் பணிவோடு வைத்துவிட்டு விலகி நின்று கொண்டிருக்கிறான்... கட்டளை எதிர்பார்த்து ஒரே திகைப்பு நிலவுகின்றது. நிகோலா ஒன்றும் அறியாதவனாக, தன்னிறைவோடு நிற்கிறான். பெட்காஃப் திகைப்பு நீங்கி அவன்மேற் பாய்கிறார்.]

என்னடா, உனக்குக் கிறுக்குப் பிடித்துவிட்டதா?

நிகோலா: [திகைத்து]... ஐயா!

பெட்காஃப்: அதை ஏன் இங்கே கொண்டுவந்திருக்கிறாய்?

நிகோலா: அம்மா சொன்னபடிதான் செய்தேன் ஐயா. உலுக்காதான் சொன்னாள்...

காதரின்: [குறுக்கிட்டு,] நான் சொன்னபடியா? பிளண்டுசிலியின் பையை இங்கு எடுத்துவா என்று நான் சொன்னேன்? என்னப்பா நினைக்கிறாய் நிகோலா?

நிகோலா: [ஒரு நொடி பெருந் திகைப்புற்றுப் பின்பு, பையைக் கையில் எடுத்துக்கொண்டு மிகவும் அடக்க ஒடுக்கத்துடன் பிளண்டுசிலியை நோக்கி] மன்னிக்க வேண்டும் ஐயா... [காதரினை நோக்கி] என் தவறுதான் அம்மா...... மன்னித்து விடுங்கள் [தலைவணங்கிக் கையில் பையுடன் படிக்கட்டில் ஏறச் செல்கிறான். பெட்காஃப் சினத்துடன் அவனை நோக்கி] போடா, போய் அந்தப் பையையும் கொண்டுபோய் இரெய்னாவின் நொறுவைமேல்போட்டு நசுக்கு. [நிகோலாவுக்குத் தாங்க முடியவில்லை. அவன் கையிலிருந்த பை, நழுவிப் பெட்காஃபின் காலடியிலேயே விழுகிறது. பெட்காஃபின் சினம் மிகுகிறது.

பெட்காஃப்: நில்லாதே போடா, வெண்ணெய் வெட்டிக் கழுதை!

நிகோலா: சரி ஐயா. (பையை எடுத்துக்கொண்டு வீட்டுக்குள் ஓடுகிறான்...)

காதரின்: போகட்டும்... ஒன்றுமில்லாதது விட்டுவிடுங்கள் சினம் வேண்டா.

பெட்காஃப்: (உறுமுகிறார்) போக்கிலிப் பயல். நான் இல்லாத பொழுது ஆள் கையை மிஞ்சிப் போய் விட்டான்! பொல்லாத கயவாளிப் பயல்! காரிக்கிழமை வரட்டும் அவனைத் தீர்த்துக் கட்டிவிடுகிறேன்... இந்த வீட்டில் உள்ள எல்லா வேலைக்காரர்களையும் விரட்டிவிடுகிறேன். (காதரினும் இரெய்னாவும் அவரை நெருங்கி நின்று கழுத்தைக் கட்டிக்கொண்டு கெஞ்சியும், குலவியும் அவரைப் பேசவிடாமல் செய்துவிடுகின்றனர்.)

காதரின்: வேண்டா; வேண்டா; சினம் வேண்டா. அவன்...

இரெய்னா: நல்ல அப்பா! இன்றைக்குத்தான் வந்திருக்கிறீர்கள்; அதற்குள்...

காதரின்: ஒன்றும் வேண்டுமென்றே தப்புச் செய்யவில்லை. எனக்காகச்...

இரெய்னா: சினம் எதற்கு? நான் வேறொரு நொறுவை ...

காதரின்: .... சினம் அடங்குங்கள்... அருள்கூர்ந்து.

இரெய்னா: செய்துவிடுகிறேன். த்சு, த்சு ..

பெட்காஃப்: (தணிந்து)... சரி... தொலைந்துபோகட்டும்... பிளண்டுசிலி!... வா... போகவேண்டும் என்று உளறிக் கொண்டிராதே. என்ன நீதான் சுவிட்சர்லாந்துக்கு இப்பொழுது போகப் போவதில்லையே... அதுவரைக்கும் எங்களோடேயே தங்குதல்வேண்டும்.

இரெய்னா: ஆமாம். அப்படியே செய்யுங்கள், பிளண்டுசிலி!

பெட்காஃப்: (காதரினை நோக்கி) காதரின், நீ ஒன்றும் சொல்லவில்லையே என்றுதான் அவன் தயங்குகிறான், நீ வற்புறுத்திச் சொன்னால் தங்கிவிடுவான்.

காதரின்: ஓ..., பிளண்டுசிலி உண்மையாகவே இருந்து போக விரும்பினால்... எனக்கு மகிழ்ச்சி இல்லையா என்ன? என் விருப்பம் அவருக்குத் தெரியும்.

பிளண்டுசிலி: (வறண்ட, தன் பட்டாளப் பாணியில்) அம்மா சொன்னபடி நான் செய்யக் காத்திருக்கிறேன்.

– புதுவை. முதுகண்ணன்.

உணர்வால் உணர்வீர்க்க ஒன்றுமுடல் இன்பப்
புணர்வால் படைப்பைப் புகட்டத்-துணர்வாய்
மணக்கும் பொலிகுழலாய்! மன்னுமுயர் தாய்மை
இணைக்கும் உடலுயிரை ஈங்கு

இருளிருக்கும் வாழ்வை எழிலாக்கல் தாய்மை
அருளிருக்கும் பண்பால் அமையும் -பொருளிருக்கும்
மண்ணகத்தின் சீர்வேண்டும் வாணுதலாய்
கண்ணகத்த தாகும் கரு. [நின்னுளத்தின்

''மனநலத்தின் ஆகும் மறுமை மற்றஃதும்
இனநலத்தின் ஏமாப் புடைத்து''-வினைநலத்தின்
சேய்பிறக்கக் காட்டும் தெளிவறிக! வாய்மொழீ!
தாய் சிறக்கக் கூட்டும் தகவு.

வாய்மையும் நாணும் வழுவா தொழுகலால்
தூய்மையாம் நெஞ்சம் சுடரிழாய்! – தாய்மை
எடுத்தூட்டும் இவ்வுலகை இன்பத்தின் பேருய்
அடுத்தூட்டும் பிள்ளை அமிழ்து.

தாயின் வயிறே தவழ்நிலமாய் ஆவிவளர்
சேயின் உடற்குத் திகழ்நெஞ்சம் – ஆயின்
விசும்பாய் விளங்குமே மென்மொழீ! தாய்மைப்
பசுங்கொடி தாங்கும் படைப்பு.

பண்விரும்புந் தீஞ்சொல் பயன்மொழியாய்! நல்லறத்துப்
பெண்விரும்பும் மேன்மக்கட் பேறதனுல் – கண்விரும்பும்
காட்சி விருந்தூட்டிக் கால்வழியைத் தாங்கு குடி
மாட்சி விளங்கவரும் வாழ்வு.

கலைகண்ட முந்தைக் கழகத்தார் பண்பின்
தலைகண்ட வாழ்வு தழைக்க – நிலைகண்ட
நெஞ்ச நினைப்பால் நிறைசெய்; நிறைமதியே!
கொஞ்ச வருந்தாய்மை கொண்டு.

அன்பே! அருளே! அறிவே! தமிழ்தரும்
இன்பே! எழிலே! எனத்தோன்றும் – பண்பே
உருக்கொண்ட மக்கட்பே றுண்டென்க; பாவாய்!
கருக்கொண்ட தாய்மையைக் காத்து.

செருசியசு: (நட்புணர்வுடன்) அப்படியானுல் முடிந்தது.
பெட்காஃப்: (மகிழ்வுடன்) கட்டாயமாக!
இரெய்னு: .. பாருங்கள்! தங்கியே ஆகவேண்டும்.
பிளண்டுசிலி: சரி... தங்கவேண்டுமென்ருல், தங்கித்தான்
ஆகவேண்டும் (காதரின் அஞ்சி நடுங்குகிருர்) (தொடரும்)

அறிவுத்திறன்! (INTELLIGENCE)

தோற்றுவாய்: உலகில் வாழும் உயிர்கள் அனைத்திற்கும் அறிவு உரித்தாயினும் நன்றிது, தீதிது எனப் பகுத்தறியும் அறிவு உயர்நிலை உயிர்களுக்கே உரியதாம். 'மாவும்மாக்களும் ஐயறிவினவே, மக்கள் தாமே ஆறறிவுயிரே' என்றமை காண்க. அத்தகு அறிவுத்திறன் பற்றிய அறிவை உளவியல் ஓங்கி வளர்ந்துள்ள இந்நாளில் பெறவிழைதல் இயல்பன்றோ?

அறிவுத்திறன் என்பதென்ன?

படித்துப் பட்டம் பெற்றதனால் மட்டும் ஒருவனுக்கு அறிவுத் திறன் மிக்குள்ளது என்றும், பெருமையினால் குறைவுள்ளது என்றும் கூறல் இயலாது அறிவுத்திறன் intelligence) வேறு; கல்வித்திறன் (intellect) வேறு. கல்லாத அறிஞரும், கற்ற மூடரும் உளரன்றோ? அறிவுத் திறன் என்பது ஒருவன் தன் சிக்கல்களுக்கு முடிவுகாணும் முறையும், சுற்றுப்புறத்திற்கேற்ப ஒழுகும் திறனுமாம். புதியதொரு சூழலுக்கேற்பச் செயல் படும் திறனை அறிவுத்திறன் என்பர் சிலர்.

> ''உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
> கல்லார் அறிவிலா தார்'' என்றும்
>
> ''எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு''

என்றும் பண்டே தெய்வப்புலவர் தெளிவுறக் கூறிச் சென்றமை காண்க. அறிவுத் திறனாய்வுகளில் ஈடுபட்டோரில் இசுபியர்மன் (C. E. Spearman) என்பார் குறிப்பிடத்தக்கவராவர். ''நமது பட்டறிவைப் பயன் படுத்திப், பொருள்கட்கிடையே உள்ள தொடர்பைக் காணலே அறிவுத்திறன்'' என்பர் அவர். அறிவுத்திறன் என்பது பெருமூளையின் ஆற்றல் என்பது அவர்தம் கருத்து.

அறிவுத்திறன் வேறுபாடு:

மக்களிடை அறிவுத்திறன் பலவாறு வேறுபடுகின்றது. ஆயினும் அறிவுத்திறனில் நடுத்தரமாய் (Average) உள்ளோரே ஏராளம். அறிவுத்திறன் மிக்க வல்லுநரும், குறைந்த மூடரும் சிலரே. அறிவுத்திறன் குறைவிற்கு நரம்பு மண்டலத்தில் ஏற்படும் ஊறுகளும் காரணமாய் அமையும். எவ்வாறாயினும் அறிவுத்திறன் குறைந்த மூடரை, மருத்துவத்தின் மூலம் சரி செய்தல் அரிதே!

அறிவுத்திறனறி தேர்வுகள்: (Intelligence Test)

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் நடத்தப் பெறும் தேர்வுகள் கல்வித்திறனையே காட்டும். ஆனால் அறிவுத்திறனை அளக்கச் சிறப்பான தேர்வுகளை உளவியலார் அமைத்துள்ளனர். இத் துறையில் ஆல்பிரடு பினே (Alfred Binet) அறிவுத்திறனறி தேர்வுகளை அமைத்தார். 1905 இல் அவர் சிறுவர்களுக்காக அறிவுத்திறனறி தேர்வுகளைப் பின்வருமாறு அமைத்துக் கொடுத்தார்.

1. படத்திலுள்ள பொருள்களின் பெயர்களைக் கூறுதல்
2. மூன்றிலக்க எண்களை நினைவு கூர்தல்
3. இல்லம், அன்னை, முட்கரண்டி – விளக்கம் தருதல்
4. தொடர்களை முடித்தல்
5. தாள் – அட்டை – வேறுபாடு கூறுதல்

இவ்வாறு தோன்றிய அறிவுத்திறனறி தேர்வுகள் பிற்காலத்தில் நன்கு வளம் பெற்றன.

சில வருமாறு:

1 முடிக்க: குயில் கூவும்
மயில் ......
காக்கை ......

2. வகைப்படுத்துக: கீழ்கண்ட ஐந்தினுள் நான்கு ஒரு வகையைச் சாரும். தனித்த ஒன்றினைப் பிரித்தெடுக்க.

(எ–டு) 1. கரிகாலன், இளங்கோ, மாதவி, நெடுஞ்செழியன், (அக்பர்.

(விடை) இவற்றுள் 'மாதவி' தனித்தது ஏனெனில்மற்றயவை ஆடவர் பெயர்களாம்.

2. ஊருணி, ஏரி, ஆறு, கடல், கிணறு.

(விடை) இவற்றுள் 'ஆறு' தனித்தது. ஏனெனில் மற்றையவை நிலையான நீர்த்தேக்கங்களாம்.

இவ்வாறன மொழிவழித் தேர்வுகளான்றிச் செய்முறைத் தேர்வுகளும் உள்ளன. அவையே சிறந்தனவாகக் கொள்ளப் பெறுகின்றன. (எ–டு) 1. கொடுக்கப் பெற்ற துண்டுக்கட்டைகளைக்கொண்டு உருவங்கள் அமைத்தல்.

2. தொடர் நிகழ்ச்சிகளைக் காட்டும் படங்களை வரிசைப் படுத்துதல்.

3. பலகையொன்றில் வெட்டப் பெற்றுள்ள பலவகைப் பள்ளங்களில் தக்க வடிவக்கட்டைகளைப் பொருத்துதல். இத்தகு அறிவுத்திறனறி தேர்வுகள் அவரவர் அகவைக்கேற்ப அமைக்

பெறும். குறித்த அகவைப் பருவத்தாருக்கு (Age-group) குறித்த தேர்வுகளே தரப்பெறும். மேலும் தேர்வினை முடிக்க எடுத்துக் கொள்ளப் பெறும் நேரமும் மிகவும் கவனிக்கத் தக்கதாகும்.

அறிவுத்திறனளவை. (Intelligence Quotient)

உளவியலில் ஒருவரின் அகவையை ஆண்டகவை (Chronological age) என்றும், அறிவகவை (Mental age) என்றும், பிரித்துக் கொள்வர் ஆண்டகவையாவது, ஒருவர்தம் பிறந்த நாளைக்கொண்டு கணக்கிட்டு நாம் அகவை என வழங்குவதே. அறிவகவை ஒருவரது அறிவுத்திறனைப் பொறுத்துக் கணக்கிடப் பெறுவதாகும். ஒவ்வோர் அகவைப் பருவத்தாருக்கும் உரிய அறிவுத்திறனறி தேர்வுகள் உண்டென முன்னரே கண்டோம். இவற்றுள் ஒருவர் எந்தப் பருவத்தினருக்கு உரிய தேர்வில் வெற்றி பெறுகின்றாரோ அஃதே அவர்தம் அறிவகவையாம். (எ-டு) பத்து அகவைப் பருவத்தினருக்கென்று அமைக்கப் பெற்ற தேர்வில் ஒருவன் வெற்றி கண்டு மேல் தேர்வுகளில் தவறிவிடுவான் ஆயின் அவன் அறிவகவை பத்து. ஆனால் ஒருவனது ஆண்டகவையும் அறிவகவையும் ஒன்றி இருக்க வேண்டுவதில்லை. ஏனெனில் அறிவுத்திறன் மிக்க ஒருவன் ('அ') பத்து ஆண்டகவையினனாயினும் பன்னிரண்டு அகவைப்பருவத்திற்குரிய தேர்வில் வெற்றி பெறலாம் அவ்வாறாயின் அவனது அறிவகவை—12 ஆண்டகவை—10. அவ்வாறே, அறிவுத்திறன் குறைந்த ஒருவன் ('ஆ') 12 ஆண்டு அகவையினனாயினும், பத்து அகவைப் பருவத்திற்குரிய தேர்வில் மட்டுமே வெற்றி பெறின், அவனது அறிவகவை—10 ஆண்டகவை—12.

இவ்வாறு கண்ட அகவைகளைக் கொண்டு அறிவுத்திறன் அளவைப் (Intelligence Quotient) பின்வருமாறு கணக்கிடலாம்.

$$\text{அறிவுத்திறனளவை} = \frac{\text{அறிவகவை} \times 100}{\text{ஆண்டகவை}}$$

$$\text{I. Q.} = \frac{\text{Mental age} \times 100}{\text{Chronological age}}$$

இதன்படி.

$$\text{'அ' வின் அ. திறனளவு} - \frac{12}{10} \times 100 = 120$$

$$\text{'ஆ' வின் அ திறனளவு} = \frac{10}{12} \times 100 = 83.3.$$

னர். அதனல் இப்பேராற்றலுக்கு வேறு பொருட்டுகளைத்தேட வேண்டியதாயிறறு. இறுக்கமான உற்கைகள் (Meteors) தொடர்ந்து ஞாயிற்று மேற்பரப்பில் விழுவனும் அவ்வாற்ற லுக்குப் பற்ருதன.

"இம் மண்ணுலகே ஞாயிற்ருெடு சேர்ந்து ஆற்றல் அளித்தாலும், அவ்வாற்றல் ஞாயிற்றின் ஆற்றலொடு நூறு ஆண்டுகளே கூடும். அதன் ஆறறல் அதனமேற் பொழியும் பொருள்களின் ஆற்றலைச் சார்நதிருக்குமாருல், மூனறுகோடி ஆண்டுகளில் ஞாயிற்றின எடை இருமடங்காகியிருத்தல வேண்டும் நமஒளி ஞாயிறு ஒவ்வொரு நாளும் 360,000,00000 பெருங்கல் எடையை இழந்து வருகிறது இவ்வெடையிழப்பு ஒருநொடிக்கு 40 இலக்க பெருங்கல் எடையாகும். இவ்வளவு பேராறறலை ஞாயிறு இழந்து போனலும், நம் கட்புலனுக்கு அது சுருங்கியதாகவே தெரியவிலலை. இவ்வாற்றலை வெளியிட ஆன எடை 2,000,000000,000000,000000,000000 பெருங் கல்லாம். முனனைப் பொழுதில் ஞாயிற்றின் கதிர்ப்பேராறறல மிகக் கடுமையானதாய் இருந்தாலும, போகப்போக ஆற்றல குறைந்து வருகிறது நம்முடைய ஞாயிறறைக் காட்டிலும் எடையிலும் வெப்பத்திலும மிகுந்த மறற ஞாயிறுகள் இவ்வள வினும் மிகுதியான ஆற்றலை இன்னும் விரைவாகக் கழித்துக் கொண்டிருக்கின்றன." என்று சேம்சு சீன்சு (James Jeans) என்பார் கூறுவர். எசு. தோராதசு (Doradus) என்ற உடு நம் ஞாயிறறைக் காட்டிலும் விரைவாக 3000,000 மடங்கு மிகுதியாக ஆற்றலை வெளியேற்றிக் கொண்டிருக்கிறது.

சி. (G) எச் தார்வின், திங்கள் பிறந்து 50,00,00000 முதல 1000,000000 ஆண்டுகள்வரை ஆயிருக்கும்" என்று கூறுவதால், ஞாயிற்றின் தோற்றம், இவற்றை விளங் கியலார் (Physicists) குறித்ததினும மிகுந்தது கதிரியம் (Radium) என்ற தனிமக் கண்டுபிடிப்பு, ஞாயிற்றின் சுருக்கத் திற்குச் சான்ருய் அமைகின்றது. இருபத்திரண்டு சிறு குவளை (Ounces) அளவுள்ள கதிரியத்தினின்று ம் புறப்படும் ஆற்றல, 12,000 பெருங் கல்லெடை (Tons) உள்ள ஒரு கப்பலைக் கடலில் 6000 கல் தொலைவிற்குச் செலுத்தும். கதிரியக்கத் தன்மையை ஞாயிறு பெற்றுள்ளது என்பது வெள்ளிடைமலை. ஞாயிற்றின் எடையில் முன்னூறாயிரத்திலொரு பங்கு கதிரிய மாக இருந்தால், வெப்ப ஆற்றல் 1,000,000000 ஆண்டு களுக்கு நீண்டுவரும். அல்லாககால், அதன் சுருக்கம், உற்கை வீழ்ச்சி (Fall of meteors), கதிரியக்கவினை முதலியவை, ஞாயிற்றின் வெப்ப, ஒளியாற்றல் வெளியேறுவதை ஈடு செய்யா.

இற்றை விளங்கியல் (Modern physics), வேறொரு முறையைக் கூறுகிறது. பொருள் அழிந்து ஆற்றலைக் கதிர்களாக வெளிவிடுதலே அது கூறும் முறை. இம்முறையில்தான் அணுக்குண்டும் செயல்படுகிறது. பளுவான ஒருடு, பளுவற்றதாக மாறிக்கொண்டு வருகிறது. இதற்குக் காரணம் என்னவென்றால் பொருள்களில் உள்ள அணுக்கள் கதிர் வீச்சாற்றலாக மாறுவதேயாம். கதிர் வீச்சு எடையுடையதே அவை. உடுவினின்றும் வெளிப்போந்தவுடன், அவற்றால் உடுக்களுக்கு ஏதம் ஏற்படுவதில்லை. பொருளும் ஆற்றலும் அழிக்க முடியாதனவாய் இருந்தாலும், பொருளை ஆற்றலாகவும், ஆற்றலைப் பொருளாகவும் மாற்ற முடியும். வெப்பம, ஒளி, ஒலி, மின்னம் ஆய எல்லாம் ஆற்றலின் வேறு வேறு வடிவங்களே! பொருளழிவுக் கொள்கை (Annihilation hypothesis) மேற்கூறிய பட்டியலில் பொருளையுஞ் சேர்த்துப் பொருளும் ஆற்றலின் ஒரு நிலையே என விளக்குகிறது.

ஞாயிற்றின் தோற்றக்காலத்திலே, ஏறத்தாழ 750,000000,000000 ஆண்டுக்காலத்தில், கழிபேராற்றல் நேர்மின்னிகளிலும், (Protons) பொதுமின்னிகளிலும் (Neutrons), எதிர்மின்னிகளிலும் (Electrons) பொதிந்து வைக்கப்பட்டது. அவற்றால் ஆனதே அணுவாகும். அப்பொருள்களிலுள்ள ஆற்றலையெல்லாம் வெளியேற்றி விடுவதால் அப்பொருள்கள் அழிகின்றன. எனினும் இந்நிலை இன்னும் பலகோடி ஆண்டுகள் நிலைக்கும். ஒரு விரற்கடைப் பெருக்கத்தினின்றும் 50குதிரைத் திறன் மேனியாக ஞாயிற்றின் மேற்பரப்பிலிருந்து ஆற்றல் வெளியேறுவதாக சேம்சு சீன்சு அறிந்து கூறுகிறார். எனினும், ஓராண்டிற்கு 15,000000,000000 அணுக்களில் ஓரணுவின் பிளவே இப்பேராற்றலைத் தருகின்றது இதை எங்ஙனம் எடுத்துரைப்பது? 50 குதிரைத்திறன் மேனியாக ஆற்றல் வெளிவரும் அவ்வொரு விரற்கடைப் பெருக்கத்தின் முனை ஞாயிற்றின் நடுவில் சென்று முடிகின்றது. அதன் நீளம் 433,000 கற்களாகும். இத்தகைய ஒரு கொடுமுடியில் அமைந்து கிடக்கும் எண்ணிக்கையை சேம்சு சீன்சு, 1,000,000000,000000,000000,000000,000000 அல்லது 10^{33} அணுக்கள் என்றும், இவ்வெண்ணில், 2,000000,000000 அணுக்கள் நொடிதோறும் பிளக்கப்படுகின்றன வென்றும் கூறியுள்ளார். இவ்வாறு வெளியேறும் ஆற்றல், ஞாயிற்றினுள்ளே பிளக்கப்படும் அணுக்களாலேயே தோற்றப்படுகின்றது. ஞாயிற்றின் ஆற்றலில் நம் மண்ணுலகம் பெறும் ஆற்றல் $\frac{1}{2,200,000,000}$ பாகமாகும்.

வானியல் (Astronomy) **ஞாயிறு சுருங்குகிறது!**

கழராம்பன்.

ஞாயிற்ருெளி மறைப்புக்காலத்தே (eclipse of the sun) ஒளிர்கின்ற ஒளிப்பிதுக்கங்கள் இருப்பதைக் காணலாம். இக்கால வானியலாளர்கள், ஞாயிற்ருெளிமறைப்புக்காலம் வருமெனக் காத்திராது, தக்க ஆய்வுக்கருவிகளுடன் இவ்வொளிப் பிதுக்கங்களைப் படம் பிடிக்கின்றனர். ஞாயிற்றின் மேற்பரப்பில் நிகழும் புயல்களைக்கூட அவர்கள் படம்பிடிக்க முடியும். இவ்வொளிப் பிதுக்கங்களின் உயரம் ஏறத்தாழ 124,000 கற்கள் ஆகும். இவையும், ஞாயிற்றுக் கரும்புள்ளி களும், வெப்ப ஆற்றலும் நமக்கு வியப்பை அளிக்கின்றன. அவ்வெப்பத் தோற்றத்தைப் பற்றியும் நாம் வியக்கின்ருேம் வெப்பமும் ஆற்றலே! ஆற்றல் (பொருளைப் போல்) வெறுமை. (nothing) யினின்றும் புறப்படாது! ஆதலால், நாம் பருதிக்கு வெப்பத்தை அளிக்கும் அப்பேராற்றல் எங்கிருந்து வந்தது என்று ஆராயக் கடன்பட்டுள்ளோம். கதிர்களாகப் பருதியி னின்றும் வெளியேறும் இவ்வாற்றலை அறிவதற்குமுன் அதன் பருமனைப்பற்றித் தெரிந்து கொள்வோம்.

ஞாயிற்றின் குறுக்களவு 8,65,000 கற்களாகும். அதாவது நூற்றெட்டு மண்ணுலகங்களை (Earths) நெடுந் தொடர் இழை யாகத் திரித்து நீட்டினுல் எவ்வளவுநீளுமோ அவ்வளவு நீளம் ஞாயிற்றின் குறுக்களவாகும். ஞாயிற்றின் மேற்பரப்பளவு. மண்ணுலகின் மேற்பரப்பைப் போல 12,000 மடங்குகளாகும்! அதன் பருமன் (Volume), மண்ணுலகின் பருமனைப்போல 1,300,000 மடங்குகளாகும்! ஞாயிற்றின் உட்பாகம் பெரும் பொந்தாக (hollow) இருக்குமாயின், (உண்மையில் அப்படி இல்லை!) அப்பொந்தினுள்ளே நம் மண்ணுலகையும், அதைச் சுற்றிவருமாறு திங்களையும் அமைக்கலாம்! இவ்வாறு செய் தாலும், அவ்வுட்பாகத்தின் அரைப்பாகங்கூட நிரம்பாது. நம்

[முன்பக்கத் தொடர்ச்சி]

இறுவாய்: தற்பொழுது அறிவுத்திறனறி தேர்வுகள் பல்லாற் ருனும் பயன்படுத்தப் பெறுகின்றன. இவற்ருல் மாணவர்கள் தம் அறிவுத்திறனைக் கண்டு தக்கபடி பயிற்றுவிக்கலாம். விருப்பு வெறுப்புகளையும் அறியலாம். மேலும் பல நிறுவனத்தினரும், படையினரும், தக்காரைத் தேர்ந்தெடுக்க அறிவுத்திறனறி தேர்வுகளைப் பயன்படுத்துகின்றனர்.

நமது நாட்டில் பண்டுதொட்டே பழகிவரும் புதிர்களும், விடுகதைகளும் அறிவுத்திறனறி தேர்வுகளே. இன்றும் கூட நம் தாத்தா, பாட்டிகள் கூறும் புதிர்க்கணக்குகளை விடுவித்தல் கணக்கியல் பட்டம் பெற்றவராலும், எளிதில் முடிவதில்லையே!

மண்டிணி ஞாலமும், வெண்டிங்களும், ஞாயிற்றுக் கரும் புள்ளிகளொடும், அவ்வொளிப் பிதுக்கங்களுடனும் ஒப்பிட்டுப்பார்க்கையில் எவ்வளவு சிறியன!

பருதியின் பருமனைப் பற்றியும், இன்னுஞ்சில அளவைகளையுந்தெரிந்துகொண்ட நாம், அவ்வெப்ப ஆற்றலைப் பற்றிச்சிறிது எண்ணுவோம். எளியமுறையில் நாம் மரங்களைத் தீய்த்து வெப்பத்தைப் பெறுவது போல, பலபொருள்களின் கனற்சியால் (Combustion) ஞாயிறு தனக்கு வேண்டிய வெப்பத்தைப்பெறுவதில்லை. பருதி வெப்ப ஆற்றலையும், ஒளியாற்றலையும் வெளியேற்றுகிறது. ஒருநொடிப் பொழுதில் வெளியேறும் ஒளி ஆற்றல் மட்டில், 3,230,000000,0000 0,000000,00000000 (3.23×10^{27}) மெழுகொளித்திறன்களாகும். இவ்வளவு ஒளியாற்றலையும், இன்னும் வெப்ப ஆற்றலையும் தொடர்ந்து பல ஆண்டுகளுக்குப் பெற எவ்வளவு எரிபொருள்கள் வேண்டும் என்பதைச் சிறிதே மனத்தில் எண்ணிப்பாருங்கள்!

ஞாயிறு திண்ணிய எரிகரியால் ஆக்கப்பட்டு, அதை எரிப்பதற்கு வேண்டிய தீயகமும் (Oxygen) அதனொடு சேர்க்கப்பட்டு இருந்தால், அஃது இயல்பாக இன்றைய முறையில் கதிராற்றலாக ஆற்றலை வெளியேற்றிக் கொண்டே யிருந்தால், 2,800 ஆண்டுகள் மட்டுமே நிலவும். ஆனால் அது 750,000000,000000 ஆண்டுகளாக இத்தகைய ஆற்றலையே வெளியேற்றி, இன்னும் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் இத்தகைய ஆற்றலை வெளியேற்றவும் அணியமாய் உள்ளது. ஆதலால் அது கனற்சி (Combutsion) முறையில் வெப்பத்தைப் பெறுகிறது என்ற கூற்றுப் பொய்த்துப் போகிறது.

முன்னைப் பேருருவாயிருந்த வளிப்பொருளாலான (gaseous matter) அப்பருதி இன்றைய நிலைக்குச் சுருங்கியிருக்குமேயானால், (''காலன்'' (Pluto) என்ற கோளத்தின் சுற்றளவுக்குச் சுருங்கியிருக்குமேயானால்) அச்சுருக்கத்தின் விளைவாகக் கழிபேராற்றல் யாண்டும் பரவி நின்றிருக்கும். அவ்வாற்றல் ஒடுங்காற்றலினின்றும் (Potential energy) பிறந்த இயங்காற்றலே (Kinetic energy) யாம். ஞாயிற்றின் குறுக்களவு, பதினோராண்டிற்கு ஒரு கல் மேனியாகக் குறைந்து வருகிறது! எல்ம் ஒல்ட்சு (Helm holtz) இப்பெருஞ்சுருக்கமே அதன் பேரளவாற்றலுக்குக் காரணமென்று கருதினர். ஆனால் கெல்வின் (Kelvin) என்பார், 'இன்றுவரைச் சுருங்கியுள்ள இச்சுருக்கம் அரைக்கோடி ஆண்டுகளுக்கே ஆற்றலை அளிக்கப் போதுமானது; ஆனல் மண்ணியல் (Geology) கணக்குப்படி, ஞாயிறு, மேற்குறித்த காலத்தினும் முன்பிருந்து ஆற்றலை அளித்துக்கொண்டிருக்கிறது' என்ற உண்மையை எடுத்தோதி

Sirupanattruppadai

(An exhortation to a minstrel by a fellow minstrel).

Like a necklace dangling on the beauteus breasts.
Of dame Earth—the pretty hills her bamboo shoulders—
The wild river flows; it comes from far
Enduring ceaseless water-flow.
On the fretted banks are fragrant groves
Where scattered lie the fading flowers
Which the pecking cuckoos caused to fall.
The *Singing Women* wear them round their heads
And gently tread upon the nice black sands
Spread like their dishevelled hair,
So hot and piercing like spear-tips.
Then they step upon the gravel burning with the parching rays.
And tear their tender feet.
A fine sumner's day it is.
The morning sun sends forth his scorching beams
On the long tracks of the wilderness in its full bloom.

(முன்பக்க தொடர்ச்சி)

எடிங்டன், எம்டன் ஆகிய இரண்டு பேரும் ஞாயிற்றின் நடுப்பகுதி வெப்ப ஆற்றல் 31.500.000 நூ. இருப்பதாகக் கணக்கிட்டுள்ளனர். சீன்சு குறித்த நடுப்பகுதி வெப்ப ஆற்றல் 55,000,000 நூ. ஆகும். இவ்விரண்டுல் எது சரியென்று நாம் போட்டுக் குழப்பிக் கொள்ளல் வேண்டா.

எடையிலும், பொருளிலும் ஞாயிறு குறைந்திருப்பதன் விளைவால், ஞாயிற்றுக் குடும்பக் கோள்களை ஈர்க்கும் ஈர்ப்பாற்றல் குறைந்து கொண்டே வருகிறது. இதனால் மண்ணுலகின் சுற்றுப்பாதை சுருங்கிக்கொண்டே வருகிறதாம். ஓராண்டில் ½ அங்குலம் மண்ணுலகின் சுற்றுப்பாதை சுருங்குவதாகக் கணக்கிட்டுள்ளனர். எனினும், விண்ணியலில் (Geology) இச் சிற்றளவும் விடலரிதாம். கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் இம்மண்ணுலகம் ஞாயிற்றினின்றும் 5,700,000 கற்களுக்கு அப்பால் இருந்திருக்கும். ஞாயிற்றின் வெப்ப ஆற்றல் குறையக் குறைய மண்ணுலகின் மேற் பரப்பும் குளிர்ந்து குளிர்ந்து 30· நூ. வெப்ப அளவிற்கு வந்துள்ளது. மாந்தன் இன்னும் உயிரோடு வாழ்ந்துகொண்டே இருப்பானாயின் பனிக் கால வரலாற்றையுங் கண்டு மகிழ்வான்.

(ஆங்கிலத்தில்: Surgeon Rear Admiral C. M. BEADNELL)

And they trudge along the scanty shades of trees.
Their falling tresses glossy black with oil
Have the beauty of the gentle showers of rain
And in gracefulness they far surpass
The peacocks with their spangled feathers.
For, the peacocks seeing these girls
Hide behind each other (being put to shame!)
Their feet, barren of all ornaments
Resemble in shape the tongue of a panting dog.
Their closely set and conic thighs are like
The trailing trunks of elephant cows.
Their knotted braids resemble blossoms big
Of hill side plantains vying with women's thighs.
On their bodies beauty-spots appear
Which the drunken bees mistake for *Vengai* blooms
Fresh from the thick branches.
Their tempting breasts, spotted so
Lie behind the ornaments and laugh to scorn
The bright fresh *Kongu buds*
Their teeth secrete a fluid sweet that has the taste
Of the juice of the breast-shaped fruits of the luscious palm.
Of delicate nature are these girls, and chaste;
Worthy of the jasmine they have worn
Which in the *Kullai* thickets blossommed like their teeth.
The innocent looks of the deer and foreheads bright are theirs.
They're taking rest. Their weary little feet.
Gently do the untaught youths massage.
You are seated mong them. O suppliant wise,
Your little *yal* with golden strings and pleasing sounds
On your left arm resting.
And *Naival* melodies flow from *Palai* sweet
By a skilful minstrel so expertly played.
With an enduring will you sit and scoff at troubles.
For bitter griefs and sufferings goad you on
To go in longing search of bounteous givers of the world.
Let me thus exhort you :

(to be continued)

எது தமிழாண்டு?

—தரங்கை-பன்னீர்ச்செல்வன்

சித்திரைத் திங்கள் முதல் நாளைத் தமிழரில் பலர் தமிழாண்டுப் பிறப்பு நாளாகக் கருதுகின்றனர். படிப்பறிவற்றோர் மட்டுமல்லாமல் பட்டங்கள் பெற்ற பட்டின வாணர்களும் அந்நாளை ஆண்டுப் பிறப்பாகக் கொள்வது உண்மைத் தமிழர் உள்ளத்தை உலைவுறச் செய்கின்றது. அதனினும் வியப்பானது தமிழ் மொழியின் நுட்ப ஒட்பங்களையும், இலக்கிய இலக்கண வள மனைத்தையும் கற்றுத் துறைபோய தமிழ்ப்புலவர்களே—தமிழர் நெறியை நிறுவும் தலையாய பணி மேற்கொண்டவர்களே—வேற்றுமொழிச் சொற்றெருகுப்பைத் தமிழாண்டுப் பெயர்கள் என ஏற்றுக் கொள்வதும், போற்றிப் புரப்பதுமாகும். இவ்விழி செயல், அறிவியல் பயிற்றும் பேராசிரியரொருவர் கதிர், மதிமறை நாட்களைக் கல்லூரியிலே மாணவர்கட்குக் குறைவற விளக்கி விட்டு, இல்லமடைந்ததும் கருங்கோள்கட்கு (இராகு, கேது) நோன்பிருப்பது போன்ற செயலை ஒக்குமன்றோ!

"மணிப்பிரவாள" நடையை மட்டுமன்றி "மணிப்பிரவாள" மரபையே தமிழரிடைப் புகுத்திக் கொண்டிருக்கும் புல்லுருவிகள் ஒரு சிலர் நீங்கலாகத் தமிழ்ப்பற்றுள்ள எந்தவொரு நெஞ்சமும் இஞ்ஞான்று தமிழாண்டெனப்படும் ஆண்டு முறையை ஏற்றுக்கொள்ள அணியமாயில்லை. "பிரஜோத்பத்தி", "ஆங்கிரஸ", "ஸ்ரீமுக", "ஈஸ்வர", "விஷு" "ஸர்வசித்து", "ஸர்வதாரி", "விஜய", "ஜய", "ஹேவிளம்பி", "ஸார்வரி", "விஸ்வாவஸு", "ராக்ஷஸ", "ஸித்தார்த்த", "ரக்தாக்ஷி", "அக்ஷய" என்பவை போன்ற சொற்களைப் பார்த்தவுடனேயே வடமொழிச் சொற்கள் என்றுணர முதுக்குறை தேவையன்று, ஐந்தாம் வகுப்புவரை பயின்ற முளையறிவே போதுமானது.

இவ்வாண்டுகள் தோன்றிய கதையோ மிகவும் அருவருக்கத்தக்கது; தமிழர் மாண்புக்கு மாசூட்டுவது. அதுவருமாறு:— "வைணவச் சமய இறைவனை கண்ணன் ஒரு காலத்தில், காவொன்றில் பெண்ணுருக் கொண்டு உலவிக் கொண்டிருந்த நாரதர் (ஆண்) மேற் காமுற்றுப் புணர்ந்து பெற்ற அறுபதின்மரின் "அழகிய" பெயர்களே தமிழாண்டுகளின் பெயர்களாம். இது புனைகதை தானாயினும் தமிழரைத் தலைகுனியச் செய்வதன்றோ!

இக்கசடான செய்திகளை எல்லாம் நன்கு கண்டுகொண்டே மறைமலையடிகளார் போன்ற தமிழ்ப் பேரறிஞர்கள் கூடி,

ஆய்ந்து, திட்டமிட்டுத் "திருவள்ளுவராண்டை" வரையறுத் தனர்; நடைமுறையிலும் பின்பற்றினர்; ஆனால், இந்நாட்களில் தமிழறிஞர் சிலரும் தாளிகையாளர் சிற்சிலரும் பொதுமக்கள் மிகச்சிலரும் மட்டுமே திருவள்ளுவராண்டைப் பின்பற்றி வரு கின்றனர். தமிழர் எனக் கூறிக்கொள்ளும் பெருந்தகைமை யாளர் அனைவரும் முறையாகத் திருவள்ளுவராண்டைப் பின் பற்றாமைக்குக் கரணியம், தமிழ்ப் பற்றற்ற தன்மையும், அவ் வாண்டுகளின் நடைமுறை அறியா நிலையும், இன்றைய தமிழக அரசினர் திருவள்ளுவராண்டைப் பற்றிக் கவனம் கொள்ளா மையுமேயாகும்.

திருவள்ளுவராண்டு தைத்திங்கள் முதல் நாளில் [பொங் கல் திருநாளில்] தொடங்குகின்றது. கிறித்துவின் ஊழிக்கு முப்பத்தோர் ஆண்டுகட்கு முன்பிருந்து கணக்கிடப்படுகின்றது. உலகெலாம் வழக்கத்திலுள்ள ஆங்கில ஆண்டு (கிறித்துவின் ஊழி) முறையிருக்கும்பொழுது தமிழர்க்குத் தனியே ஏன் திரு வள்ளுவராண்டு? என வினவத் தோன்றும். தற்பொழுது தமிழர்க் கெனத் தனியாண்டுக் கணக்கில்லாது ஆங்கில ஆண்டையே பின்பற்றிக் கொண்டிருக்கவில்லை. தமிழர் தேடாமலே தேடி வந்த கூடாநெறியை, நன்னெறியிற் செலுத்தும் மாற்றுத் திட்ட மாகவே திருவள்ளுவராண்டு வகுக்கப்பட்டுள்ளது. ஆணுக் கும், ஆணுக்கும் இழிவான முறையிலே பிறந்ததாகக் கூறப் படும் பிள்ளைகளின் பெயர்களிலே அமைக்கப்பட்டுள்ள ஆண்டுத் தொகுப்பை வெட்கமில்லாமல் தமிழாண்டுகள் எனப் பின்பற்றுவதைவிட, பிறமொழியாளர்களும் போற்றிப் புகழும் திருவள்ளுவரின் திருப்பெயரிலே ஆண்டுக் கணக்கைக் கொள்ளுவது எவ்வாறு பிழைபட்டதாகும்?

பல்வேறு மொழியினரையும், இனத்தினரையும் "ஒரு குடைக்கீழ்" ஆண்டுவரும் இந்திய அரசினரே ஆங்கில ஆண்டோடு "சாக ஆண்டு" என்னும் ஓர் ஆண்டுக் கணக்கைப் பயன்படுத்திவருவதை அறிந்தவர்கள், — அதனைத் தேவையற்றதெனக் கருதாதவர்கள் — தமிழர் தமக்கெனத் தனியாண்டைப் பின்பற்றுவதற்குத் தடை சொல்வது எங்ஙனம் பொருந்தும்?

எனவே, தமிழர்களாயினோர், சித்திரையில் தொடங்கும் மாற்றாரின் கசட்டுக் கோவையைத் தமிழாண்டுகள் எனத் தன்மானமின்றி வழங்காது, தமிழர்க்கு உயர்வளிக்கக் கூடிய திருவள்ளுவராண்டைப் பின்பற்றல் வேண்டும். இதற்குத் தமிழறிஞர்களும், தாளிகைளும் முன்னோடிகளாய் வழிகாட்ட வேண்டும். தமிழ்நலம் புரப்பதாகப் பறைசாற்றிக் கொள்ளும் தமிழக அரசு தானும் பின்பற்றத்துணை நிற்க வேண்டும். தழைக்க தமிழுணர்வு!

*

(முன்னிதழ்த் தொடர்ச்சி)

வள்ளுவர் அறிவுறுத்திய அரசியல்.

புலவர், வித்துவான்: ஔண்.கி.சந்திரசேகரன், எம்.ஏ;பி.டி.பி.ஓ.எல்.

3. சிற்றினஞ்சேராமை.

செயற்கையாய சிறப்புணர்வுபற்றி நல்லனென்றுகத் தீயனென்றுகச் சொல் நிகழும். அச்சிறப்புணர்வு மனத்தின் கண்ணேயுளதாவதாகப் புலப்படுந்துணையேயன்றி அதற்கு மூலம் இனமேயாம். நல்லதன் நலனும் தீயதன் தீமையுமில் லென்போரும், தீயரும், இழிஞரும் கயவரும் உள்ளிட்ட குழு சிறியவினமாகும்; இஃது அறிவைத்திரித்து இருமையுங் கெடுக்குமியல்பிற்றும். விசும்பின்கண் தன்தன்மைத்தாய நீர் நிலத்தொடு சேர்ந்தவழி நிறம் சுவை முதலிய பண்புகள் திரிந் தாற்போலத் தனி நிலைக்கண் தன்தன்மைத்தாய அறிவு பிற வினத்தோடு சேர்ந்தவழிக் காட்சி முதலிய தொழில்கள் திரிதல் இயல்பேயாம். ஆதலின், அரசனுயினுன் ஒனந்தூயனுகவே அதனேடு பயிற்சி வயத்தான் மனந்தூயனுய். அம்மனத்தின் கண் சிறப்புணர்வு புலப்பட்டு, அதனுற் சொல்லுஞ் செயலுந் தூயனும். மனநலத்தால் மறுமையின்பமுண்டாம். ஒரோவழி மயலால் மனநலந்திரியினும் நல்லினம் அறியாமையினீக்கித் துயருருமற்காக்கும். மனத்தது நன்மை செல்வந்தரும்; இனத் தது நன்மையச் செல்வத்தோடு எல்லாப் புகழையுங் கொடுக்கும்;

> "மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்
> எல்லாப் புகழுந் தரும்"

இனி, இயற்கையாய அறியா மெயினீங்குதலே மனந்தூயனுதை லானும், அம்மனந்தூய்மைதானும், தூயவினத்தோடு கொள் ளும் பயிற்சிவழியான் வருதலானும், இப்பயிற்சியிலாதார் ஒரோவழி மனந்திரியின் அதனை யொப்ப நிறுத்துமாறு பற்ருராக லானும், ஒப்பநிறுத்தியவழியே யுண்டாகத்தக்கதாகிய மறுமை யின்பம் இனநலமொழிந்த பிறிதொன்ருன் வலிபெறுதல் ஆகா மையானும், மனநலந்தரும் செல்வத்தோடு பிற எல்லாப்புகழை யும் இன நலம் பயக்குமாதலானும். நிலவரை நீள்புகழாற்றிற் புத்தேளுலகந் தப்பாதாகுமாகலானும்,

> "மனநலத்தி னுகு மறுமைமற் றஃதும்
> இனநலத்தி னேமாப் புடைத்து"

தெரிந்து செயல்வகை.

(அ) ஆராயப்படுவனவெல்லாம் ஆராய்ந்து போந்த பெரியாரினத்தைத் துணையாகக் கொண்டோன், அவ்வினத் துடனே செய்யத்தகும் வினையை ஆராய்ந்து பின் தானேயு

மெண்ணிச்செய்து முடிக்கவல்லனுதல் வேண்டும். அத்தகு வினையைச் செய்யுங்கால் நிகழ்வின்கண் அழிவதனுல் ஆவது மிக்கு, எதிர்வினும் அது வளர்ந்து வருதலுடையதாயவற்றை அறிந்து, மேற்சேறல் முதல் வேறலீருய தொழில்களைச் செய்தல் வேண்டும். அன்றியும், வலியுங் காலமும் இடனுமறியாது பிறர்மண் கொள்வான் சென்று தம் மண்ணுமிழக்கும் வினைகளில் ஊக்கம் பற்ருமலும், தொடங்கியபின் இடைமடங்கல் கூடாமை யின் அறிவும் மானமுமிலரென்று உலகத்தாரிகழும் இகழ்ச்சி பிறத்தற்கு இடனின்றி, வலிகாலமிடனென்றிவற்ருன் தனக்கும் பகைவர்க்கு முளவாம் நிலைமைகளும் வினைதொடங்குமாறும், அதற்குவருமிடையூறுகளும் அவற்றை நீக்குமாறும் வெல்லு மாறும், அதனுற் பெறும் பயனுமாகியவற்றைத் தனித்தும் இனத் தோடும் முற்றுப்பெறுமாறெண்ணிச் செயல்வேண்டும்.

"அழிவதூஉ மாவதூஉ மாகி வழிபயக்கும்
ஊதியமுஞ் சூழ்ந்து செயல்"
"ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
ஊக்கா ரறிவுடை யார்".

மேலும், பெரிய முயற்சியினவும், செல்தாற்பயனில்லனவும், அப்பயன் சிறிதாயினவும், ஐயமாயினவும், பின்றுயர் விளைவிப் பனவுமெனுமிவற்றைத் தவிரானுயின் அறிவு, ஆண்மை, பெருமையென்னும் மூவகையாற்றலுட் "பொருள்படையென இருவகைத்தாய பெருமை சுருங்கிப் பகைவர்க்கெளியனுவன். செய்யத்தக்க வினையினையும், கொடுத்தல், இன்சொற்சொல்லல், வேறுபடுத்தல், ஒறுத்தலென்னும் விரகுகளையும் எண்ணித் தொடங்கல்வேண்டும். அல்லாக்கால், அவ்வினைமாற்றுனுல் விலக்கப்பட்டு முடியாமையானும், இடையினெழுதலாகாமையா றும் துயருறுவன். இவ்விரகுகளை யுய்க்குமிடத்து, கொடுத்தலைப் பொருணசையாளன் கண்ணும், இன்சொல்லைச் செப்பமுடை யான், மடியாளன், முன்னே பிறரோடு பொருது நொந்தவன் என இவர்கண்ணும்; வேறுபடுத்தலைத் துணைப்படையாளன், தன்பகுதியோடு பொருந்தாதானென விவர்கண்ணும், ஒறுத்தலை யிவற்றின் வாராதவழி யிவர்கண்ணுந் தேறப்படாத கீழ்மக்கள் கண்ணும் செய்தவழியே வெல்லுமாறெய்தும். இவ்வாறவற்றிற் குரியராவாரை யறிந்து செய்யாவழித்தவறுண்டாம்.

"நன்ருற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்ருக் கடை"

தவறுண்டாவதை யோர்ந்து செய்யும் வழியுந் தந்நிலைமை யோடு பொருந்தாத விரகுகளைச் செய்வனுயின் உலகத்தா ராலிகழப்படுவன் ஆதலின், தன்னை வலியனுய் வைத்து மெலி யார்க்குரிய கொடுத்தல் முதலிய மூன்றனைச் செயதலும் மெலி யனுய் வைத்து வலியாற்குரிய ஒறுத்தலைச் செய்தலும் கூடா வாம். இவ்வாறு செய்யத்தகும் வினையும் அது செய்யுமாறும்

தெரிந்து, ஒழியத்தகும் வினையும் அஃதொழியாவழிப் படுமிழுக்கும்ஓர்ந்து, செய்வனவற்றையும் விரகறிந்தே தொடங்கி, கருதிய நன்மையன்றிக் கருதாத தீமை பயவாமை காத்து, நன்றான விரகுகளை யவற்றிற்குரியார் கண்ணே செய்து, தந்நிலைமையோடு பொருந்தாதவற்றைக் கொள்ளாது, வினை முடிக்கு மாற்றினையறிய வல்லவன் பகைவர்க்கு எளியனாகானாதலின், அவனை யுலகம் அடிநழீஇ நிற்கும். அவனுக்கு எய்துதற்கரிய பொருள் யாதொன்றுமில்லாதாகும்.

"தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்(கு)
அரும்பொரு ளியாதொன்று மில்.

(ஆ) மேலும், மேற்கூறிய நால்வகை விரகுகளுள் ஒறுத்தலைக் குறித்தானாயின், தான்செய்யக் கருதிய வினைவலியையும், அதனைச் செய்து முடிக்குந் தன்வலியையும், அதனை விலக்குறும் மாற்றான் வலியையும், இருவர்க்குந் துணையாவார் வலியையும் சீர்தூக்கிக், குறைவின்கண் தோற்றலாருதலையாதலையும், ஒப்பின்கண் வேறல் ஐயமாதலையும் அறிந்து தன்வலி மிகவின்கண் அதனைச் செய்தல்வேண்டும் வினைவலியறியாவழி, ஒரு மரக்கோட்டினது நுனிக்கண்ணேயேறி நின்றார் தம்மூக்கத்தால் அவ்வளவினைக் கடந்து மேலுமேறவூக்கு வராயின் அவ்வூக்கம் அவருயிர்க்கு இறுதியாய் முடியும். அது போல, பகைமேற்செல்வான் தொடங்கித் தன்னாற் செல்லலா மளவுஞ் சென்று நின்றான் பின் அவ்வளவினில்லாது மனவெழுச்சியான் மேலுஞ் செல்லுமாயின், அவ்வெழுச்சி வினை முடிவிற் கேதுவாகாது அவனுயிர் முடிவிற்கேதுவாம்.

"நுனிக்கொம்ப ரேறினா ரஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும்"

அயல்வேந்தரோடு செயற்பாலது நட்பாயொழுகுதல், வலியறிந்து பகைத்தலென்னுமிரண்டனுளொன்றேயாம். இவையல்லால்தான் மெலியனாய் வைத்து அவரோடு பகைகொண்டானுக் கொருபொழுதும் நிலையின்மையின் விரைந்துகெடும். ஆகவே, தம்வலியினளவறியாதே மனவெழுச்சியாற் றம்மின் வலியாரோடு வினைசெய்யத்தொடங்கின், அவர் அடர்த்தலான் அது செய்துமுடிக்கப்பெறாது இடையே கெட்டவரசர் உலகத்துப் பலராதலின் தம்வலியறிந்தே தொடங்குதல்வேண்டும்.

"உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண்முரிந்தார்பலர்"

பீலி நொய்தாயினும் அதனை வலிய சகடத்துக்கண் பொறுக்கு மளவின்றி மிகுத்தேற்றின் அஃது அச்சுமுறியும். அதுபோல, எளியரென்று பலரோடு பகைகொள்வான் தான்வலியனேயாயினும் அவர் தொக்கவழி வலியழிவன். ஆதலின், மாற்றான்வலியும் அவன்றுணைவலியும் அறிந்தே தொடங்குதல்வேண்டும்.

"பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்"

அன்றிக் கொடுத்தலாகிய ஈகையைக் குறித்தானுயின், தனக்குள்ள பொருளினெல்லையையறிந்தும், அது வருகின்ற நெறியளவினும் போகின்ற நெறியளவு பெருகாதபடி சுருக்கியுஞ், செலவு சுருக்கக் கூடாதாயின் ஒப்பவாயினும் ஈத்துந்துய்த்தும் வாழ்தல்வேண்டும். ஒப்புரவு செய்தற்கண்ணும் தனக்குள்ள பொருளளவினை நன்கு தூக்கியதனின் மிகாதபடி யாளுதலை மேற்கோடல் வேண்டும். அல்லாக்கால், தொடக்கத்தில் கேடு வெளிப்படாதாயினும் விரைவில் அவனது வாழ்க்கை கேடுறும் ஆதலின், பொருள்வலியறிதலுஞ் சிறப்புடைத்தாம்.

"அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்"

(இ) வலியான் மிகுதியுடையனுய்ப் பகைமேற்செல்வானுக்கு மூவகையாற்றிலும் நால்வகை விரகுகளுமுளவாய வழியும் ஏற்ற கால நிலை வேண்டும். அது வருமளவும் ஒடுங்கியிருத்தல் பொருதகர் தன்பகை கெடப் பாய்தற் பொருட்டுப் பின் வாங்குந்தன்மையை நிகர்க்கும். பகைவர் மிகை செய்தவிடத்து அப்பொழுதே அவரறிய புறத்து வெகுளி தோற்றுமிழ்த் தம்மைக் காத்துக்கொள்ளுவர். வெகுளி யொழிந்தொழிப் பின்னும் மிகை செய்யாமல் அடக்குதல் கூடாமற்போம். ஆதலின், பகைமை யொழியும் வகை யெண்ணி மிகவும் தாழ்ந்திருத்தல் வேண்டும். அவர் அத் தாழ்வு நோக்கித் தம்மைக் காத்தலிகழ்ந்து தப்பாமற் கெடுதற்குரிய காலம் வந்துழி அது கழிதற்கு முன்பே விரைந்து தம்மாற் செயற்கரிய வினைகளைச் செயல் வேண்டும். அக்காலம் ஆற்றல் முதலியவற்றான் செய்துகொள்ளப்படாமையானும் அது பெறுவழிச் செய்தற்காகாமையானும் கூம்பும் பருவத்துக் கொக்குப் போலவும், அது தானே வந்தியைதல் அரிதாகலானும், இயைந்தவழிப் பின்னில்லாதோடுத லானும் பகைமேற் செல்லுங்காலம் வாய்த்தவழி யக் கொக் கினது குத்தொக்கத் தப்பாமற் செய்து முடித்தல் வேண்டும்,

"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து"

(ஈ) மேலும், வலியுங்காலமுமறிந்து பகைமேற்செல்வான் தான் வெல்லுதற்கேற்ற நிலத்தினையுமறிதல் வேண்டும். பகைவர் நிற்றலாற்று இடனறிந்து செல்வானுயின் அவர் தனக்கெளியராவர். தான் நிற்கலாகாவிடத்துச் செல்லின் அவர்க்கெளியனுவான். ஆதலின், பகைவர்மேற் சென்றான் அவரிடங்களை யறிந்து அவற்றிற்கேற்ற கருவிகளான் வினை செயல் வேண்டும். தன் படைப் பெருமை யொன்றே நோக்கி யிடனேக்காது செல்வானுயின், அஃது அப்படைக்கு ஒருங்கு சென்று

வினை செயலாகாமையானுகப் பயிற்சியின்மையானுக அப் பெரு மையாற் பயனின்றித் தானழிவுபயக்கும் ஆண்மையுடையாரை அழித்தற்காகா அரணும்,மிக்கவாற்றலு முடையராகாத சிறுமை நோக்கி அவர் இருப்பின் கண்சென்று தாக்கின், அவர் தந்நிலம் பெயர்ந்து போதற்றுணிவினரன்றிச் சாதற்றுணிவினராவராக வின் அவர்க்குப் பெரும்படையும் உடையும். ஆகவே, ஆண்மையும் பெருமையுமுடையானுயினும் தனக்கேவாப் பகை நிலத்துச் செல்லின் அவற்ருல் பயனின்றிக் காலாழுமியல் பிற்ருய சேற்று நிலத்துப் பட்டுழி நரியாற் கொல்லப்படுங்களிறு போல மிகவும் எளியரால் அழிவன். இதனுன், பகைவரைச் சார்தலாகாவிடமறிந்து மேற்சேறல் வேண்டும்.

"காலவாழ் களரின் நரியடுங் கண்அஞ்சா
வேலாண் முகத்த களிறு"

(உ) மேலும், உருவும் திருவும் ஆற்றலு முதலியவற்ருன் மகிழ்ந்து தற்காத்தலினும், பகையழித்தல் முதலிய செயல்களி னுஞ் சோர்தலைச் செய்யாமல், முறை நூலுடையார் அரசர்க் குரியன வென்றுயர்த்துக் கூறிய அறிவு, ஆண்மை, பெருமை யென்றும் மூவகையாற்றலும்; கொடுத்தல், இன்சொற் சொல் லல், வேறுபடுத்தல், ஒறுத்தலென்னும் நால்வகை விரகும்; மேற்சேறல், அரண்முற்றல், கோடல், பொருதல், வேறலென் னும் ஐவகைத் தொழிலும்; நட்பாக்கல், பகையாக்கல், மேற் சேறல், இருத்தல், பிரித்தல், கூட்டலென்னும் அறுவகைத் தன்மையும் முதலாய செயல்களைக் கடைப்பிடித் தொழுகல் வேண்டும். அவ்வாறொழுகுதற்கண் இடைவிடாத நினைவும் தப்பாத சூழ்ச்சியுமுடையார்க்கு எல்லா மெளிதின் முடியும். முற்காலத்துத் தம் மகிழ்ச்சியின் மைந்துற்று அதனிஞய சோர் வாற் கெட்டவர்களை நினைந்து, தானுமவ்வாறே கெடுவலென்று மகிழ்ச்சியின் மைந்துருது. பெருஞ்செல்வம், பேரின்பம், பெரு மிதமென்றி வற்ருன் வரும் உவகைக்களிப்பானுய மறவியானது தன்னையே கொல்லுந் தன்மையதாதலையும் அது புகழுடையான் கணுண்டாயின் அவற்குத் தற்காவாமையானும் செயற்கேட்டா னும் எள்ளற்பாட்டினை விளைத்து அவன் நன்மதிப்பினை யழிக்கு மியல்பிற்ருதலையும் உள்ளி; வினைசெய்வார் சுற்றத்தார் என்னுந் தன் பாலார்கண்ணும், தான்பெருகியஞான்றும் சுருங்கியஞான் றும். எல்லா வினைகளிலும் மறவாமைப்பண்பு ஒழிவின்றி வாய்க்குமாயின் அதனை யொக்கும் நன்மை பிறிதில்லை:

"இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை
வாயின் அதுவொப்ப தில்"

(ஊ) மறவியொழிந்தோன், வினைசெய்தற்கண் மனம் மெலிவின்றிக் கிளர்ச்சியுடையனுதல்வேண்டும். ஊக்கம் இல்லையாகவே முயற்சி, பொருள், கொடை செருக்கெனுமிவை முறையே யிலவாம். ஊக்கமுடையான் தான்கருதிய வுயர்ச்

சிக்குச் சிதைவு வந்த விடத்துத்தளராது புதையாகிய வம்பாற் புண்பட்ட விடத்தும் தளராது தன்பெருமையை நிலைநிறுத்துங் களிறுபோலத் தன்பெருமையை நிறுத்துவன். ஊக்கமிக்கதுணை யும் மக்களுயர்வராதலின், அரசன் அஃதிலனுயின் பகைவரின் மிக்க மெய்வலியுங் கருவிச் சிறப்புமுடையனுயினும், புலிதாக் குறின் வெரூஉம் யானைபோல அஃதுடையவரசர்க்கு அஞ்சுவன்.

''பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்''

அரசனுயினன் கருதுவதெல்லாம் தன்னுயர்ச்சியையே கருது வானுக. அவ்வுயர்ச்சி பால்வகையாற் கூடிற்றில்லையாயினும் தாளாண்மையின் தவறின்றி நல்லோரான் பழிக்கப்படான். ஒருவற்கு ஊக்கமிகுதியே திண்ணிய அறிவாகும். ஊக்கமில் லாரிடை நன்மக்கட்குள்ள நல்லறிவும் செயல் முயற்சியுங் காணப்படா. ஆதலின் அவர்கள் மரங்களேயாவர். அத்தன் மையோர் மரத்திற்குள்ள பயன்பாடுமிலராதலின் நன் மரங்க ளின் வேறுபட்ட மரங்களாகக் கருதப்படுவர்.

''உரமொருவற் குள்ள வெறுக்கையஃ தில்லார்
மரமக்க ளாதலே வேறு''

(எ) ஊக்கமுடையார்க் கொரோவழி மயலான மடிவரும். அம்மடியானது ஏனையிருள்போலாது உலகநடையுள்ள துணை யும் இடையருது தன்னுட்பிறந்தாரை வியக்குங்குடி யென்னுங் குன்றுவிளக்கைத் தானடர்ந்து மாய்க்கும். காலநீட்டத்தை யுடைய செயல்மறவி, துயில்எனும் மூன்றும் மடியைப்போலவே மயலால் தோன்றி உடனிகழ்வனவாம் இவை துன்புறு நீரார்க்கு இன்புறுத்துவபோன்று காட்டி யவர் விரும்பிக் கொண்டவழித் துன்பத்திடைவீழ்த்தலின், நாளுலந்தார்க்கு ஆக்கம் பயப்பது போன்று காட்டி அவர் விரும்பி யேறிய வழிக்கடலிடைவீழ்க்குங் கலத்தினை யொக்கும்.

''நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்''

மடியின் தீயதுபிறி தொன்றின்மையான், அதனை அரசனெழிப் பானுயின், தானுயர்வன், உயரவே, குடியுயரும் ஆகவே, அவன் குடியுள்ளும் ஆண்மையுள்ளும் மடியானன்றி முன்னே பிற காரணங்களால் நிகழ்ந்த குற்றங்களுங்கெடும். மடியினது தன்மையாகிய செயற்கேடு குடிசெய்தற்றன்மைக்கண் தங்குமா யின், அஃதவனைத் தன் பகைவரிடத்துத் தாழ்ந்து நின்றேவல் கேட்குந் தன்மையை யுண்டாக்கும்.

''மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னுர்க்(கு)
அடிமை புகுத்தி விடும்''

அன்றியும், அவனால் புரந்தரப்படுவதாகிய குடி யவனினும் முந்துற அழியும்.

(ஐ) மடிகெடுத்தாலும் முயற்சியான் வினையாளப்படும். வினையை முடித்தற்கேற்ற பெருமையை முயற்சிதரும். ஆதலின் தஞ்சிறுமைநோக்கி, யான் இவ்வினை முடித்த லருமை யுடைத்தென்று கருதித் தளராது விடாது முயலத் தான் பெரிய னுவன். செய்யப்படும் வினைக்கண் தவிர்ந்திருந்தலையொழித்து முயற்சியினிலைபெற்று நிற்கப் பொருள்கை கூடிக் கவர்தற்குரி யாராவர். பேடி வாளை ப்பணிகோடற் கருத்துடையனாயினும் அது தன்னச்சத்தான் முடியாதவாறுபோல பயற்சியில்லாதான் பலர்க்கும் துணைசெய்தற் கருத்துடையனாயினும் அது தன் வறு மையான் முடியாதாம்.

"தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும்.

இம்முயற்சியானது தெய்வமியையாவழிப் பயன் தராது என்பா ருளராயினும், உலகம் பழவினை பற்றிப்பழியாது ஈண்டைக் குற்றமுடைமை பற்றியே பழிப்பதாகலாதனும், தெய்வத்தானய வழி தன்னளவின் மிக்க பயனைத்தருதலானும், ஊழ் ஒருகாலாக விருகாலாக வல்லது விலக்கலாகாமையிற் பலகால் முயல்வார் சூழ்ச்சியினும், வலிமுதலிய வறிதலினும், செயலினுங் குற்றமறு தலானும், தெய்வம் நோக்கியிராது முயலுதல்வேண்டும்.

"ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்"

தனக்கின்பத்தை விரும்பானாகி வினைமுடித்தலையே விரும்பி மடியிலாதானது முயற்சிக்கண்ணே திருமகள் உறையுமென்ப வாதலின், அத்தன்மையோனே சுற்றத்தார் நட்டாரது வறுமை யுந் தீர்த்து அவர்க்கு ஏமஞ் செய்யுமாற்றலையுடையனாவன்:

"இன்பம் விழையான் வினைவிழைவான் றன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண்"

(தொடரும்)

தென்மொழி முகவரி மாற்றம்.

திருப்பாதிரிப்புலியூர் (கடலூர்–2) என்ற முகவரியில் நடந்துகொண்டிருந்த 'தென்மொழி' இக்கால் கடலூர்–1-க்கு மாற்றப்பெற்றுள்ளது. அன்பர்கள் யாவரும் இனி, 'தென்மொழி கடலூர்–1' என முகவரியிட்டே மடல்களையும், பணவிடை களையும், காசோலைகளையும் விடுக்க வேண்டுகின்றோம்.

அமைச்சர்,
தென்மொழி,
கடலூர்–1.

அறமகள் மாலை

புதுவை-சுப்பிரமணியன்.

(அறத்தை மகளாக முன்னிலைப் படுத்திப் பாடியது)

சிறந்தோளிர் நல்வாழ்வு சீர்சால் மனையறம்
செம்மையொன்றே
புறந்தரு மக்கள் புகழ்சேர் வினைநற்
பொறை யினிமை
நிறைந்தோளிர் கேண்மை நிலைவழா நேர்மை
நிறைவுடைமை
அறந்தரு நெஞ்சர்க்கல் லால்யார்க் கமையும்
அறமகளே!

படையாளு மன்னவர் பண்பு பிறழ்ந்து
பழிமிகுத்தால்
புடையாளும் இல்லம் புகழாளும் மூதூர்
புவியடங்கக்
குடையாளுஞ் செங்கோல் அடங்கலுஞ் செந்தீக்
குளிக்குமென
அடையாளங் காட்டி அரசாளு வாய்நீ
அறமகளே!

வாணிக மோஅர சூழிய மோபின்
வயிற்றுணவு
காணுதற் காக்கொண்ட கைத்தொழி லோநுண்
கலைபலவும்
பேணிய வாழ்வோ எதுவோ அதனிடைப்
பீடரும்ப
ஆணிவே ராக அறம்ஊன்றல் வேண்டும்
அறமகளே!

ஒழுக்கத் துயர்ந்தார் ஒதுக்குப் புறத்தில்
ஒதுங்கிவிட
இழுக்கு நெறிசார்ந்த கூத்தாட்டு வேந்தரை
ஏத்திடுமோர்
வழக்குப் பெருகிய நாட்டினில் வற்றுக்
கரிசெனுமோர்
அழுக்குப் படியா தறமா படியும்
அறமகளே!

பொள்ளற் குடத்திற் புனல்தங்கு மோவுட்
பொதிந்துவைத்த
கள்ளிக் குடுவையிற் காணுமோ நன்மணம்?
கட்டிவைத்த

கள்ளப் பணத்தைக் கடவுட்கும் ஏழைக்கும் கண்டமட்டும்
அள்ளிக் கொடுத்தால் அறஞ்சாரு மோசொல் அறமகளே!

உண்மை நிலைக்க உழைப்பவர் போல உலகுறுபொய்
எண்மையை எல்லாம் எழில்வண்ண ஏட்டினில் ஏற்றிவிற்று
வண்மைய ராக வளமனை தோறும் மகிழ்பவர்நின்
அண்மையில் நிற்க அடைவவர்க் குண்டோ அறமகளே!

மக்களின் தொண்டுக்கு மார்தட்டி யோர்சில மாதங்களில்
பொக்கெனத் தோன்றும் புகழையே விற்றுப் பொருள்திரட்டி
ஒக்கலுந் தாமும் உயர்ந்திடில் போதுமென் றுள்ளடங்கும்
அக்குறும் புக்கோர் அறுதி இடாயோ அறமகளே!

அழைத்தவர்க் கெல்லாம் புகல்தரும் இற்றை அரசியலிற்
பிழைத்தவர் பொன்றப் பிழையார் பெருமை பிறங்கிடவே
விழித்தநின் நோக்கம் விளைத்திடல் நன்றே வியனுலகில்
அழித்தலும் ஆக்கலும் வல்லநன் னோக்க அறமகளே!

ஓரா யிரம்விதைத் தொப்போலை எண்ணிக்கைக் கொத்தபடி
ஈரா யிரமோபன் னீரா யிரந்தானோ இல்லையெனில்
ஊராளும் வாய்ப்பே கிடைத்திடு மோவென் றுணர்வுகெட
ஆராய்வர் நாப்பண் அறம்எவண் வாழும் அறமகளே!

நாளும் பிறநாடு காவடி தூக்கி நயமுரைத்துக்
கூளமோ குப்பையோ யாதோ கிடைக்கக் கொணர்ந்துவந்து
நீளுமோர் இன்மைப் பிணிபோக்கு கின்ற நிலைகெடுமோ
ஆளுவோ ரெல்லாம் அறங்கடை நின்றால் அறமகளே! *

நன்றி... ...!

இவ்வாண்டு இறுதியில் காரைக்குடி அழகப்பர் கல்லூரித் தமிழ் மன்ற நிகழ்ச்சிகளின் பொழுது, மன்றச் சார்பில் மாணவர்களால் தென்மொழி யிதழ் வளர்ச்சிக்கு உருபா இருபத்தைந்து வழங்கப் பெற்றது. தமிழ் மணம் கமழும் அம் மாணவ நெஞ்சங்களின் அருளாண்மைக்குப் பெரிதும் நன்றி சாற்றுகின்றோம்.

– ஆசிரியர் –

கட்டுரை இலக்கியம்

புலவர். தி. நா. அறிவுஒளி.

உரை நடை பண்டை நாள் தொட்டே தமிழில் நனி செழித்து வளர்ந்து வருகிறது. தமிழின் சொல்வளமே இலக்கிய வளத்துக்கு முதல்நிலையாகும். கட்டுரை இலக்கியம் தற்காலத்தில் ஓரளவு வளர்ந்து வருவதற்கும் சொல்வளமும் அறிவு முனைப்புமே காரணங்களாம். கட்டுரைத் துறையின் அனைத்துப் பிரிவுகளிலும் எழுத்தாளர்கள் எழுதி வருகின்றனர். ஆயின் இன்று அரசியல் கட்டுரைகளே மிகுதியாக எழுதப்படுகின்றன. இத்துறையில் வருங் கட்டுரைகளுள் பல பயனற்றும் போகின்றன ஒரு சிலரின் அரசியற் கட்டுரைகளே இலக்கியத் தகுதியோடும், பிற்காலத்தில் நிலைப்பனவாகவும் அமைகின்றன. பல அரசியற் கட்டுரைகள் கண்மூடிப் போற்றுவனவாகவும், தூற்றுவனவாகவும் அமைந்து விலைபோகின்றன புண்ணால் விளையும் ஊறலுக்குப் பரபரவெனச் சொறிந்து கொள்வதைப் போலவே பல கட்டுரைகள் இத்துறையில் படபடத்து ஒழிகின்றன. தக்க அரசியல் அறிவும் தெளிவும் இல்லாதார் சொற்சிலம்ப ஆட்டமிட்டுக் கட்டுரை தீட்டுகின்றனர். இளைய எழுத்தாளர் தம் தகுதியை உயர்த்திக் கொள்ள வேண்டியது நனி இன்றியமையாததாம். அம்மட்டோ! இவர்கள் பண்போடு எழுதும் நல்லொழுக்கத்தையும் மேற்கொள்ள வேண்டும். இன்றேல் இவர்தம் கட்டுரைகள் ஆடிக் காற்றோடோடிப் போம் இலைகளாகும.

தமிழிலக்கிய விளக்கக் கட்டுரைகள் மிகுந்த அளவில் எழுதப்பட்டு வெளியாகின்றன. இத் துறையில் உண்மை நோக்குடன் ஈடுபடும் எழுத்தாளர் மிகவும் பாராட்டுதற்குரியராவர். பண்டை இலக்கியங்களை வழக்குக்காட்படுத்தி, அவை இஞ்ஞான்றும் பயன்படுமாறு செய்யும் பணி மிகவும் வேண்டற்பாலதே கழக இலக்கியங்கள் பற்றி வெளிவரும் உண்மையான ஆராய்ச்சி, திறனாய்வு, விளக்கக் கட்டுரைகள் இன்னும் மிகுதியாக வரல்வேண்டும் பல்வகை நோக்குகளோடு கழக இலக்கியக் கட்டுரைகள் உருவாக்கப்படல் வேண்டும். கழக நூற்பாக்களைக் கதைப் போக்கில் விளக்கும் முறை பெரும்பாலோரால் கையாளப்படுகிறது. இதனால் எளிய சுவைஞர் கழகக் காலப்பாக்களை அறிமுகஞ் செய்துகொள்ள வாய்ப்பமைகிறது ஆயின், திணை, துறை-கூற்று; பாடல் தோன்றிய சூழல்; பாடலின் முன் - பின் சூழ்நிலை - வரலாறு ஆகியவற்றோடு கழகப் பாக்களை விளக்கி எழுதப்பட்ட சுவைக் கட்டுரைகள் குறிப்பிட்ட அளவில் மட்டுமே வந்துள்ளன. ஆயினும் இத் தகைய கட்டுரைகள் போலியாக இருந்துவிடக் கூடாது. எழுதச் செய்தியில்லாதவரும், எளிதில் காசு அல்லது பெயர்பெற விரும்புவாரும், இதை ஓர் எளிய வழியாகக்கருதி மேற்கொள்வதாகத் தெரிகிறது. இப் போலிநிலை கடியத் தக்கதாகும்.

அறிவியல், ஆய்வியல், தொழிலியல், பொறியியல், மின்னியல், உழவியல், வணிகவியல், பொருளியல், செலவியல், வானியல், தொல்பொருளாய்வியல், கலையியல், திரையியல், புள்ளிவிளக்கவியல், இலக்கணவியல், மொழியியல், வரலாற்றியல், நிலவியல், இயற்கையியல், பகுத்தறிவியல், மன்பதையியல், சீர்திருத்தவியல், குமுகாயவியல், பாவியல், உளவியல், கல்வியியல், நாடகவியல், இசையியல், ஆடலியல், நுண்தொழிலியல் முதலிய துறைகளிலும் பல கட்டுரைகள் பயன் தருமளவில் வெளிவந்துள்ளன. ஆயினும் இத் துறைகளில் ஆங்கிலம் முதலிய மொழிகளில் வெளிவந்திருக்கும் அளவுக்கு நூல்களோ, இதழ்களோ, புதுப் படைப்புகளோ போதிய அளவு வரவில்லை என்பதை வருத்தத்தோடு குறிப்பிடவே வேண்டும். ஆயின், இன்னுஞ்சில ஆண்டுகளுக்குள் ஏனைய இந்திய மொழிகளைவிடத் தமிழில் மேற்குறித்த இயல்களில் கட்டுரைகளும், நூல்களும் மிகுதியாக வளரும் என்பதில் ஐயமே இல்லை. எழுத்தாளர்கள் மேற்குறித்த துறைகளில் நிறைய எழுதிக் குவிக்கப் 'பேராண்மையோடு' முன்வரல் வேண்டும். ஏன் எழுத்தாளர் பலர் இத்துறைகளில் எழுத முன்வரவில்லை என்பதையும் நாம் உணர வேண்டும். இத்தகு பயன் துறைகளில் மிகப் பாடுபட்டு எழுதினாலும், அவை உடனே வெளியாகக் கூடிய வாய்ப்பும் போதிய அளவில்லை. இத்தகைய நூல்களைக்-கட்டுரைகளை-முயன்று எழுதுபவர்களுக்குப் போதிய ஊக்கமோ, பாராட்டோ, செல்வமோ, முதன்மையோ தரும் அளவுக்கு மக்களும், பதிப்பாளர்களும் முன்வரவில்லை. ஓரிரு இதழ்களே இனைய புதுத் துறைகளுக்கென வெளியாகின்றன. அவையும் பெரிய அளவில் படிப்போரால் வரவேற்கப்படவில்லை. அவ்விதழ்கள் 'பேருதியம்' இன்றியே உயிர் வாழ்கின்றன. இந்நிலைக்கு இரங்கவே வேண்டும். தமிழர் அறிவுத் துறையில் வரும் ஏடுகள், நூல்களை வரவேற்க-வாங்கிப் படித்துப் பாராட்டக்-கற்றுக்கொள்ள வேண்டும்.

வாழ்க்கை வரலாறு, திறனாய்வு முதலிய துறைகளில் சிறந்த ஓரிரு நூல்களே வந்துள்ளன. பல நல்ல படைப்புகள் வெளிவரல் வேண்டும். திறனாய்வுத் துறையில் குழப்பமான கொள்கைகளும், நேர்மையற்ற முடிபுகளும் தலைவிரித்தாடுகின்றன. இவை மாறி, நிலையான போக்குடைய திறனாய்வுப் படைப்புகள் ஓரளவு உருவாகி வருகின்றன. இந்நிலை வளர இலக்கியத்துறை உதவுதல் வேண்டும். பொதுவாகக் கட்டுரையாளர் பலர் நற்றமிழ் நடையில் எழுதி வருகின்றனர். எனினும் குறிப்பிட்ட சிலர், சில குழுவினர் 'கலப்புத் தமிழில்' எழுதுவதே தொழிலாகக் கொண்டுள்ளனர். இவர்களின் 'குறுகிய அறிவு' தெளிவு பெறவில்லை யென்பதைக் குறிப்பிடவே வேண்டியுள்ளது. தனித்தமிழில் கட்டுரைகள் எழுதுவதில்

நல்லறிஞர் பலர் உழைத்து வருவது மிகவும் பாராட்டுதற்குரிய தொண்டாகும். மக்களின் ஊக்கமும் உதவியும் இக் கட்டுரையாளர்க்குப் போதிய அளவு கிடைக்கவில்லை. இவ்வகையில் மக்கள் திருந்தவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கட்டுரையாளருள் பலர் சொல்லாட்சியில் போதிய கருத்திருத்தாமற் புறக்கணிப்பாக இருக்கின்றனர். சிறிய இக் குறையைக் களைவது பெரிய செயலன்று. கட்டுரைகளையும், கட்டுரை நூற்களையும் மிகுதியாகப் படிக்கும் பழக்கம் மக்களிடை மிகுதல் வேண்டும். கட்டுரை நூற்களை ஆர்வத்தோடு வாங்கிக் கற்கும் சுவைஞர் தொகையும் வளர்தல் வேண்டும்.

தமிழில் 'சொல்லுதல்' என்ற பொதுப் பொருள்படப் பல சொற்கள் இலக்கியங்களுட் பயில்கின்றன. மாற்றம், நுவற்சி, செப்பு, உரை, கரை, நொடி, இசை, கூற்று, புகறல், மொழி, கிளவி, விளம்பு, அறை, பாட்டு, பகர்ச்சி, இயம்பல், சொல், என்ற பதினேழு சொற்களும் ஒ ரே பொருள் குறிப்பன போல் தோன்றும். ஆயினும், இவை நுண்ணிய பொருளுணர்வு வேறுபாடு உடையனவேயாம்.

"மாற்றம் நுவற்சி, செப்பு கரை நொடி யிசை
கூற்றுப் புகறல் மொழி கிளவி விளம்பு அறை
பாட்டுப் பகர்ச்சி யியம்பல் சொல்லே" (நன்னூல்: 457)

இச்சொற்கள் பல்வேறிலக்கியங்களில் பல்வேறுணர் திறனோடு ஆளப்பட்டுள்ளமையை மயிலைநாதர் நன்னூலுரையில் மேற்கோள் காட்டியுணர்த்தியமை கற்றறிதற்குரியதாம்.

அதே போல 'ஓசை' என்ற பொருள் படும் சொற்கள் இருபத்திரண்டை நன்னூலார் உரிச் சொல்லியலில்குறிக்கிறார்!

"முழக்கு இரட்டு ஒலி கலி யிசை துவை பிளிறு இரை
இரக்கு அழுங்கு இயம்பல் இமிழ் குளிறு அதிர் குரை
கனை சிலை சும்மை கௌவை கம்பலை
அரவம் ஆர்ப்போடு இன்னன ஓசை,, (நன்னூல்: 458)

இவை போல அமலை, துழனி, ஓதை, கரை, குரல், கூச்சல், முதலியவையும் ஓசைப் பொருள் படுவனவேயாம். இவற்றுள் பொருளமைவு வேற்றுமை நுண்ணிதாக அமைந்துள்ளது. இவ்வாறு பல சொற்கள் தமிழில் அழகாக அமைந்து கிடக்க அவற்றின் நுண்மையும் பயனும் பற்றிக் கவலைப்படாமல் சொற்களில் என்ன இருக்கின்றது என்று எள்ளியுரைத்துக் கைக்கு வந்தபடியெல்லாம் எழுதிக் கொண்டிருக்கும் நிலை மாறல் வேண்டும் கற்பார்க்குத் தன் மொழியின் ஆற்றலும் திறனும் சிறப்பும் உணர்த்தாத எழுத்தாளன் என்ன எழுத்தாளன்?

இதைப்பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்களோ,

நாங்கள் இப்படித்தான் கருதுகிறோம். தொடர்-3

ஆனந்த விகடன்:

பார்ப்பனர்க்காகப் பார்ப்பனரால் தொடங்கப் பெற்ற பார்ப்பன இதழ். தொடக்க நாளிலிருந்து இதன் குறிக்கோள் மறை முகமாகவும், வெளிப்படையாகவும் பார்ப்பனர் நலத்துக்குப் பாடுபடுவதே. இதன் வேலை பார்ப்பனக் குமுகாயத்தின் வாழ்க்கைமுறை, நடை, உடை, பேச்சு, பழக்க வழக்கங்களைப் பரப்பி வருவதே! இதில் வெளியாகும் கதைகளில் பார்ப்பனக் குடும்பங்களில் அன்றாடம் நிகழும் நிகழ்ச்சிகள், பூசல்கள், விருப்பு வெறுப்புகள் இவற்றுக்கே முதலிடம். நகைத் துணுக்குகள், ஓவியங்கள் எல்லாம் அவர்களின் கோணல் மாணலுக்கு மதிப்புக் கொடுப்பவையே! பார்ப்பனரின் உரையாடல் தான் ஆனந்த விகடனின் "திண்ணைப் பேச்சு"! வடமொழியிலும் தெலுங்கிலும் அமைந்து பார்ப்பன இசைப் புலவர்களால் பெரிது படுத்தப்பெறும் தமிழருக்குப் பொருந்தாத வேற்றிசை தான் ஆனந்தவிகடனால் பாராட்டப்பெறும் இசை! எழுதும் தமிழோ "அவாள்" நாவில் அன்றாடம் உதிரும் "அத்திம்பேர்" 'அம்மாமித்' தமிழே! இவ்விதழின் ஆசிரியர் திரு. வாசன் அவர்கள் எடுக்கும் திரைப்படங்களில் பெரிதும் உருவாக்கிக் காட்டப்பெறுவதும் இத்தகைய சூழலே! பார்ப்பனர்க்கு எவற்றுலெல்லாம் நன்மை விளையும் என்று இவ்விதழ் கருதுகின்றதோ அவற்றை வரவேற்றுப் பாராட்டித் துணை நிற்பதும், அவர்தம் குறுகிய தந்நலத்துக்குச் சிறிதே தீங்கு நேரினும், எத்தகைய சீரிய திட்டமாயிருப்பினும் அதனை முழுவலிவுடன் எதிர்த்து நிற்பதும் இதன் கொள்கை. காலத்துக்குக் காலம் மாறுபட்ட மேற்பூச்சுகளைத் தாங்கி வந்தாலும் ஆனந்த விகடனின் அடிப்

(முன்பக்கத் தொடர்ச்சி)

கட்டுரைகள் தாம் நல்ல மொழியமைப்பையும், திறன் சால் சொல்லாட்சியையும் அமைத்து மொழித்திட்பத்தையும் இனிமையையும் ஓம்பி வளர்ப்பன. இந்நுட்பந் தேர்ந்து போற்றும் கட்டுரைச் சுவைஞர்கள் மிக வேண்டும். புதுத் துறைகளில், புது எண்ணங்களை நேரிய ஆய்வில் தெளிந்து எழுத்தாளர் கட்டுரை இலக்கியங்களைப் படைத்திடல் வேண்டும். கட்டுரை இலக்கிய வளர்ச்சியில் உலக இலக்கியத் தகுதியை அடையும் நிலை தமிழுக்கு விரைந்து அமைதல் வேண்டும். இதை நாம் நன்குணர்ந்து வினையாற்றல் வேண்டும்.

நம்மிடம் உள்ள குறைகள் களையக்கூடிய நிலையினவே. ஆகவே நாம் கட்டுரைத் துறையில் வளர்ந்த வளர்ச்சியை ஆராய்ந்துணர்வதால், நம் நிறையும் குறையும் புலனுவதோடு, நாம் வளர வேண்டும் முறையும் தெளிவாகும். ○

படைக் கொள்கை அதுவே. தமிழின் பெருமிதத்தை அழிக்கும் கொச்சை நடையைக் கையாள்வது மட்டுமின்றி, மொழி நடையால் தமிழை வட மொழிச் சார்புடையதாகக் காட்டுவதும், ஆரிய அழுத்தத்தால் த மி ழ ர் மீ து பரவிய மேலோட்டமான பழக்க வழக்கங்களையே பெரிதுபடுத்திப் பேசித் தமிழ்க் குமுகாயத்தை ஆரியச் சார்புடையதாகக் காட்டுவதும் இதன் உள் நோக்கம். இவற்றோடு நில்லாமல் தான் எழுதுவதே தமிழ் என்றும் தான் படம் பிடிக்கும் மக்களே தமிழர் என்றும், தான் பரப்பும் பழக்க வழக்கங்களே தமிழர் 'பண்பாடு' என்றும் காட்ட முயல்கின்றதே அதுதான் இவ்விதழ் விளைவிக்கும் பெருந் தீங்காகும். வெளிநாடுகளில் சென்று பழகும் தமிழகப் பார்ப்பனர் தமிழ் பேசுவதால் ' இவர்கள்தாம் தமிழர்கள்'என்று வெளிநாட்டார் கருதிக்கொள்கின்றனர். அவர்கள் தமிழையும் தமிழரையும் பற்றி மேலும் தெரிந்து கொள்ள விழையும்பொழுது ஆனந்த விகடன் அவர்கள்பால் அளிக்கப் பெறுகின்றது ஆ ஆனந்த விகடனே தமிழரின் மொழி, பண்பாட்டு, இலக்கிய நிலைகளைக் காட்டும் கண்ணாடியாகிவிடுகிறது! தமிழராய்ப் பிறந்த பண்பாட்டடிமைகள் ஒரு சிலரும் தந்நலம் கருதி இதற்குத் தலைவணங்கிப் போவது ஆனந்த விகடனின் துணிவை மிகுதியாக்கிவிடுகின்றது. இவ்விதழில் வந்த ''வாசிங்டனில் திருமணம்'' என்ற நகைச்சுவைத் தொடரைப் படிப்பார்க்கு நாம் கூறும் செய்திகள் விளங்காமற் போகா.

கதைகள் என்ற பெயரால் செல்வ நாகரிகப் போலிக் குமுகாயத்தின் உலகியல் ஆரவாரங்களையும், பெண்மையின் நிறை, நாண், பண்புக்கும் இயற்கைக்கும் பொருந்தாத காதலுணர்வு மிகைக் கற்பனைகளையும் வெளியிட்டு மக்களைப் பாழ்படுத்தும் இதழ்களில் முதலில் நிற்பதும் ஆனந்த விகடனே!

இஃது ஆற்றிவரும் பார்ப்பனத் தொண்டுகளில் சமயப் போலியை வளர்ப்பதும் ஒன்று. கோ யி ல் விழாக்கட்கும், ''யாக'', ''யக்ஞங்''கட்கும் இதில் விளம்பரங்கள் உண்டு. 'நடைபாதைக் கோயில்கள்'என்றொரு தொடர் சில மாதங்களின் முன்பு வெளிவந்தது. கண்டகண்ட இடத்திலெல்லாம் கோவில் கட்டிக் குடமுழுக்காட்டுவதும் விழா நடத்துவதும் உண்மைச் சமயம்'ஆகாது. இஃதறியா மக்களிடையே நிலவும் குருட்டு, மடமைச் சமய நாட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு, ஆரிய வினைப்பாடுகளின் அடிப்படையில் அமைந்த, பொ ய் மை நிறைந்த சமய அமைப்பு முறையைப் பாதுகாப்பதற்கென்றே உறுதி கட்டி வேலை செய்துவரும் சங்கராச்சாரிகள் போன்ற போலிச் சமயத் தலைவர்கட்கு ஆனந்த விகடன் சிறப்பிடம் அளிப்பதும் தன் இன நன்மை கருதியே! இப் போலிநிலைகள் மக்களிடையே மதிப்புப் பெற்றுப் பரவுவதனல் மூட நம்பிக்கை

பாட்டரங்கம்

இந்தி எதிர்ப்பு:

இன்னல் துடைப்பவர் ஆளவந்தார்–இனி
இன்பம் விளைந்திடும் என்றிருந்தோம்–கழி
துன்பத்திற்கே இந்தி கொள்கவென்று–திட்டம்
தீட்டிவிட்டார்! சட்டம் போட்டுவிட்டார்!

நாட்டினைக் காப்பவர் ஆளவந்தார்–தமிழ்
நன்மை புரிகுவர் என்றிருந்தோம்–இங்குக்
கேட்பவர் யாருமே இல்லைஎன்றே–இந்தி
சூட்டிவிட்டார்; நஞ்சை ஊட்டிவிட்டார்!

ஆண்மையுடையவர் ஆளவந்தார்–இந்தி
ஆட்சியை நீக்குவர் என்றிருந்தோம்–அடல்
ஆண்மையை எங்கோ அடகுவைத்தார்–இவர்
ஆமைகளோ? வெறும் ஊமைகளோ?

மானம் உடையவர் ஆளவந்தார்–தாயின்
மானத்தைக் காப்பவர் என்றிருந்தோம்–உயிர்
தேனினுக் கொப்பென மானம்விற்றார்!–கீழ்மை
செப்பிவிட்டார்; இந்தி ஒப்பிவிட்டார்!

வான்மழை, சென்னை-14.

வழிவழி வந்த வளமார் தமிழை
அழித்திட எண்ணும் அரசினர் நம்மை
விழித்தெழச் செய்தனர்; வீணரின் ஆட்சி
ஒழித்திட வாரீர்; உறுபுகழ் காக்கவே!

–மணிவேந்தன்' பூரிப்பாக்கம்.

(முன்பக்கத் தொடர்ச்சி)

கலை முதலாகக் கொண்டு] சமய வாணிகம் நடத்தும் கோவிற் பார்ப்பனர்கட்குப் பிழைப்பு நடக்கின்றது என்பதைத் தவிர ஆனந்த விகடனின் ''ஆன்மீக'' ''தார்மீக'' உணர்வுகட்கு வேறு என்ன நோக்கம் இருக்க முடியும்? தமிழினக் காவலர் எனப் பெறும் தமிழ்ப்பெரும் புலவர்கள் தாமும் பொறுப்பற்ற முறையில் இவ்விதழை வரவேற்றுப் பாராட்டுகின்றனரே, அது தான் வெட்கம்!

–கல்லாடன்.

விடைகொடு, தாயே விடைகொடு!
வேருடன் பகைவரை வீழ்த்தி வருகிறேன்

வெற்றிவல் வேலெடு; கையில் கொடு!
வேங்கைஎன் தலைமயிர் வாரிவிடு!
நெற்றியில் குருதியால் பொட்டிடு
நெஞ்சினில் துணை நீ இருந்துவிடு! (விடை)

புயல்போல் குதிரைகள் பூட்டிவிடு!
பொற்பிடி இட்டதோர் சாட்டை கொடு!
அயல்மொழி இந்தியை இங்கவிழ்ப்பார்
அவர்படு குருதியில் ஆடவிடு! (விடை)

வென்றால் வேலுக்கு மாலையிடு
வெற்றிச் சங்கம் முழங்கிவிடு!
இன்றேல் மகனை மறந்துவிடு!
இறுதிக் கடலை முடித்துவிடு. (விடை)

– கணியன், கோவை 1.

மொழியடிமை ஆக்குகின்ற ஒருமைப்பாடு
மோதுகின்ற வெள்ளத்துள் மணலின் வீடு!
விழியடிமைப் படுத்திவிட்டால் நமது நாடு
விழிகெட்டோன் தடுமாறும் இருளின் காடு.
பழியடிமை பிறர்க்கேற்றால் நம் பண்பாடு
படுகுழியில் புதையுண்ணும் உயிரில் கூடாம்!
இழிவடிமை செயும் இந்தி விளைக்கும் கேடே!
இனிப் பொறுத்தால் தமிழர்க்கே அழியும் பீடே!

மாற்றாரின் மொழிசுமக்கும் கழுதை நாமோ?
மற்றவரின் மொழிப்பற்றே நமக்கும் ஆமோ?
வேற்றார்க்கேன், நம்மவர்க்கும் விளங்கவில்லை?
விழித்திருப்பார் தம்தூக்கம் கலைத்தல் ஆமோ?
சோற்றுக்குப் பிறந்தோமா மண்ணில் நாமே?
சுடர் தமிழன் சீரோங்க நாமெல் லாரும்
ஆற்றும்நன் மொழிப் போரில் வென்றபின்பே
அரும்புரட்சிப் பொருள் வடக்கே விளங்கும் போலும்!

-இரா. சோதிவாணன், கோவை 4.

அள்ளும் தமிழாம் அருமை மொழிகாக்க
வெல்லும் திறங்காட்டி வீழ்ந்தாரே – கொல்லெரியில்!
நேர்மையிலாப் போக்கைத் தடுத்து நிறுத்திடவே
சேர்ந்திடுவோம்; அன்னவர்பின் சென்று!

பண்டை இலக்கியத்தில், பார்புகழும் பைந்தமிழில்
விண்டுரைக்க ஒண்ணு வியன்மறத்தைக்–கண்டிருந்தென்?
மண்டுபுகழ் கொண்ட மறத்தமிழர்க் கின்றுநலம்
கண்டுயர்தல் நந்தம் கடன்!

—கைம்மலை, பொறையாறு.

எடும் எடும் எடும் என எடுத்ததோர்
இணையறு தமிழரின் அறப்படை
வடவரை அடியுற அடக்கிடும்
கொடுமையை, மடமையை ஒடுக்கிடும்!

ஏறென ஏறிடும் மாணவர்
வீறுடை மாநடை பாரடா!
மாறிடும் மானமி லாதவர்
வேரொடு காலடி வீழுவர்!

கடலென, இடியென முழங்கியே
கயவர்கள் உடலொடு நொறுங்கவே
மடியறு தமிழரின் அறப்படை
மடமட என இனி நிறைந்திடும்!

ஒருவயி றதுதனி லிருந்தவர்
ஒரு குரு தியிலுடல் வளர்ந்தவர்
பெருகிடு தமதின மதித்திடும்
பிழைதனை இனியிறை பொறுக்குமோ?

திரளுக திரளுக படைகளே!
செருக்குறும் இழிமொழி சிதறவே!
மருளுக, வெருளுக பகைவரே!
மணிமொழி தமிழ்இனி உயர்கவே!

—இரா. இராசேந்திரன், புதுவை.

தன்னுரிமை வேண்டுமடா – இல்லையேல்
தாழ்வு நமைத் தீண்டுமடா! – தமிழா
உன்மொழி, உன்நிலம் உன்உரிமை அல்லவா? –தமிழ்த்
தன்மையைத் தொன்மையைப் பின்வருவார் வெல்லவா?

மயக்கம் களைந்திடு; தயக்கம் தொலைத்திடு.
மான எழுச்சியால போராடு!
வியக்கக், கொடியவர் மயற்கை வெறியற
வெம்மைக் களைஎடு. வேரோடு!

துணிந்து செயற்படு! முனைந்து செயற்படு!
தூய தமிழகம் நம் நாடு!
பணிந்த நிலைமையில் திணிந்த கொடுமையைப்
பாற மலைந்துசெல் தெம்போடு!

வழிவழி வந்த வளமார் தமிழை
அழித்திட எண்ணும் அரசினர் நம்மை
விழித்தெழச் செய்தனர்; வீணரின் ஆட்சி
ஒழித்திடவாரீர், உறுபுகழ் காக்கவே!

—மணிவேந்தன், பூரிப்பாக்கம்.

அடிமைத் தளை அறு! மிடிமைக் களை யெடு!
ஆள்க தமிழ்நாட்டைத் தமிழாலே!
அடைக உரிமையை! அடைக புகழினை
ஆவி கொடுத்தேனும் அடைவாயே!

—காரை-இறையடியான்.

இந்திமொழி தேவையில்லை என்று சொன்னால்
இங்குள்ள மந்திகட்குத் தீமை என்ன?
சொந்தமொழி காப்பதற்கும் சொந்த நாட்டைச்
சுரண்டலின்றி மீட்பதற்கும் எழுச்சி கொண்டால்
எந்தவகை இவ்வெழுச்சி தவறே யாகும்?
எதிர்ப்பாளர் நன்மையினை எதிர்ப்பார் ஆவர்!
நொந்தமன மக்கள்தமைப் புண்செய் வாரேல்
நொறுங்கிவிடும் இவராட்சி, ஐய முண்டோ?

-அரசியன்பன் அம்மையப்பன்.

என்று முள்ள எழிற்றமிழ் இன்பினை
ஒன்று பட்டே ஒழுங்குடன் போற்றிடின்
வென்றி மேவும்; வெறியறும்; செந்தமிழ்
நின்று முன்னில் நிலைப்புகழ் எய்துமே!

உள்ள கட்சி ஒருமையை வேட்குறின்
கள்ளம் பொய்மை கவிழ்ந்திடும்; மெய்மையில்
துள்ளு தாய்மை துலங்கிடும்; செந்தமிழ்
வள்ளல் அன்ன வளர்புகழ் எய்துமே!

கண்டு போலும் கணக்கறு பாவியம்
உண்டு பண்ணும் உயர்தமிழ் ஆற்றலர்
தொண்டு நெஞ்சம் மலர்ந்திடின் செந்தமிழ்
பண்டில் நல்ல படர்புகழ் எய்துமே!

நாட்டு மக்கள் நவையறத் தாய்மொழி
வேட்டு நின்று விளங்கிடல் தாயகக்
கேட்டை நீக்கும்; கிளர்நலச் செந்தமிழ்
ஊட்டும் ஆட்சி உயர்புகழ் எய்துமே!

கற்கச் செல்லும் கவின்திகழ் மாணவர்
முற்றும் கல்வி மொழிதமி ழால்பெறின்
உற்றதீமை ஒடுங்கிடும்; செந்தமிழ்
பெற்ற சீர்மைப் பெரும்புகழ் எய்துமே!

—காரை-அலீம்.

உள்ளத்தில் கொதித்தெழும்பும் தமிழ்மறந் தான்!
　　உணர்வுமிகு சூளுரைகள் துடிக்கும் நாவில்!
எள்ளுநரை இகழ்ந்தெதிர்த்து முழக்கம் செய்ய
　　இந்தியினைக் கிழித்தெறியத் தோள் புடைக்கும்!
பள்ளத்தில் பாய்ந்தோடும் நீரையொப்பப்
　　பகை கண்டு பாய்ந்திடவே திரளுவோம் நாம்!
உள்ளத்தை நன்ருக்கி, உயர்வு நாடி
　　ஊக்கத்தால், அழிக்கவரும்தீங்கெ திர்ப்போம்.

—வீ. வீராச்சாமி, திருப்பனந்தாள்.

இயற்கை:

ஆறு:

மலைமீதில் தலையை வைத்து மண்மீதில் காலை நீட்டிக்
கலையுருப் பொலிந்தாய் உன்னைக் காண்பார்க்கு
விருந்தும் ஆனாய்
அலைபயில் நின் உடம்பை அயர்வற முரித்துக்
கொண்டே
அலைபட நடந்து மின்னி அரவென நெளிதல்
கண்டேன்.

ஏந்திய குவட்டு மார்பின்
　　எழில்மலை மங்கை யாள்தன்
பூந்துகில் தன்னைக் காற்றில்
　　உலர்த்தல்போல் அசைந்திருந்தாய்
மாந்தருள் மடவார் போலும்
　　பயிரிடைக் களைகளுக்கும்
ஏந்தியே சென்ற நீரை
　　இறைத்தனை; நல்லார் போன்றாய்!
மலைவளர் செல்வம் எல்லாம்
　　மடியினில் மறைத்துச் சென்றே
அலைவளர் கடலுள் மெல்ல
　　அவிழ்த்தனை! வடிக்க வொண்ணாக்
கலைவளர் எழிலால் உள்ளம்
　　கனிவித்தாய்; எழுஞாயிற்றால்
ஒளிவிடும் பட்டே யாகி
　　ஒளிர்ந்தனை புன்னகைத்தே!
புன்னைவெண் மலர்கள் போலும்
　　புதுப்புனல் நுரை கொழித்துத்
தென்னையின் இள்நீர் போலத்
　　தெவிட்டாத சுவை நீர் ஆகி
மண்ணலம் காக்க வந்த
　　மடந்தையே உலகளிக்கும்
தன்னலம் இல்லாத் தொண்டைத்
　　தருகிறாய் நிலைத்து நின்றே!

—உலகுதாசன், சிங்கப்பூர்.

கடல்.

அறிவியலார்:

''முத்தம் பவளம் முதலான செல்வங்கள்
அத்தனையும் உன்பால் அகழ்ந்திடுவோம்-கத்தும்
கடலே உவர்ப்பால் கரிக்கின்ற உன்னில்
குடிநீரும் செய்வோம் குறித்து.''

புலவர்:

''பலகாதம் மேவிப் பரந்திருக்கும் ஆழி!
நிலையாக நில்லாயோ நீதான்?-அலையாலே
நீயழித்த நற்றமிழ்நூல் போதாவோ? பொங்காமல்
போயடங்கி, ஓங்குதமிழ் போற்று!''

சிறுவர்:

''ஓடி மணலெடுத்தே உன்னருகில் நாங்களெலாம்
வீடு சமைப்போம் விளையாட-சாடும்
அலையால் அவற்றை அழிக்காதே! என்றும்
நிலையாக அங்கேயே நில்!

—வியாசை. சரவணகுமார், சென்னை-12.

காதல்:

உள்ளத்தைத் தொட்டவள் நீ! — இளம்
உணர்ச்சியில் பட்டவள் நீ!
இல்லத்தில் துணைவியும் நீ — என்
இன்பத்தின் தலைவியும் நீ!
நினைவெனும் வாயிலுள் நீ! — என்
நெஞ்சகக் கோயிலுள் நீ!
கனவெனும் நிகழ்வினில் நீ! — என்
காதலின் ஓவியம் நீ!
ஓடிடுங் குருதியும் நீ!
ஒளிதரும் இருவிழி நீ!
தேடரும் இன்னுயிர் நீ! — எண்
திசையிலும் ஒளிர்பவள் நீ!

—வசந்தன், திருவொற்றியூர்.

உன்னை மணந்தால் இந்த நிலத்(து)
உயர்வுக் காகப் பாடுபடும்
என்னை ஊக்கும் பெருந்துணையாய்
இருப்பாய் என நான் மனந்துணிந்தே
அன்பே உன்னை மணக்கின்றேன்
அயலார் அலர்க்கே அஞ்சாமல்
துன்பம் தொடரின் கலங்காமல்
தூயன எண்ணித் துணையாவாய்!

உண்மை உணர்ந்து பொதுநலத்தில்
ஊக்கம் கொண்டு முனைவாரின்
தன்மை அறியா உலகமிது!
தாயின் கழுத்தை அறுப்பார்க்கே

நன்மை புரியும்; அவர்செயலில்
நாட்டங் கொள்ளும்; உடல் அழிவைக்
கண்டும் தெளியார்க் குயர்தொண்டாம்
கருத்தைப் பரப்பத் துணையாவாய்!

நாட்டுப் பற்றும் மொழிப்பற்றும்
நந்தம் பண்பா டெனும்பற்றும்
ஏட்டுச் சுரைக்காய் என ஆக்கி
இழிந்த மாக்கள் பால் உண்மை

நாட்டுப் பற்றை மொழி உணர்வை
நானின் றெழுப்பல் பணி எனவே
வேட்கை மிகுந்தேன் பொதுப்பணியில்
விழைவோ டெனக்குத் துணையாவாய்!

—இரா. கிள்ளிவளவன், இரும்புதலை.

பொது:

'நிறத்தினால் உயர்ந்தேன்' என்றே நிலைதடு மாறிச்
சொல்வோன்
அறத்தினால் உயரமாட்டான்; அறிவிலா விலங்கின்
தாழ்ந்தான்.
'பிறப்பினால் உயர்ந்தேன்' என்று பிதற்றியே திரியும்
பித்தன்
சிறப்பினால் உயரமாட்டான்; சிற்றறி வுடையோன்
ஆவான்!
தன்குலம் ஒன்றே வாழத் தன்மொழி மட்டும் ஆளத்
தன்னினம் தனித்தே ஓங்கத் தன்னையே வளர்க்கும்
இந்தத்
தன்னலப் புன்மை மிக்க தரக்குறை வான வாழ்வை
இன்றுமாய்த் துயர்வை நாட இங்குளார் யாரே, கூறீர்!

—பெருந்தேவன், அண்ணாமலைப்பல்கலைக்கழகம்.

எளிதாகக் கற்றுணரும் கதைநூல் எல்லாம்
எழில்வாழைக் கனிக்கே தான் ஈடேயாகும்
களிசேர்க்கும் கொழுஞ்சுவைசால் பாவியங்கள்
கனிந்தசுவை மாங்கனிக்கே உவமையாகும்.
தெளிவோடு பொருள் பொதிந்த கழக நூலின்
திறமனைத்தும் பலாப்பழத்தின் திறமேயாகும்!
துளிதிறம்பாச் செஞ்சொல் மெய்ச் செறிவும், இன்பும்
துருவியுணர்ந் தறிவாருக் கினிமை யாமே!

— கைம்மலை, பொறையாறு.

கட்டுரையாளர் கவனிக்க!

நூல் ஆராய்ச்சித் துறை ஒன்றே கட்டுரைகள் எழுதுதற்குரிய தாகப் பெரும்பாலார் கருதுவதாகத் தெரிகின்றது. பண்டைத் தமிழ் இலக்கிய நயம் பாராட்டி எழுதுதலே புலமைக்கு அடையாளம் என்றும், கம்ப இராமாயணத்தையும், பழங்கதைகளையும் கடிந்து எழுதுதலே புதுமை, சீர்திருத்த மனப்பான்மைக்கு அடையாளம் என்றும் அவர்கள் கருதுகின்றனர் போலும்.

தாமாக எண்ணித் தம் உள்ளார்ந்த அறிவால் வாழ்க்கையின் பல சிக்கல்கட்கு விடை காணுவதாக எழுதப்பெறும் கட்டுரைகள் வருவதே இல்லை எனலாம். கட்டுரை எழுதுவதை ஒரு நாகரிகமாகக் *(fashion)* கருதி எழுதப்பெறும் சார்புநிலைக் கட்டுரைகளே மிகுதியும் வருகின்றன.

சிலப்பதிகார ஆராய்ச்சி, மணிமேகலை விளக்கம், கம்பனின் நிறையும் குறையும், வான்மீகியின் பாவிய அமைப்பு, நற்றிணை நயம், குறுந்தொகைச் செல்வம் இவைபோன்ற கட்டுரைகளே எவ்வகைப் புதுநோக்குடனும் அணுகப் பெறாமல் திரும்பத் திரும்ப வந்துகொண் டிருப்பதால் எப்பயனும் விளைவதில்லை என்பதோடு அதற்குமேல் நாம் எட்டிப்பிடிக்க வேண்டுவன, நம் அறிவு, உணர்வு வளர்ச்சிக்கு வேண்டுவன எவையுமே இல்லை என்று நாமே ஒரு வட்டம் போட்டுக் கொள்வதாகவும் ஆகின்றது.

வளர்ந்துவரும் அறிவியலுக்கேற்பப் பலபுதிய துறைகளில் மக்கட்கு எத்துணையோ செய்திகள் தெரிவிக்கப்பட வேண்டியுள்ளன. மக்களின் வாழ்வியல் துறைகள் பலவற்றையும் அணுகி அறிவு கொளுத்த வேண்டியுள்ளது. தமிழ்ப் பேராசிரியன்மார்தாம் இவற்றை அணுகுவ தில்லை. இளங்கோவின் காலத்தைப் பற்றி, சாத்தனாரின் பாநயம் பற்றி, வள்ளுவரின் 'சமயம்' பற்றி இன்ன பேராசிரியர் இன்ன கருத்து உடையார் என்று மக்கள் தங்களைப் பற்றிக் கூறிக் கொள்வதனை அவர் கள் விரும்பிக் கொண்டிருக்கலாம்; இருக்கட்டும். கல்லூரிகளில் பல்துறை அறிவு புகட்டும் அறிவியல் பேராசிரியர்களும், புதுநோக்கு உடையஅவர்தம் மாணவர்களும் இத்தகையதுறைகளில் தேவையான, பயனுள்ள கட்டுரைகள் எழுத வேண்டுகின்றோம். அறிவியல் பட்டங் கள் பெற்றவர்தாமும் மொழி, இலக்கியத்துறைகளில் எழுதுவதே பெருமை என்று கருதித் தாம் தெளிவுபெறாத அத்துறைகளிற் புகுந்து அவற்றிலும் செப்பமின்மையைப் பெருக்கித் தாமும் மதிப்பிழந்து போவதை விட்டுத் தத்தம் துறைகளில் தமக்கு நன்கு கைவரும் புதிய செய்திகளை எழுதுதல் எத்துணைச் சிறப்பாகும்! பல்லவர் வரலாற்றை யும் பாண்டியர் வரலாற்றையுமே பேசிக்கொண்டிராமல், உலக அறிவியல் பெரியார்கள், அருட்பெருஞ் சான்றோர்களின் வாழ்க்கை வரலாறுகளைத் தமிழில் எழுதிக் குவியுங்கள்!

குமுகாயவியல், *(Sociology)* மாந்தவியல், மனவியல் போன்ற துறைகள் எத்தனை எத்தனை!.... அவற்றின் அறிவுச் செல்வங்களை எல்லாம் தமிழுக்கு அள்ளி வழங்குங்கள்! மொழியாக்கத் திறனுடை யோர் மொழியாக்கக் கட்டுரைகளை எழுதுங்கள். சொந்தமாக எண்ணும் திறனுடையோர், சொந்தக் கருத்துகளைக் கட்டுரையாக்குங் கள்! எவ்வாற்றானும் தமிழன்னைக்குப் புத்தணி பூணுமாறு கட்டுரை யாளர்களை வேண்டிக் கொள்ளுகின்றோம்.